இதழ் 7.

தமிழ்ப் பெருமாட்டி.



செப்டம்பர், 1934

[illegible] கே. துரைஸாமி ஐயங்கார் பி.எ.

72
[illegible],834TP
834.1-7
199429

விலை அணா 3.

தமிழ்ப் பெருமாட்டி.

இது 1934ஞு மார்ச் மாதத்திலிருந்து தொடங்கி, ஒவ்வொரு மாதம் 5-ம் தேதியிலும் வெளியாகும் மாதாந்தப் பத்திரிகை. தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஸ்ரீமான் வடூவூர். கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள் பி.ஏ.யால் திருவல்லிக்கேணியில் நிறுவப்பட்டுள்ள ஓரியன்டல் ஹோம் யூனிவர்ஸிட்டி என்னும் தமிழ் ஸ்தாபனத்தின் ஆதரவில் இப்பத்திரிகை நடத்தப்படுகிறது. சென்ற டிசம்பர் மாதத்தில் சென்னையில் கூடிய தமிழ் அன்பர் மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அநுசரித்து, தமிழின் வளர்ச்சியையும், தமிழ் மக்களின் கல்வி அபிவிர்த்தியையும் கருதி இப்பத்திரிகை நடைபெறுகிறது.

வடூவூர். கே. துரைஸாமி ஐயங்காரே இதன் ஆசிரியரா யிருந்து சகல பொறுப்புகளையும் நேரில் வகித்து இதைப் பெரிதும் சிறப்பாக நடத்துகிறார். இதன் பொருட்டே அன்னார் மனோரஞ்சனியிலிருந்து விலகிக்கொண்டிருக்கிறார்.

இதில் சாதாரண நாவலின் பக்க அளவில், அதாவது டபிள் கிரௌன் பதினாறாய் மடிக்கப்பட்ட அளவில், 96 பக்கங்கள் ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் அடங்கியிருக்கும். இப்பக்கங்கள் பெரும்பாகத்திலும், திடும்பிரவேச மகாஜாலப் பரதேசியார் என்னும் மிக விநோதமான ஒரு தொடர் நாவல் எழுதப்பட்டு, பன்னிரண்டு மாதங்களில் முடிவுறும். இவ்வாறு முடிவுறும் நாவலின் விலை மாத்திரம் ரூ. 3-க்குமேல் பெறக் கூடியதாயிருக்கும்.

சமய விளக்கம்

அத்தியாயம்—5

இந்திரன், மோக்ஷம் முதலியவை

முன் அத்தியாயத்தில் நாம் அடையார் தியசாபிகல் சங்கத்தாருடைய அறிகுறிப் படமொன்றை வெளியிட்டு, அதன் கருத்தை ஓரளவு தெரிந்துகொண்டோம். அந்தக் குறியினுள் காட்டப்பட்டுள்ள அறுகோணம் புதனைக் குறிக்கிறதென்பதையும் நாம் உணர்ந்தோம்.

இவ்வாறு புதன் மூலமாய் பிரம்மத்தை அறிய அல்லது அடைய முயற்சிப்பது நமக்குப் புதியதல்ல. நமது வேதங்களில் பிரம்மத்தையடைய சுமார் 32 விதமான மார்க்கங்கள் விவரிக்கப்பட்டு அநுஷ்டானத்தில் இருந்து வந்திருக்கின்றன. ஷை மார்க்கங்கள் பிரம்ம வித்யைகள் என்று குறிக்கப்படுகின்றன. அவைகளுடைய பெயர்கள் அடியில் வருவன: (1) ஈசாவாஸ்ய வித்யை (2) பரமபுருஷ வித்யை (3) ஸத்வித்யை (4) வைச்வாநர வித்யை (5) ஆநந்தமய வித்யை

(6) ப்ராண வித்யை (7) சாண்டில்ய வித்யை (8) ஸம்வர்க்க வித்யை (9) உபகோஸல வித்யை (10) உத்தாலகாந்தர்யாமி வித்யை (11) பூமவித்யை (12) தஹர வித்யை (13) கார்க்யக்ஷர வித்யை (14) மது வித்யை (5) பாலாகி வித்யை (16) மைத்ரேயி வித்யை (17) பஞ்சாக்னி வித்யை (18) ஆதித்ய மண்டலஸ்த ஸத்ய பிரம்ம வித்யை (19) அக்ஷிஸ்த ஸத்ய பிரம்ம வித்யை (20) ஸ்ரீந் நியாஸ வித்யை (21) பரஞ்ஜோதிர் வித்யை (22) நாசிகேத வித்யை (23) அக்ஷரபர வித்யை (24) ஸத்யகாம வித்யை (25) அங்குஷ்ட ப்ரமித வித்யை (26) ஜ்யோதிஷாம் ஜ்யோதி வித்யை (27) உஷஸ்த கஹோள வித்யை (28) ஆகாச வித்யை (29) அந்தராதித்ய வித்யை (30) ப்ரதர்தன வித்யை (31) பர்யங்க வித்யை (32) காயத்ரீ வித்யை, ஆகியவை பிரம்மத்தை அடைவதற்குரிய பல மார்க்கங்களாகும்.

புதன் மூலமாக பிரம்மத்தை அடையும் வித்யை வைச்வாநர வித்யை என்று குறிக்கப்படுகிறது. அது மேலே குறிப்பிட்டுள்ள பெயர்களில் நான்காவ தாகிறது. ஆதி காலத்தில் உபமந்யுவின் குமாரரான ப்ராசீன சாலர் என்பவரும், இன்னும் சில ரிஷிகளும் இந்த வைச்வாநர வித்யையை அநுஷ்டித்து வந்தார்களாம்; ஆனால் அதன் ஸ்வரூபம் அவர்களுக்கு விளங்க வில்லை. அவர்கள் அந்த வித்யையை அநுஷ்டித்தவரான உத்தாலகர்என்பவரிடம்போய்க் கேட்டார்களாம். அவர் அருணருடைய புத்ரராம். (அருணன் என்பது புதனுடைய பெயர்களுள் ஒன்று என்பதை நாம் முன்னரே தெரிந்துகொண் டிருக்கிறோம்.) உத்தாலகர் அது தமக்கும் தெரியவில்லை யென்றும், கேகய தேசத்து அரசனான அசுவபதி அந்த வித்யையை அநுஷ்டித்தாராதலால், அவரிடம் கேட்கலாம் என்றும் கூறினாராம். எல்லா

ரிஷிகளும் அசுவபதியிடம் போய்க் கேட்க, அவர் அவர்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்ததன்றி, அவர்களுக்கு பிரம்ம வித்யையின் நிஜஸ்வரூபத்தை உபதேசித்தனுப்பினாராம். வைசுவாநரன் என்பது வாயுபகவானென்றும், அது பரமாத்மாவின் சரீரத்தில் ஓர் அங்கமென்றும், அதை மாத்திரம் தனியாக உபாசிப்பது போதாதென்றும், எல்லா அங்கங்களையும் சேர்த்து உபாசிப்பதே பிரம்ம வித்யையென்றும் அசுவபதி சொன்னாராம்.

புதன் காற்றிற்கு அதிதேவதை யென்றும், அதுவே அநுமான் என்றும் சிறிய திருவடி யென்றும் குறிக்கப்படுகிறதென்றும் நாம் முன்னர் தெரிந்து கொண்டோம்; அது வைசுவாநரன் என்ற விநோதப்பெயரால் குறிக்கப் படுவதைக் கண்டு ரிஷிகளே மயங்கி பிரமித்துவிட்டார்களென்றால், நாம் எம்மாத்திரம். வைசுவாநரன் என்பதன் பத அர்த்தத்தை நாம் சுலபத்தில் கண்டுபிடிக்கலாம். வை என்பதற்கு நாம் ஏற்கனவே அர்த்தம் கூறினோம். புதனால் கொடுக்கப்படும் வைகுண்டம் என்பதில் உள்ள வை என்ற சொல்லுக்கு, சகலமான செல்வங்களும் வைக்கப்பட்டுள்ள, என்று நாம் பொருள் கூறினோம். அதே கருத்து இதிலும் அடங்கியிருக்கிறது. வை, எல்லாச் செல்வங்களையும் அளிக்கும், சு, சுபனான, வாநரன், குரங்கு வடிவமாக வணங்கப்படுகிறவன், அதாவது, குபேரனான புதன். வாநரன் என்பது சிலேடைச்சொல். மயில் என்பது மை இல் என்னும் மேஷராசியைக் குறிப்பதானாலும், எப்படி அதை மயில் என்னும் பட்சியால் உருவகப்படுத்தி யிருக்கிறார்களோ, அதே போல, வாநரன் என்பதும் யுக்தியால் அமைக்கப்பட்ட பெயர். வாய் என்பது ஆதியில் 'வா' என்றே இருந்ததென்று நாம் ஏற்கனவே தெரிந்து கொண்டோம். உதாரண

மாக, வாத்தி, வாத்தியார் என்னும் சொற்களை ஆராயலாம். வா(ய்) ஆத்தி, வா(ய்) ஆத்தியார் என்ற சொற்கள் வாக்காகிய வீட்டிலிருப்பவர் என்ற பொருளைத் தருகின்றன. இவை புதனையே குறிக்கின்றன. இப்பெயர்கள், வித்யையின் மூலம் நமக்கு வாக்கை உண்டாக்கும் ஆசானுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தமிழில் உவாத்தி என்றும் குறிப்பதுண்டு. உ என்பது விஷ்ணுவின் அம்சம் பொருந்திய புதனையும் சந்திரனையும் குறிக்கும் என்று நாம் முன்னமே தெரிவித்திருக்கிறோம். உ ஆத்தி என்றால், புதனாகிய கிரகத்தில் இருப்பவர் என்பது கருத்து. எனவே வாநரன் என்பதில் உள்ள வா என்பது 'வாய்' என்பதன் குருக்கம். நரன் என்பதற்கு பல அர்த்தங்கள் இருக்கின்றன. அதற்கு அர்ச்சுனன், கடவுள், திருமால், மனிதன் என்ற அர்த்தங்கள் உண்டு. நரவாகனன் என்பதற்கு குபேரன் என்ற பொருளே கொடுக்கப்பட்டிருப்பதை அகராதியில் காணலாம். எனவே, வாநரன் என்பது வாக்கையளிக்கும் புதனாகிய குபேரனைக் குறிக்கிறது. அது குரங்கு வடிவமாகக் காட்டப்பட்டிருக்கிறது. வைசவாநரன் என்னும் பெயரைப்போல நம்மை பிரமிக்கச் செய்யும் இன்னொரு பெயர் ஹயக்ரீவன் என்பது; 'ஹ' என்ற எழுத்து சில இடங்களில் வழக்காறினால் அதிகப்படியாக பல பாஷைகளில் வந்திருக்கிறது. தமிழில், அது என்பது அஃது என்றும் எழுதப்படுகிறது. இங்கு 'ஃ' என்பது 'ஹ்' என்னும் ஓசையையுடையது. அது அதிகப்படியான ஓசை. திராவிடபாஷைகளில் ஒன்றாகிய கன்னடத்தில், 'ஏன்' என்ற வினைச்சொல் "ஹேனு" என்று மாறியிருக்கிறது.

நாம் ஆழ்ந்து கவனிக்குமிடத்து, 'ஹ' என்னும் எழுத்து, இதர பாஷைகளில் 'க' என்பதற்கு பதிலாகவே

பெரும்பாலும் வருகிறது. அகம் என்பதை நாம் அஹம் என்று மாற்றியும் எழுதலாம்; இதை முன்னரே ஓரிடத்தில் சிறிதளவு விளக்கியிருக்கிறோம். 'ஹ' என்பது இன்னொரு விதமாகவும் மாறுகிறது. கன்னட பாஷையில் 'பால்' என்பது 'ஹாலு' என்றும், "பெண்டுத்தி" என்பது "ஹெண்டுத்தி" என்றும், 'பள்ளி' என்பது 'ஹள்ளி' என்றும், 'பூ' என்பது 'ஹூவு' என்றும் மாறியிருக்கின்றன. 'கருப்பனது பள்ளி' என்ற பெயர் 'ஹர்ப்பன ஹள்ளி'யாகிறது. இதில் முதலாவது 'ஹ' 'க'கரமாகவும், இரண்டாவது 'ஹ' பகரமாகவும் மாறியிருக்கின்றன. இந்த உலகத்திலுள்ள எந்த பாஷையிலும் 'ஹ' (H) என்ற எழுத்து வருமானால், அதை 'க', 'ப' என்ற எழுத்துகளில் ஒன்றாக மாற்றவேண்டும்; அல்லது, அது அதிகப்படியான ஓசையென்று விலக்கவேண்டும். ஐரோப்பாக் கண்டத்து பாஷைகளான லத்தின், கிரீக், பிரெஞ்சு, இங்கிலீஷ் முதலிய சகலமான பாஷைகளுக்கும், நம் திராவிட பாஷைகளுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறதென்பதை நான் கண்டுபிடித்திருக்கிறேன். அதை உதாரணங்கள் மூலம் விளக்கினால், பெரிதும் வியப்புண்டாவது நிச்சயம். இங்கிலீஷ் பாஷையிலுள்ள சொற்களை திராவிட பாஷைச் சொற்களாக்க, நாம் சில விதிகளை அநுசரிக்கவேண்டும். அவைகளை இவ்விடத்தில் விரிவாக எடுத்து விளக்குவது பொருத்தமானதாயிராதாகையால், மாதிரிக்கு சில உதாரணங்களை மாத்திரம் இங்கு காட்டுவோம்.

நம் நாட்டில் வேட்டைக்காரர்கள் 'கண்டர்' என்னும் பட்டப் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கிலீஷில் அது 'ஹண்டர்' (Hunter) என்று உச்சரிக்கப்படுகிறது. அயோக்கியனைக் குறிப்பதற்கு இங்கிலீஷில்

ஹீப்போக்கிரீத் (Hypocrite) என்ற சொல் உபயோகப்படுகிறது. இதில் 'ஹீ' என்பது, 'கீ' என்பதற்கு பதிலாக நிற்கிறது. எனவே அது, கீப்போக்கிரித் என்று மாறுகிறது. கீ, கீழான, போக்கிரி, போக்கிரியினுடைய, ஈத்து, மகன். அதாவது, 'கீழ்ச்சாதிப் போக்கிரியின் மகன்' என்பது அதன் கருத்து. இங்கு நாம் இன்னொரு விஷயத்தைக் குறிப்பிடுவோம். 'போக்கிரி' என்ற சொல்லின் கருத்தை யறியாத சிலர் அதைப் 'போக்கிலி' என்று மாற்றி உபயோகப்படுத்துகிறார்கள். போக்கிலி என்றால், போய்த் தங்குமிடம் இல்லாதவன் அல்லது ஏழை என்ற பொருள் உண்டாகிறது. போக்கு என்றால், போகும் வழி, இரி என்றால், விலகிக்கெட்டுப்போகிறவன், அதாவது, 'ஒழுங்கான நெறியைவிட்டுத்தவறான வழியில் போய்க்கெடுகிறவன்' என்னும்பொருள் ஏற்படுகிறது. ஏழை என்பதில் இழிவு இல்லை; பின்னதில் இழிவு ஏற்படுகிறது. இது நிற்க, நாம் மேலே குறித்த இரண்டு உதாரணங்களில், 'ஹ' வென்பது 'க' வென்பதற்கு பதிலாக வந்திருப்பது நிதர்சனமாகத் தெரிகிறது. இங்கிலீஷில் பெட்டைக்கோழி, அதாவது, பெண் கோழி ஹெண் (Hen) என்றே குறிக்கப்படுகிறது. இங்கு 'ஹெ' என்பது 'பெ' என்பதற்கு பதிலாக நிற்கிறது. இங்கிலீஷில் 'ஹ' வென்பது அதிகப்படியான ஓசையாயிருப்பதால், அது உச்சரிக்கப்படாமல் விலக்கப்படுவதை நாம் ஏராளமான சொற்களில் காணலாம். வீடு என்னும் கருத்துடைய சொல்லான 'இல்' என்பது 'ஹில்' (Hill) என்று மாறியிருக்கிறது. இதிலிருந்து இங்கிலீஷ்காரர் ஆதியில் மலைமேல் இருந்தவர்கள் என்று யூகிக்க வேண்டியதாகிறது. தகராறு செய்வதற்கு நாம் 'இகல்' என்ற சொல்லை உபயோகிக்கிறோம். அது இங்கிலீஷில் 'ஹிக்கல்' (Higgle) என்று மாறிப்போய் அதே

கருத்தைத் தருகிறது. அடிப்பதை சாதாரண ஜனங்கள் 'இடு'கிறது என்ற சொல்லால் குறிக்கிறார்கள். 'இரண்டு அடிகள் கொடு' என்பதற்கு பதில் 'ரெண்டு இடு' என்று பாமர ஜனங்கள் சொல்வதுண்டு. இடு என்பது 'ஹிட்' என்று மாறியிருக்கிறது. நாம் ஒரு காரியத்தைச் செய்ய திடமுடையவர்களா யிருந்தால், 'இயல்,' 'ஏல்' என்ற சொற்களை உபயோகிக்கிறோம். "அதைச் செய்ய என்றால் இயலாது, அல்லது, ஏலாது" என்று நாம் கூறுகிறோம். இங்கிலீஷில் 'ஹேல்' (Hale), ஹியல் (Heal) என்னும் சொற்களை சரீர திடத்தைக் குறிக்க உபயோகிக்கிறோம். ஒருவர் நம் வீட்டிற்கு வந்தால், 'ஏளனும்', 'ஏளா' என்ற சொற்களை உபயோகிக்கிறோம். இங்கிலீஷில் அதற்கு 'ஹெய்ள்' (Hail) என்ற சொல்லை உபயோகிக்கிறார்கள். 'சத்தியம்' என்பதும், 'ஆணை' என்பதும் ஒரே பொருளைத் தருவன. 'ஆணை' தவறாமல் நடப்பவர் 'ஆணையர்,' அல்லது, 'ஆணர்'. அவை இங்கிலீஷில், 'ஹாணயர்' (Honour) அல்லது, 'ஹாணர்' (Honor) என்று உச்சரிக்கப்படுகின்றன. போஜனம் செய்வது என்பதற்கு உண்கிறது என்றும் நாம் சொல்லுகிறோம். புசித்தல் என்பதற்கு உண்கர் என்ற வழக்காறும் இருந்ததாகத் தெரிகிறது. அது இங்கிலீஷில் ஹ-ண்கர் (Hunger) என்று மாறி பசியைக் குறிக்கிறது.

இவை யாவும் 'ஹ' என்னும் எழுத்தை முதலில் உடையவை. இந்த வகுப்பில் நாம் இன்னம் ஏராளமான உதாரணங்களைக் காட்டலாமானாலும் விரிவஞ்சி விடுகிறோம். 'ஹ' என்னும் எழுத்தில் ஆரம்பமாகிறவைகளைத் தவிர வேறு வார்த்தைகளில் இவ்வித ஒற்றுமை யில்லையோ என்ற ஐயம் சிலருக் குண்டாகலாம். அவற்றிற்கு நாம் உதாரணங்கள் காட்டுவதானால், அது ஒரு பெரிய அகராதியாகப் பெரு

கிப்போகுமாதலால், இரண்டோர் உதாரணங்களோடு நிறுத்துவோம். எழுதப்பட்ட காகிதத்தை, அல்லது, பனையோலையை நாம் 'ஏடு' என்கிறோம். 'ஏட்டுச்சுரைக்காய்' என்பதில் 'ஏடு' என்பது 'ஏட்டு' என்று இரட்டிக்கிறது. கல்லை நாம் சிலை என்றும் சொல்லுகிறோம். எழுதும் கல் பலகை, சிலை ஏடு என்று சொல்லப்பட்டு, சிலேடு, அல்லது, சிலேட்டு (Slate) என்று மாறியிருக்கிறது. பாம்புபோல் நீண்டிருப்பதான மூங்கில் பாம்பு மரம் (Bamboo tree) என்று இங்கிலீஷில் குறிக்கப்படுகிறது. கள்ளாகிய பாலைக் கொடுக்கும் பனைமரம் 'பால் மர' (Palmyra) என்று குறிக்கப்படுகிறது. பறைதல், பறையல் என்பது 'சொல்லுதல்' என்ற பொருளைத் தருகிறது. கடவுளுக்குத் துதி சொல்லுதல் 'ப்றையர்' (Prayer) என்று குறிக்கப்படுகிறது. திருப்பதி, தேவசகாயம் என்பன போன்ற பெயர்களை இங்கிலீஷில் எழுதும்போது, டிருபடி (Tirupati), டேவசகாயம் (Devasahayam) என்றே எழுதுவது வழக்கம். அதாவது, 'த' என்னும் எழுத்து இங்கிலீஷில் பல இடங்களில் 'ட' என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது. ஆகையால், இங்கிலீஷில் 'ட' (T, D) என்று எழுதப்பட்டிருப்பதை நாம் பல இடங்களில் 'த' என்றே உச்சரிக்கவேண்டும். எனவே இங்கிலீஷ்காரர் 'தின்னல்' என்ற சொல்லை 'தின்னர்' (Dinner) என்று உபயோகித்து, பகற்போஜனத்தைக் குறிக்கிறார்கள். நம் நாட்டில் கீழ் வகுப்பார் இடியாப்பம், புட்டு முதலியவற்றையே ஆகாரமாய் உண்கிறார்கள். வெள்ளைக்காரருடைய ஆகாரம் 'புட்' (Food) என்று சொல்லப்படுகிறது. 'எப்' (f) என்ற எழுத்து சில இடங்களில் 'ப'காரத்திற்காகவும், சில இடங்களில் 'வ' காரத்திற்காகவும் நிற்கிறது. இங்கிலீஷில் போர்ணைகேஷன் (Fornication) என்று ஒரு சொல் இருக்-

கிறது. அதற்கு, ஸ்திரீயும் புருஷனும் கூடுதல் என்பது பொருள். அந்தச் சொல்லில் உள்ள 'போ'வென்பதை 'வோ' வென்றுமாற்றவேண்டும். மாற்றினால்அது 'வோர்ணைகேஷன்' என்று மாறுகிறது. 'ஓர் அணைக்கு எழுன்' என்றால், ஒரு பஞ்சணைக்கு எழுதல், அல்லது, ஓரே படுக்கைக்குப் போகுதல் என்று அர்த்தமாகிறது. அது இங்கிலீஷில் வோரணைக்கேஷன், போர்ணைகேஷன் என்று மாறிப்போயிருக்கிறது. இதேபோல, வேஷம் என்பது வேஷன் என்று மாறி, பேஷன் (Fashion) என்று திரிந்திருக்கிறது. பட்சம் என்பது 'பக்ஷம்'(Buxom) என்று மாறியிருக்கிறது. மினுமினுப்பான என்பதற்கு தேப்போன்னேர் (Debonair) என்ற சொல் உபயோகிக்கப்படுகிறது. இதன் கருத்து "தேய்த்து மெருகு கொடுக்கப்பட்ட பொன்னுக்கு நேரான" என்பதாம். துக்கம், அல்லது, துயரம் என்பதைக் குறிக்க இங்கிலீஷில் மிசெறி, (Misery), மீசெறீமா (Miserima) என்று இரண்டு சொற்கள் இருக்கின்றன. நெருங்கிய பந்து எவரேனும் இறந்துபோனால், நம் நாட்டினர் தங்களுடைய மீசையை எடுத்தெறிந்துவிடுவது வழக்கமல்லவா. துக்கம் என்பது மீசை எறி, அல்லது, மீசெறி என்று இங்கிலீஷ்காரர்களால் குறிக்கப்படுகிறதென்றால், ஆதிகாலத்தில் இந்த வழக்கம் அவர்களிடத்திலும் இருந்ததென்ற அநுமானம் ஏற்படுகிறது. சவச்சடங்கை நாம் 'ஈமம்' என்றும் குறிப்பதுண்டு. அதை 'ஈமா' என்று சுருக்கி, 'மீசெறி'யோடு சேர்த்தால், மீசெறீமா (Miserima) என்ற சொல் உண்டாகிறது. அது அபாரமான துக்கத்தைக் குறிக்கும் சொல்லாம். இவ்வாறு நாம் இங்கிலீஷ் முதலிய எந்த பாஷையின் சொற்களை எடுத்து ஆராய்ந்தாலும், அவற்றிற்குள் திராவிடச் சொற்கள் மறைந்திருப்பது தெரிகிறது. அவற்றை ஆராய ஆராய

நம்மனதில் உண்டாகும் வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் ஈடு அளவு சொல்வது கூடாத காரியம்.

நம் நாட்டிலுள்ளவையும், திராவிட பாஷைகள் என்று குறிக்கப்படுபவைகளுமான கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலியவற்றில் தமிழ்ச்சொற்கள் எப்படி மாறி மறைந்துபோயிருக்கின்றனவென்பதைப் பார்த்தாலே, நமக்கு அபாரமான ஆச்சரியம் உண்டாவது நிச்சயம். அதையும் நாம் இரண்டோர் உதாரணங்களால் விளக்கலாம். தமிழில் 'இந்த' என்பதை 'இ' என்ற எழுத்தாலும் குறிக்கலாம். இந்த மனிதன் என்பதை இம்மனிதன் என்றும் நாம் குறிக்கலாம். இந்த ஆள் என்பதைத் தமிழில் 'இய்யாள்' என்று சொல்வதில்லை. தமிழில் "இந்த ஆள் அங்கு இல்லை" என்பது, மலையாளத்தில் "இய்யாள் அங்ஙிட்டு இல்லா" என்று மாறுகிறது. இ, ஆள், அங்ஙிட்டு ஆகிய மூன்று சொற்களும் தமிழில் உபயோகிக்கப்பட்டாலும், அவை தமிழில் இம்மாதிரியான சேர்க்கையில் உபயோகிக்கப்படுவதில்லை. மலையாள பாஷை பெரும்பாலும் இதே மாதிரியாக, வேறுபட்ட தமிழாகவே இருக்கிறது. அது தமிழர்களுக்கு விளங்காதபடி புதுமாதிரியான சேர்க்கையாயமைந்திருக்கிறது. கன்னட பாஷை இன்னம் விநோதமானது. "கொடுத்து அனுப்பு" என்பதற்குக் கன்னடத்தில் கோட்டு களுஸு என்ற சொற்களை உபயோகிக்கிறார்கள். 'கொட்டு' என்பது 'கொடுத்து' என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கொடுத்தல் என்பதில் அலட்சியம், அவமரியாதை ஆகியவை த்வனிக்கவில்லை. 'கொட்டு' என்பதும், எடுத்துப்போடு என்பதும், சற்றேறக்குறைய ஒரே கருத்துடையவை. "அவ்வளவு பணத்தைக் கொட்டி இந்த உதவி

யற்ற சாமானை வாங்கினான்" என்று சொல்வதில், 'கொட்டி' என்பதில் அசட்டை, விரயம் என்னும் கருத்துகள் த்வனிக்கின்றன. மரியாதையாகக் கொடுப்பதற்கும் கன்னடத்தில் 'கொட்டு' என்ற சொல்லே உபயோகப்படுகிறது. களுஸு என்பது இந்தக் கருத்தை இன்னும் கேவலமாக்குகிறது. கன்னடத்தில் (ழ) என்ற எழுத்து பெரும்பாலும் (ள) என்ற எழுத்தாகவே உச்சரிக்கப்படுகிறது. 'பாழு' என்பது 'ஹாளு' என்று மாறும். களுஸு என்பது கழித்துவிடு, கழிச்சுவிடு, கழிச்சு என்பதிலிருந்து மாறியது. ஒருவர் அரைமனதோடு அல்லது, மனமில்லாமல் பொறுப்பைக் கழித்துவிடுவதற்கு உபயோகப்படும் சொல், கன்னடத்தில் சாதாரணமாய் உபயோகப்படுத்தப்படுகிறது. தமிழில் 'கொட்டிக் கழித்துவிடு' என்பது, தண்டத்திற்கு ஒரு பொருளை ஒருவருக்குக் கொடுத்து, அவருடைய தொடர்பை விலக்கிவிடும் சந்தர்ப்பத்தில் உபயோகமாகிறது. அது கன்னடத்தில் சர்வ சாதாரணமாய் உபயோகிக்கப்படுகிறது. மரியாதையாகக் கொடுப்பதற்கும் கோட்டுகளுஸு என்ற சொற்களேதாம் பிரயோகிக்கப்படுகின்றன. இன்னோர் உதாரணம் கூறுவோம். ஒருவர் இன்னொருவருக்கு ஒரு சங்கதியைச் சொல்லிவிட்டு, "அதற்குள் ஒரு விசேஷமல்லவா இருக்கிறது" என்று கூறி, மறைபொருளாயிருக்கும் ஓர் அம்சத்தை எடுத்து விளக்குவதுண்டு. அந்த சந்தர்ப்பத்தில் கன்னடத்தில், "அதறுளகே ஒந்தல்லவா" என்பார்கள். 'அகம்' என்பது 'உள்' என்ற கருத்துடையது. "அரிய கருத்தைத் தன்னகத்தே அடக்கியபாடல்" என்று சொல்லுமிடத்தில் 'தன்னகத்தே' என்பது, தனக்குள் என்ற பொருளைத் தருகிறது; உள், அகம் இரண்டும் சேர்ந்து 'உளகே' என்று மாறியிருக்கின்றன. 'அதன்' என்பதோடு 'உளகே' சேர, 'அதறுளகே' என்ற

சொல் வருகிறது. 'ஒன்று' என்பது 'ஒந்து' என்று மாறுகிறது. (குன்றைக் குந்து என்பதுபோல) இவ்வாறு கன்னடத்தில் 'அதற்குள்ளே ஒன்றல்லவா' என்பது "அதறுளகே ஒந்தல்லவா" என்று மாறியிருக்கிறது. இம்மாதிரியே கன்னட பாஷை முழுதும் வாய்திருந்தாத மழலைக் குழந்தைகள் பேசுவதுபோல், தமிழருடைய செவிகளுக்குப் புதுமையான இன்பம் பயப்பதாயிருக்கிறது. தெலுங்கு பாஷையின் பிரயோகங்கள் வேறு மாதிரியானவை. 'அதிக தூரம்' என்பதற்கு தெலுங்கர்கள் 'நிண்ட தூரம்' என்பார்கள். 'நீண்ட' என்ற தமிழ்ச் சொல் 'நிண்ட' என்று சுருங்கிப் போய், 'அதிகமான' என்ற பொருளைத் தருகிறது. 'நீட்சி' என்ற கருத்து ஏற்படாத சந்தர்ப்பங்களில்கூட அது உபயோகிக்கப்படுகிறது. உதாரணமாக, 'ஈ நீள்ளு நிண்ட மஞ்சிதி' என்ற தெலுங்கு வாக்கியம் 'இந்த ஜலம் மிகவும் நல்லது" என்ற கருத்தைத் தருகிறது. இதில் நீட்சி என்ற கருத்திற்கு இடமில்லையானாலும், 'நிண்ட' என்ற சொல் 'அதிக' என்ற கருத்தில் உபயோகிக்கப்படுகிறது. "இல்லை" என்பது 'லே' என்றும், "இல்லை அது" என்பது "லேது" என்றும் சுருங்கியிருக்கின்றன. 'கிட்ட' என்பதற்கு 'தக்கர' என்ற சொல் தெலுங்கில் உபயோகப்படுகிறது. 'கரை' என்பதற்கு இடம் என்பது பொருள். 'தற்கரை' என்பது 'அதே இடத்தில்' என்ற பொருளைத் தரும். அது தெலுங்கில் 'தக்கர' வாகியிருக்கிறது. இதே போல 'இக்கடை' என்பது 'இக்கட' என்று வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறது. இம்மாதிரி நாம் எந்த பாஷையின் எந்தச் சொல்லை எடுத்து ஆராய்ந்தாலும், அதற்குள் ஒளிந்திருக்கும் நம் தமிழ் அன்னை சிரித்துக்கொண்டு நம்மோடு உறவுகொண்டாடப் புறப்படுகிறார்.

இதேபோல, வடமொழி வார்த்தைகளை ஆராய்ந்தால், அவைகளுக்குள்ளும் தென்மொழிகளே இருக்கின்றன. இன்னொரு சந்தர்ப்பத்தில் நாம் ஆரியர் திராவிடர் எனப்படுபவர்களைப்பற்றிய உண்மையை ஆராய உத்தேசிக்கிறோமாதலால், அப்போது பாஷா தத்துவங்களை நாம் திருப்திகரமாக விளக்குவோம்.

இனி நாம் சமய ஆராய்ச்சியைத் தொடர்ந்து செல்வோம். 'ஹயக்கிரீவன்' என்ற பெயரின் பொருளைக் கண்டுபிடிக்க முயன்று, 'ஹ' என்னும் எழுத்து, வழக்காறினால் உண்டான அதிகப்படியான ஓசை யென்று கருதி அதை 'அயக்கிரீவன்' என்று மாற்றினோம். அதனுடைய கருத்து 'அயனுடைய பருவதத்திலிருப்பவன்' என்பதாகும். 'அயன்' என்பதற்கு அருகன், தசரதன் தந்தை, பிரமன் என்னும் பொருள்கள் கொடுப்பட்டிருக்கின்றன. அருகன், அருக்கன் என்பவை இந்திரனென்றும், தேவகுரு என்றும் குறிக்கப்படும் வியாழனையும் குறிக்கும், சூரியனையும் குறிக்கும்.

வான சாஸ்திரப்படி வியாழனும், வெள்ளியும் அயனுடைய தொழிலைச் செய்கிறவர்கள் என்பதை ஏற்கனவே நாம் தெரிந்துகொண்டோம். சிலர் சநியையே பிரமனாகக் கருதுகின்றனர். ஏனென்றால், அது இரவின் பிதாவாதலால், அது சிருஷ்டித் தொழிலை நடத்துகிறதென்பது அவர்களது கொள்கை. அதுவன்றி சநி நமக்கு ஆயுள் பலத்தைக் கொடுப்பதாகையால், அதுவே சிருஷ்டி கர்த்தாவான பிரமனுடைய தொழிலை நடத்துகிறதென்பது ஜோசியருடைய கொள்கை. சநியின் உலோகம் இரும்பு; இரும்பை அயம் என்று சொல்வதுண்டு. அயன் என்பது இரும்பை உலோகமாகவுடைய சநி என்ற பொருளைத் தருகிறது. தென்கலை

நாமம் சனியைக்காட்டும் குறி. அயக்கிரீவன் என்றால் இரும்பு மலையிலிருக்கும் சனி என்ற பொருளையும் தருகிறது. ஒரு சாரார் சனியையே வாயு பகவான் என்றும் கருதுகின்றனர்.

இங்கு முக்கியமான ஒரு சந்தேகம் நமக்குண்டாகிறது. தசரதருடைய மூத்த குமாரருக்கு இராமன்என்று பெயர் வைத்தார்களல்லவா. அந்தப் பெயர் அப்போதே புதிதாய் அவருக்காக உற்பத்தி செய்யப்பட்ட பெயரா, அல்லது, அதற்கு முன் பலரால் வைத்துக்கொள்ளப்பட்டு வந்ததான, ஒரு தெய்வத்தின் பெயரா? இராமன் என்னும் சொல்லின் அர்த்தத்தை நாம் ஆராய்ந்தால், அது ஒரு தெய்வத்தின் பெயரா யிருக்கிறதாகையால், அது தசரத புத்திரருக்காகப் புதிதாய் உற்பத்தி செய்யப்பட்டதல்ல வென்றும், அது ஒரு தெய்வத்தின் பெயரென்றும் நாம் அநுமானித்துக் கொள்ளலாம். இராமன் என்பதை நாம் இரு ஆமன் என்று பிரித்து ‘பெரிய பசுமை நிறத்தோன்’ என்று பொருள் கண்டோம்.

திருவாய்மொழியில்,

“பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச்செங்கண்,
அச்சுதா, அமரரேறே, ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே”

என்னும் பாடல், விஷ்ணு பச்சை நிறமான மேனியுடையவர் என்று வர்ணித்திருக்கிறது.

விஷ்ணுவை நீலமேகப் பெருமாள் என்றும் குறிப்பதுண்டு. இராமன் கறுமை நிறமுடையவர் என்று இராமாயணத்தால் நாம் தெரிந்துகொள்ளுகிறோம், அதேபோல கிருஷ்ணனும் கறுப்பு நிறமுடையவர் என்று குறிக்கப்பட்

டிருக்கிறார். இருவரும் விஷ்ணுவின் அவதாரமென்று குறிக்கப்படுபவர்கள்; இருவரும் ஒற்றுமையாகக் கறுப்பு மனிதர்களா யிருக்கவேண்டிய காரணமென்ன? இராமர், இலக்குமணர், சீதை ஆகிய மூவரும் காட்டிற்குச் சென்ற காலத்தில், இராமர் எப்படிப் போனார் என்று கம்பராமாயணப் பாடல் ஒன்று சொல்லுகிறது:

“வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிஜோதியில் மறையப்
பொய்யோ வெனும் இடையாளொடும் இளையானொடும் போனான்]
மையோ, மரகதமோ, மழைமுகிலோ, மறிகடலோ
ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்”

என்று கம்பநாடர் தம் மனதில் பொங்கியெழுந்த உணர்ச்சி வெள்ளத்தை எழுத்துக்கள் மூலம் ஓடவிட்டிருக்கிறார்.

இந்த இடத்தில் கறுப்பான அஞ்சனமைக்கும், மரகதப் பச்சைக்கும், சூல்கொண்ட கறுமேகத்திற்கும், நீலமான கடலுக்கும், இராமனுடைய மேனியின் நிறம் ஒப்பிடப் பட்டிருக்கிறது.

எனவே, அதை நாம் இரு ஆமன் என்று பிரித்து, பசுமை நிறமுடைய பெரியவன் என்று பொருள் கூறியது முற்றிலும் பொருத்தமானதாகவே இருக்கிறது.

ஆயினும், நாம் அதற்கு இன்னொரு பொருளும் கூறலாம். அதாவது, இரா,மன் என்று அதைநாம் பிரித்து, இராத்திரியின் தந்தையான சனி என்று பொருள் கூறலாம். சனியின்

நிறம் கறுப்பானதென்று சில நூல்களும், நீலமானதென்று சில நூல்களும் கூறுகின்றன. இராமனை இராகவன் என்ற பெயராலும் குறிப்பதுண்டு. இரா, அகவன், என்று அதை நாம் பிரிக்கலாம். அதாவது, இரவிற்கு ஆத்மாவாயிருப்பவன் என்ற பொருள் ஏற்படுகிறது. அதுவும் சநியையே குறிக்கிறது. அயன் என்ற சொல் தசரதன் தந்தையின் பெயர் என்றும் நாம் மேலே கண்டோம் அயன் என்பது இரும்பு மலைக் கதிபதியான சநியைக் குறிக்குமென்பதையும் கண்டோம். தசரதர் தமது தந்தையின் பெயரைத் தமது மூத்த புத்திரருக்கு வைப்பது சகஜமாக நடக்கக்கூடிய காரியமே. இராமன் என்ற பெயருக்கு மனதை ரமிக்கச் செய்பவன் என்பது வைதீக வியாக்யானம். சநி இரவில் சிருஷ்டித் தொழிலை நடத்துகிறவனாதலால் இந்தக் கருத்தும் நன்கு பொருந்துகிறது.

எனவே சநியின் பெயர் இராமனுக்கு இடப்பட்டதனால், அதன் நிறமும் இராமன்மீது ஏற்றப்பட்டிருக்கலாமென்றே நாம் அநுமானிக்கலாம். சநியை அயனைக் கருதுவோர் இராமனை அந்த ஸ்தானத்தில் வைத்து, அயனை வழிபடுகின்றனர் என்றும் நாம் யூகிக்கலாம்.

நாம் விளக்க எடுத்துக்கொண்ட அயக்கிரீவன் என்பதற்கு இந்தக் கருத்தின்படி சநி' என்னும் கிரகத்திலிருக்கும் தெய்வசக்தி என்று பொருள் கொள்ள வேண்டும். இல்லாவிடில், அதை வியாழனாக வாகிலும், வெள்ளியாக வாகிலும் கொள்ளவேண்டும்.

அத்தியாயம்—5

இந்திரன், மோக்ஷம் முதலியவை

(தொடர்ச்சி)

நாம் இதுவரையில் விளக்கியவற்றிலிருந்து, பலவிஷயங்களில் நம்மவர்கள் தவறான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. நவக்கிரக தேவதைகளும், அஷ்டதிக்கு பாலர்களும், திரிமூர்த்திகளும், தேவர்களும் வெவ்வேறானவர்கள் என்று பாமர ஜனங்கள் முதல் பெரும்பாலான பண்டிதர்கள் வரையில் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விபரீதக் குளறுபடையில், ஒரு தெய்வத்திற்கு ஒரு வகுப்பார் ஒரு பெயர் கொடுத்து வழிபடுகிறார்கள்; அதே தெய்வத்திற்கு இன்னொரு வகுப்பார் வேறு பெயர் கொடுத்து வழிபடுகிறார்கள். இருவரும் 'உன் தெய்வம் வேறு', 'என் தெய்வம் வேறு', என்று அடித்துக் கொள்ளுகிறார்கள். ஒரு சாரார் பிறைச் சந்திரனைத் தமது மதச்சின்னமாக ஏற்படுத்திக்கொண்டு, அதைத் தம் வீடுகளிலும், கொடிகளிலும், மந்திராக்ஷகளிலும் பதித்துப் பெருமையாக எடுத்துக்கொண்டு ஊர்வலம் போகிறார்கள்; அதே மூன்றாம் பிறையை கணேசர் என்று குறித்து அதற்கு யானையின் முகத்தைக் கொடுத்து, அதை ஊர்வலமாகக் கொண்டுபோனால், பிறைச் சந்திரனை வழிபடுவோர், இந்த விநாயகரை எடுத்துச் செல்வோர்மீது கல் மழை

பொழிந்து, விநாயகரைப் பிடுங்கிப் போட்டுக் காலால் துகைக்கின்றனர். பாஷையின் வேறுபாட்டினாலும், சின்னங்களின் வேறுபாட்டினாலும் ஒருவருடைய கருத்தை மற்றவர் அறியாமல், சிலர் பிறருடைய தெய்வத்தை இழிவுபடுத்துவதாகக் கருதித் தமது தெய்வத்தையே இழிவுபடுத்திக்கொள்கிறார்கள். இவ்வாறு நிறைந்து கிடக்கும் அக்ஞானக் குளறுபடையைப் போக்கும் பொருட்டே நாம் முக்கியமாக இந்த ஆராய்ச்சியை இவ்வளவு தூரம் நடத்திக் கொண்டு வந்திருக்கிறோம்.

இவ்விதமான தவறு பாமர ஜனங்களோடு மாத்திரம் நிற்கவில்லை. அவதார புருஷர்களென்றும், ஒப்புயர்வற்ற மகான்களென்றும் கருதப்பட்டு, அழியாப் புகழ்பெற்று நிலைத்திருக்கும் சமயாசாரியர்கள்கூட சில விஷயங்களில் இந்த வகுப்பில் சேர்க்கத்தக்கவர்களா யிருந்திருக்கிறார்கள் என்பதற்குத் தேவையான சான்றுக ளிருக்கின்றன.

ஒரே ஓர் உதாரணத்தைக் கொண்டு அதை விளக்குவோம். நம் வேதங்களுக்கு ஆறு ஆதாரங்கள் அடிப்படையானவை. அவற்றுள் வான சாஸ்திரம் ஒன்று. வான சாஸ்திரத்தில் வியாழனுடைய அதிதேவதை, அதாவது, வியாழனுக்குமே லிருந்து அதை நடத்தும் தேவதை இந்திரனென்றும், அதன் அடையாளம் நீட்டுப்போக்கான வட்டம் (வடகலை நாமம்) என்றும், அது ஒன்றே ஜீவக்கோள் என்றும், அது ஆகாயத்திற்கு அதிதேவதை யென்றும், அது கால புருஷனாகிய பிரம்மாவின் மூளையென்றும், அது தேவலோகத்தைக் கொடுப்பதென்றும், பரமபதமாகிய மோக்ஷலோகத்தையடைய வியாழன் வழியாகவே ஜீவன் போக வேண்டுமென்றும், அது தங்கம் போன்ற மஞ்சள் நிறமானதென்றும் நாம் வான சாஸ்திரங்களின் மூலம் உணர்ந்து

கொண்டோம். உலகம் உற்பத்தியாகி லயமாகும் கிரமம் சொல்லப்பட்டதில், காற்று முதலிய மற்ற நான்கு பூதங்களும், அவற்றின் அதிதேவதைகளான மற்ற கிரகங்களும் ஆகாயத்தில் மறைந்து போகின்றனவென்பதையும், ஆகாயம் மாத்திரம் மிஞ்சுவதால், அதன் அதிதேவதையான வியாழனாகிய இந்திரன் மாத்திரம் அழியாமல் நிற்கிறானாதலால், அவன் வீயா அழன், அல்லது, அழியாத சுடர் என்று குறிக்கப்படுகிறான் என்றும் தெரிந்துகொண்டோம். இந்திரனே எல்லாவற்றிற்கும் கடைசியில் நிற்பதால், அவனே மோக்ஷத்திற்கு வழி காட்டுகிறவன் என்றும், அவனுடைய அருள் எவனுக்கிருக்கிறதோ அவனே மேலே போகலா மன்றி மற்றவர் பரமபதத்தை அடைவது கூடாத காரியமென்றும் நாம் தெரிந்துகொண்டோம். கௌஷீதகி ப்ராம்மணோபனிஷத் என்னப்படும் முக்கியமான உபநிஷதத்தில் இந்த உண்மை ஒரு சிறிய கதைபோலச் சொல்லப்பட்டிருக்கிறது. திவோதாஸர் என்பவருடைய குமாரரான ப்ரதர்த்தனன் என்பவர் தமது சுத்த வீரத்தனத்தினால் இந்திரனுடைய லோகத்தை யடைய, இந்திரன், அவருக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டானாம். ப்ரதர்த்தனன், "மனிதருக்கு எது ஹிதமான தென்பது உமக்கேதான் தெரிய வேண்டும்; அதை நீரே எண்ணிப் பார்த்து எனக்குக் கொடும்" என்றாராம்.

"பிராணன் என்று சொல்லப்படுவதான பிரக்ஞையோடு கூடிய ஆத்மா நானே. என்னை ஜீவனென்றும், அழிவில்லாதவனென்றும் உபாஸி" என்றானாம் இந்திரன். அந்த உபநிஷதம் பிராணன் என்பதை அடியில் வருமாறு விளக்குகிறது. "ஒரு வண்டிச் சக்கரத்தில் எப்படி வட்டைகள் ஆரத்திலும், ஆரங்கள் நடுக்கூடத்திலும் பொருத்தப்பட்

டிருக்கின்றனவோ, அதுபோல, பூதங்களும் இந்திரியங்களும் ஜீவன்களிலும், ஜீவன்கள் பிராணனிலும் பொருத்தப்பட்டிருக்கின்றன. பிராணன் சர்வக்ஞன்; அவனுக்கு மூப்புமில்லை, அவனுக்கு சாக்காடுமில்லை. அவன் ஆநந்தமயன்; புண்ணியச் செய்கையால் மேன்பாடு, பாபச் செய்கையால் இழிவு என்பது அவனுக்கு இல்லை. ஏனென்றால், அவன் ஒருவனை இவ்வுலகங்களிலிருந்து மேலே உயர்த்திவிட விரும்புவானாகில், அவன் சற்கருமத்தை நாடும்படி செய்கிறான்; ஒருவனைக் கீழே இறக்கிவிட விரும்புவானாகில் அவன் பாபகிருத்தியங்களை நாடும்படி செய்கிறான். எல்லா உலகங்களையும் அவனே ரக்ஷிக்கிறவன். எல்லா உலகங்களுக்கும் அவனே அதிபதி. எல்லாவற்றையும் எல்லோரையும் அடக்கியாள்பவன் அவனே. அவன் என் அந்தராத்மா என்று உபாஸிக்கவேண்டும்.''

என்று அந்த உபநிஷதம் சொல்லுகிறது.

வானசாஸ்திரத்தின்படியும், உபநிஷதங்களின்படியும் இந்த வியக்த ப்ரபஞ்சத்திற்கு இந்திரனாகிய வியாழனே கடைசி அதிகாரி. அதனால்தான் அவன் சர்வக்ஞனான பிரகஸ்பதி என்றும், கால புருஷனது மூளை என்றும் குறிக்கப்படுகிறான். ஆகாயத்திற்கு நாக்கும் ஓசையும் மாத்திரமே இருப்பதாலும், வியாழனாகிய இந்திரன் ஆகாயத்திற்கு அதிதேவதையாகையாலும், நவக்ரக ஸ்தோத்திரத்தில் வியாழன் வாக்பதி என்றும், வாசஸ்பதி என்றும் குறிக்கப்படுகிறான். 'நாக்கிற்கு ராஜன்', அல்லது, 'நாராயன்' என்பது அதன் பொருள். இந்த வியாழ பகவானுக்கு சமீபத்தில், அல்லது, அண்மையில் இருப்பவனாகிய அந்தராத்மா 'நாராய அணன்' என்று குறிக்கப்படுகிறான். இதை உறுதிப்படுத்த இன்னும் ஏராளமான வானசாஸ்திர ஆதாரங்கள் இருக்கின்றன.

ஆனால் இதில் முக்கியமான ஒரு விநோதம் என்னவென்றால், வேதாந்த சூத்ரங்களைச் செய்த வாதராயணரோ, அவைகளுக்கு பாஷ்யங்கள் எழுதிய சங்கரரோ, இராமானுஜர் முதலியவர்களோ, இந்திரன் என்பது வானசாஸ்திரத்தின்படி வியாழனைக் குறிக்கிறதென்றோ, அவன் ஜீவக்கோள் என்றும், இந்த வியக்த ப்ரபஞ்சத்திற்கு முடிவான வாசற்படியில் இருக்கும் வாசவன் அவனே என்றோ கூறவுமில்லை; ஒடி வானசாஸ்திரத் தகவல்களைத் தாங்கள் தெரிந்துகொண்டிருந்ததாகக் காட்டிக்கொள்ளவுமில்லை. இந்திரன் என்பது இன்னாரைக் குறிக்கிறது என்பதை நிச்சயிக்கமாட்டாமல் இருளில் தடவுகிறவர்கள்போல் எல்லோரும் எழுதியிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய நூல்களைப் படிப்போருக்கு எளிதில் விளங்கும்.

இதே காரணத்தினால், நாராயணன் என்னும் பதத்திற்கும் சரியான பொருளை விளக்கமாட்டாமல், முன்னோர்கள் அதற்குப் பலவாறு அர்த்தங்கள் செய்திருக்கிறார்கள். நாரன், அயனன், அல்லது, தீர்த்தத்தி லிருப்பவன் என்பதே சாதாரணமாக வைதிகர்கள் இதற்குச் சொல்லும் வியாக்கியானம். எந்தத் தீர்த்தத்தில் இருக்கிறார் என்றால், அதைச் சொல்லும்போதுதான் விஷயம் பெரிய குளறுபடையாகிவிடுகிறது. முதலை, திமிங்கிலம் முதலியவை தீர்த்தத்திலிருக்கின்றன. கடவுள் தீர்த்தத்தில் இருக்கிறார் என்றால், அது எவருக்கும் உண்மைபோலப் படுவதில்லை; அவரே அந்தராத்மாவென்று கருது என்றால், அதைப் பகுத்தறிவுள்ளவர் ஒப்புக்கொள்ளத் தயங்குவார்களல்லவா. அது தெளிவுபடாத ஒன்றையல்லவா குறிக்கிறது. வான்சாஸ்திரத்தின்படி, இந்திரனாகிய வியாழ பகவானுடைய ஆக்ஷிஸ்தானங்கள் மார்கழி, பங்குனி ஆகிய மாதங்களுக்குரிய தனுர் ராசியும், மீனராசியுமாம். இதை 78-

வது பக்கத்தில் நாம் காட்டியிருக்கிறோம். மார்கழி மாதத்தில் வியாழன் ஆக்ஷி புரிவதனாலேயே, அப்போது வரும் ஏகாதசி முக்கோடி ஏகாதசி யென்றும், அது மோக்ஷப்படியென்றும் குறிக்கப்படுகிறது. வைகுண்டம் என்பதற்கும், பரமபதமென்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் இதை வைகுண்ட ஏகாதசி என்றும் பலர் குறிப்பர். பங்குனி மாதத்தோடு 12 வது இராசி முடிந்து போவதாலும், வியாழன் அந்த இராசியில் ஆக்ஷிபுரிவதாலும், அதுவே தேவயானு என்னப்படும் மோக்ஷ மார்க்கமென்று கொண்டாடப்படுகிறதாகையாலும், அப்போது எல்லாக் கோவில்களிலும் பிரம்மோத்ஸவம் நடத்தப்படுகிறது. பரமபதமாகிய நாராயணனுடைய இருப்பிடம் மீன ராசியில் ஆட்சிபுரியும் வியாழனுக்கப்பால் இருப்பதாக அநுமானித்து, அதையே நாராயணனுடைய இருப்பிடமாகவும் கருதுவதுண்டு. வானசாஸ்திரத்தின்படி மீனராசி சமுத்ர ராசியாதலால், நாராயணன் என்பதை 'நாரன் அயனன்' என்று பிரித்து, தீர்த்தத்தில் இருப்பவர் என்ற பொருளைக் கூறுகின்றனர். அந்த அர்த்தம் ஒரு விதத்தில் பொருந்துகிறதானாலும், அதைச் சொல்லுவோர், வானசாஸ்திரக் கருத்தை எடுத்துப் பொருத்திக் காட்டத் திறமையற்றவர்களாய்த் தவிப்பது பரிதாபகரமான விஷயமா யிருக்கிறது.

வைஷ்ணவ மதாசார்யர்களுள் ஒருவராகிய ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகரால் இயற்றப்பெற்ற அதிகார ஸங்கிரஹம் என்னும் நூலில், மூலமந்திராதிகாரம் என்னும் பகுதியில் நாராயணன் என்பதற்கு வியாக்யானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வசனநடையில் எழுதப்பட்டுள்ள ஒரு நூலிலிருந்து அடியில் வரும் பகுதியை நாம் எடுத்து வெளியிடுகிறோம்:—

“(5) நாராயண என்கிற சொல் நார + அயன என்கிற இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு சொல். நர என்பது நாசமில்லாத என்கிற பொருளைச்சொல்லி, ஸ்வரூபத்தில் மாறுதலில்லாத எம்பெருமானையும் ஜீவனையும் சொல்லுகிறது. அது எம்பெருமானைச் சொல்லும்போது நார என்பதற்கு எம்பெருமானிடமிருந்து உண்டான தத்துவங்கள் என்றும், நரனுடைய ஸொத்துக்கள் என்றும் பொருள். இந்த ஸொத்துக்களில் எம்பெருமானுடைய திருமேனியும், மேன்மையான குணங்களும், இரண்டு விபூதிகளும் அடங்கியிருக்கின்றன. ஜீவன்கள் எம்பெருமானுடைய விபூதியாகையால், அவர்கள் அவனுடைய ஸொத்து, இதனாலும் அவர்கள் எம்பெருமானுக்குச் சேஷபூதர்கள் என்று காட்டப்படுகிறது. நர என்கிற சொல் ஜீவனைச் சொல்லும்போது நார என்பதற்கு ஜீவர்களுடைய கூட்டம் என்று பொருள். இதனாலே ஜீவன்கள் அநேகம் பேர்கள் என்று காட்டப்படுகிறது.

“(6) அயநம் என்கிற சொல்லுக்கு ஆதாரம் என்றும், ஒருவன் அடையவேண்டிய வஸ்துவென்றும், அதை அடைவதற்கு சாதனமென்றும் பொருள். நார என்பதற்கு எம்பெருமானிடமிருந்து உண்டாகும் தத்துவங்கள் என்றும் அவனுடைய ஸொத்துக்கள் என்றும் பொருளாகும்போது, அயநம் என்பதற்கு ஆதாரமென்று பொருள். அப்போது எல்லா தத்துவங்களுக்கும் ஆதாரமானவன் என்று முழுச் சொல்லுக்கும் பொருள். நார என்பதற்கு ஜீவன்கள் கூட்டமென்று பொருளாகும்போது அயநம் என்கிற சொல்லுக்கு மற்ற இரண்டு பொருள்களும் வரும். அப்போது முழுச் சொல்லுக்கும் ஜீவன்கள் அடையவேண்டிய புருஷார்த்தமென்றும்,

அதை அவர்களுக்குக் கொடுக்கும் உபாயமானவன் என்றும் பொருள். இதுவன்னியில் நாரங்கள் எவனுக்கு ஆதாரம், அதாவது — இருப்பிடம் என்று பொருளாகி எம்பெருமான் எல்லாவற்றிலும் இருப்பதைச் சொல்லும். ஆகையினாலே உலக வழக்கப்படி அறிவில்லாதவைகளையும், அறிவுள்ள ஜீவன்களையும் சொல்லும் சொற்கள் எல்லாம் எம்பெருமானையே சொல்லுகின்றன.”

என்பது ஸ்ரீமந்நிகமாந்த மகாதேசிகருடைய வியாக்யானம். இந்த தேசிகர் வைஷ்ணவர்களுள் ஒரு சாரருக்கு மதாசாரியர். ஆகவே நாம் இதில் குற்றங் கண்டுபிடிப்பது பெரிய அபசாரமாகும். வைஷ்ணவர்களில் சுயமாசாரி புருஷர்கள் என்று ஒரு வகுப்பார் இருக்கின்றனர். அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆசாரியர்கள்; அவர்கள் வேறு எவரையும் ஆசாரியராக ஏற்றுக்கொள்வதில்லை. பெரிய ஆசாரிய பதவிக்கு இந்த வகுப்பாரில் இருந்தே பொறுக்குவது பெரும்பாலும் வழக்கம். நாம் இந்த வகுப்பைச் சேர்ந்த பரம்பரையில் வந்தவராதலால், ஷை தேசிகர் நமக்கு ஆசாரியரல்லரானாலும், அவருடைய கவித்திறமையையும் பரந்த ஞானத்தையும், இன்னம் மற்ற யோக்கியதாம்சங்களையும் கண்டு நாம் வியப்படையாமலும், அவரை மனதாரப் புகழாமலும் இருப்பது சாத்தியமானதல்ல.

ஆனால், நாரன் அயனன் என்பதற்கு தீர்த்தத்தில் இருப்பவர் என்று மற்றோர்கூறும் வியாக்யானம், விபக்தமாக இன்ன பொருள்தான் என்பதை உடனே சுட்டிக்காட்டாவிடினும், வேதாங்கமான வானசாஸ்திரத்திற்கு ஓரளவு பொருத்தமுடையதாக அதை நாம் செய்துகொள்ளலாம். தேசிகருடைய வியாக்கியானம் வானசாஸ்திரத்தோடு சம்பந்தப்படுத்தப்படக் கூடாததாயிருக்கிறது.

நாராயணன் என்னும் பெயர், வானசாஸ்திரப்படி, நாராயன் ஆகிய வியாழனோடு (இந்திரனோடு) சம்பந்தப்பட்டது என்பதை ஸ்தாபிக்க பல ஆதாரங்கள் இருக்கின்றன. நாம் 145-வது பக்கத்தில் காட்டியுள்ள 32 விதமான பிரம்ம வித்யைகளில் தஹர வித்யை என்பது ஒன்று. அது நம்மால் கொடுக்கப்பட்ட ஜாப்தாவில் பன்னிரண்டாவதாகிறது. நாம் சிறு பையனாயிருந்த காலத்தில், பெரியோர் தஹர வித்யை என்ற சொல்லை உபயோகிப்பதைக் கேட்கும்போதெல்லாம், தகரக் குவளையோடு பிச்சை கேட்பவருடைய தொழிலையோ, அல்லது, தகரக்கடைக்காரனுடைய தொழிலையோ அவர்கள் குறிக்கிறார்கள் என்று எண்ணி வியப்படைவது வழக்கம். வைதிகர்களான பிராம்மணர்கள் தகரக் கடைக்காரனுடைய வித்யையைப்பற்றி அவ்வளவு சிலாக்கியமாக ஏன் பேசுகிறார்கள் என்று கருதி நாம் பலைத்ததும் உண்டு. பிற்காலத்தில் இதன் தத்துவத்தை அறிந்த பிறகே, அந்த அக்ஞான இருள் நம்மை விட்டு நீங்கியது.

தஹர வித்யை என்பது என்னவென்று சாந்தோக்ய உபநிஷத்திலும், தைத்திரீய நாராயண உபநிஷத்திலும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய இருதயமாகிய தாமரை மொட்டிற்குள் இருக்கும் சூக்ஷ்மமான ஆகாசம் தஹராகாசமென்றும், அந்த ஆகாசத்தையும் அதில் இருக்கும் பரமாத்மாவின் ஜோதியையும் உபாஸிப்பதே தஹரவித்யையென்றும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். ஆனால், இதற்கு தஹரவித்யையென்றும், இந்த ஆகாசத்திற்கு தஹராகாசமென்றும் என்ன காரணத்தினால் பெயர்கள் ஏற்பட்டனவென்பது எவ்விடத்திலும் எவராலும் சொல்லப்படவில்லை. நாம் யூகத்தினாலேயே இதைத்தெரிந்து கொள்ள வேண்டியதாகிறது. தஹரம் என்பது குவளை

செய்யப்படும் உலோகமாகிய தகரம் அல்ல. அரிச்சுவடியின் எழுத்துக்களை நாம் குறிக்கையில் அகரம், இகரம், சகரம், டகரம் என்று குறிக்கிறோமல்லவா. அதேபோல தஹரம் என்பது 'த' என்னும் எழுத்தைக் குறிக்கிறது என்று நாம் கொள்ளவேண்டும். வானசாஸ்திரத்தின்படி நவக்கிரகங்களைக் குறிப்பதற்கு சில சங்கேத எழுத்துக்கள் உபயோகப் பட்டிருப்பதாக நாம் எடுத்துக்காட்டி, அவைகளை 94-வது பக்கத்தில் குறித்திருக்கிறோம். அதை நாம் பார்த்தால் 'தா' என்பது வடநூலின்படி வியாழனைக் குறிக்கும் எழுத்தென்பது தெரியும். வியாழனாகிய இந்திரன் ஆகாயத்திற்கு அதிதேவதை யாதலாலும், அவர் ஜீவக்கோளாதலாலும், நம்முடைய ஜீவனுக்கு உயிர் நிலையாக, நம் இருதயத்திற்குள் நுட்பமான ஆகாசம் பொருத்தப் பட்டிருப்பதாலும், அதைத் தஹராகாசம் என்று நாம் கருதவேண்டும். 'தா' என்ற எழுத்து பிரகஸ்பதியாகிய இந்திரனைக் குறிக்கும் கருத்தோடு ஏராளமான சொற்கள் உற்பத்தியா யிருக்கின்றன. தாத்தாசாரி என்று சில வைஷ்ணவர்கள் குறிக்கப்படுகிறார்கள். தா, ஆத்து, ஆச்சாரி என்பன தாத்தாச்சாரி என்று புணர்ந்திருக்கின்றன. அதாவது, பிரகஸ்பதியின் வீட்டுப் பாம்பரையில் வந்த குருமார் என்ற பொருள் உண்டாகிறது. தாஜ் மகால் என்பது தா ஆஜ் மகால் என்ற சொற்களால் ஆனது. ஆசு என்பது ஆஜ் என்று மாறியிருக்கிறது. இந்திரனுடைய அரண்மனையின் கொலுமண்டபம் என்பது அதன் கருத்து. அது முகல் சக்கரவர்த்தியின் சமாதியிடம்; அவர் இந்திரனுடைய பட்டணத்தின் வழியாக மோக்ஷத்திற்குப் போனார் என்பதைக் காட்ட இது எவ்வளவு பொருத்தமான பெயர். சில முஸ்லீம் துறவிகள்

வைத்துக்கொள்ளும் குல்லா 'தாஜ்' என்று குறிக்கப்படுகிறது. இதுவன்றி, கிறிஸ்தவர்களுடைய பெயர்களில் கூட, இந்தக் கருத்தை நாம் காணலாம். தாவீத், தாவுத் முதலியவை இந்திரனுடைய பிள்ளை, இந்திரனுக்கு உகப்பானவன் என்னும் பொருள்களைத் தருகின்றன. சாந்தோக்ய உபநிஷதத்தில் முதல் ஸ்லோகம் இந்தத் தஹராகாசத்தை அடியில் வருமாறு குறிக்கிறது. "(நம் சரீரமாகிய) இந்த பிரம்ம பட்டணத்தில், ஒரு சிறிய தாமரை மொட்டு போன்ற வாசஸ்தான மிருக்கிறது. அதில் இருக்கும் நுட்பமான தஹராகாசத்தையும், அதற்குள் இருப்பதையும் நாடி தியானிக்கவேண்டும்" என்பது சாந்தோக்ய உபநிஷதத்தின் வாக்கியம்.

தைத்திரீய நாராயணம் அடியில் வருமாறு சொல்லுகிறது:

"இந்தப் பட்டணத்தின் மத்தியில் ஒரு சிறிய தாமரை மொட்டிருக்கிறது. அது குற்றமற்றது. அது பரமாத்மாவின் இருப்பிடம். எவ்வித சஞ்சலமு மற்றதாய் அதற்குள்ளிருக்கும் தஹராகாசத்தையும், அதில் இருப்பதையும் நாம் தியானிக்கவேண்டும்.

"ஆயிரம் தலைகளையுடையவனும், விளங்குகிறவனும், எங்கும் எல்லாப் பொருள்களிடத்திலும் கண்களை உடையவனும், எல்லாவற்றிற்கும் க்ஷேமத்தைச் செய்பவனும், எல்லாப் பொருள்களுக்கும் ஆத்மாவானவனும், அப்படி ஆத்மாவானாலும், அவற்றின் தோஷங்களால் பாதிக்கப்படாதவனும், அழிவில்லாதவனும், மகத்தானவனும், பரமபதத்திலுள்ள மகாப்பிரபுவும் நாராயணனே.

"எல்லாவற்றிற்கும் மேலானவனும், நிரந்தரமாயிருப்பவனும், சகலமுமாய் வியாபித்திருப்பவனும், நாராயணனும் மகாவிஷ்ணுவே.

"இந்த விபூதியெல்லாம் அந்த மகா புருஷந்தான். அவன் அந்தராத்மாவாகையினாலே, இந்த விபூதியானது அவனை யடைந்து ஜீவிக்கிறது. இந்த விபூதியாகிய சகலத்திற்கும் நாயகனும், எல்லா ஆத்மாக்களுக்கும் நாயகனும், ஜனனமரணமில்லாமல் நித்தியமாயிருப்பவனும், ஜீவனென்று சொல்லப்பட்டவனும், சரணமடைந்தவர்களைக் கைவிடாதவனும், நம்முடைய பாரமார்த்திக ஞானத்திற்கெல்லாம் முடிவான பொருளாயிருந்து, முக்கியமாய்த் தெரிந்துகொள்ளப்பட வேண்டியவனும், சகலத்திற்கும் அந்தராத்மாவானவனும், எல்லாவற்றிக்கும் கதியாயிருப்பவனும் நாராயணனே. பரப்ரம்மமும் நாராயணனே. எல்லாவற்றிற்கும் கடைசியான மெய்ப்பொருளும் நாராயணனே. மகத்தான ஆதாரஜோதியும் நாராயணனே. பரமபதத்திலுள்ள ஆத்மாவும் நாராயணனே. இந்த உலகத்தில் காணப்படுவதும், கேட்கப்படுவதுமான எந்தப் பொருளிலும் உள்ளிலும் புறம்பிலும் நாராயணன் வியாபித்திருக்கிறான். அநந்தனென்கிற பெயரையுடையவனும், நாசமடையாதவனும், எல்லா சப்தங்களையும் த்வனிக்கச் செய்கிறவனும், அமிர்த சமுத்திரத்தில் வஸிப்பவனும், சகலத்திற்கும் நன்மை செய்கிறவனும் நாராயணனே.

"கழுத்திற்குக் கீழும், தொப்புளுக்கு மேலும், ஒட்டைச்சாண் நீளத்தில் தாமரை மொட்டுபோன்ற ஹிருதயம் கீழ்நோக்கியதாயிருக்கிறது. அந்த ஹிருதயமே மகத்திற்கும் மகத்தான நாராயணனுடைய வாசஸ்தானம் என்று

நீ கருது. இப்போதே மலரத்தொடங்கும் தாமரை மொக்கிற்கு சரிசமானமான அந்த ஹிருதயமானது எக்காலத்திலும் நரம்புகளோடு தொங்குகிறது. அந்த ஹிருதயத்தினுடைய நடுவில் நுட்பமான துவாரமிருக்கிறது. அந்த துவாரத்தில், எல்லாவற்றிற்கும் பிரபுவானவன் இருக்கிறான். எல்லா இடத்திலும் பரவி வியாபித்திருப்பதான மகத்தான அக்னிதேஜஸ் அந்த ஹிருதயத்தின் மத்தியிலும் இருக்கிறது. அந்த அக்நி அவியாததாயும், ஒலிப்பதாயும், உண்ணப்படுவதைப் பாகுபாடுசெய்து தானே முதலில் உண்பதாயும், உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் உஷ்ணத்தை உண்டாக்குவதாயும் இருக்கிறது. அந்த அக்நியின் நடுவில் அதன் ஜ்வாலை நுட்பமானதாயும், மேல்நோக்கினதாயு மிருக்கிறது. கருத்த மேகத்தின் நடுவில் இருக்கிற, ஒளியுடன்கூடிய மின்னல்கொடி போலவும், நெல் நுனிபோல மெல்லியதாயும், ஸ்வர்ணச் சாயலுடையதாயும், நிகரில்லாததாயும் இருக்கிற அந்த தேஜஸ்ஸினுடைய நடுவில் பரமாத்மாவானவன் இருக்கிறான். அவன் பிரம்மாவுக்கு அந்தராத்மா; சிவனுக்கந்தராத்மா; இந்திரனுக்கு அந்தராத்மா, அவன் சரீரத்தின் பாவதோஷங்களாலும், கர்மங்களாலும் பாதிக்கப்படாமல், சகலத்திற்கு மேலாக நிற்பவன்"

என்பது தைத்திரீய நாராயண உபநிஷதத்தில் உள்ள நாராயண ஸூக்தம்.

எனவே, தஹரவித்யையில் உபாஸிக்கப்படும் தெய்வம் ஆகாயத்திற்கு அதிபதியான இந்திரனென்னப்படும் வியாழனாகிய பட்சி ராஜனும், அவனுக்கு மேலேயுள்ள நாராயணனும் என்பது சந்தேகமறத் தெரிகிறது. வேதங்களில் பெரும்பாலான இடங்களில் இந்திரனே இந்த

ப்ரபஞ்சத்தின் முடிவான வியக்த தெய்வமென்றுகொண்டாடப்படுகிறான். தேவராஜன் என்னப்படுபவனும் இந்திரனாகிய வியாழனே. எனவே நாராயணன் என்பதற்கு வியாழனுக் கணிமையி லிருப்பவன் என்னும் பொருள் எவ்வளவு யுக்தமாகப் பொருந்துகிற தென்பது விளங்கும். பரமபதத்திலுள்ள நாராயணனை இவ்வாறு ஹிருதயத்திலுள்ள தஹராகாசத்தில் ஆவாகனம் செய்து உபாஸிப்பது தஹரவித்யை யல்லவா. அவர் பரமபதத்தில் இருப்பதாகவும், அவர் நான்முகனைப் படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசித்த ஆதிமூலமென்றும் தியானிப்பது இருபதாவதான ஸ்ரீமந் ந்யாஸவித்யை. இவ்விரண்டு வித்யைகளுக்கும் அதிக வித்யாசம் இல்லை. இதுவேதான் பரன் ந்யாஸம் என்று குறிக்கப்பட்டு, வைஷ்ணவர்களால் அநுஷ்டிப்படுகிறது. ந்யாஸம் என்பதும் நேசம் என்பதும் கிட்டத்தட்ட ஒரே கருத்துடைய சொற்கள். பரமாத்மாவாகிய நாராயணனே சகலவிதத்திலும் நமக்கு ஆப்தமித்திரனாகக் கருதி பிரியத்தோடு கூடிய பக்தியைஅவனிடம் சமர்ப்பிப்பதே இதன் இலக்ஷணம்; வானசாஸ்திரத்தில் வியாழன் பல பெயர்களால் குறிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சிலவற்றை நாம் இங்கு குறிப்பிடுவோம:—

ஐயன், பார்ப்பார், பாப்பு, முத்தி, சுத்தக்காரன், பூணூல்காரன், புனிதர், பூரணர், வேதக்காரன், ஆணிமான், வாரணன், வேளாளன், பொன்னன், சிவன், ஆவலோன், ஆமறு, வானோர்மந்திரி, ஆறி, ஆறியன், ஆலோன், அடிகள், அத்தன், ஆசான், ஆசாறி, இறைவன், கடவுள், ஐ, குரவன், கோமான், ஸ்வாமீ, தலைவன், அரசன், தீர்த்தன், தேசிகன், பகவன், பட்டாரகன், பண்ணவன், தங்கள், பதி, புங்கவன், பெருமான், பூசுரன், பிரகஸ்பதி, கம், பரம், பர

மன், ஹிரணிய கர்ப்பன், வேந்தன், ஞானி, பரமேஷ்டி, போதன், மலரோன், வரன், விதி, வேதா, விரிஞ்சன், இறை, பிதகன்

முதலிய பெயர்களால் வானசாஸ்திரம் வியாழனைக் குறிப்பதிலிருந்து, அந்தராத்மாவான பரமபுருஷனுடைய குணாதிசயங்கள் விழாயனிடத்தில்தான் விளங்குகின்றனவென்பது வானசாஸ்திரத்தின் கருத்தென்பது தெரிகிறது. அதுபற்றி, அதையே பரமபதத்திற்குப்போகும் வாயிலாக அமைத்திருக்கிறார்கள். மோக்ஷத்தை நாடும் ஞானிகள் முக்கியமாய் வியாழனையும், புதனையுமே உபாஸிப்பது வழக்கம். இவற்றின் முதலெழுத்துகளான, வி, பு, என்பவை விபு என்றாகின்றன. அதுவும் விராட் என்பதும் ஒரே கருத்தை யுடையவை. சாதாரணமாக குப்பு சாமி என்று சிலர் பெயர் வைத்துக்கொள்வதுண்டு; கு, குருவாகிய வியாழனையும், பு, புதனையும் குறிப்பன. வியாசர் (வி ஆசர்) என்பதும் வியாழனையே குறிக்கிறது. வியாஸாய விஷ்ணு ரூபாய, வியாஸரூபாய விஷ்ணவே என்பதும் கவனிக்கத் தக்கது.

சிலர் அரசமரத்தடியில் நாகத்தின் சிலையை வைத்து வணங்குவதுண்டு. வானசாஸ்திரத்தில் கிரகங்களுக்கு அடியில் கண்டபடி ஸமித்துகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பார்த்தால், அரசமரமும் நாகமும் எதைக் குறிக்கின்றனவென்பது விளங்கும்.

சூரியன் — எருக்கு	வெள்ளி — ஆத்தி
சந்திரன் — முருக்கு	சநி — வன்னி
அங்காரகன் — கருங்காலி	ராகு — அறுகு
புதன் — நாயுருவி	கேது — தருப்பை
வியாழன் — அரசு	

என்பன கவனிக்கத்தக்கவை. அரசு வியாழனைக் குறிக்கிறது.

"ஆத்திசூடி அமர்ந்ததேவனை ஏத்தி ஏத்தித்தொழுவோம் யாமே" என்பது சுக்கிரனைக் குறிக்கிறது.

சாமவேதிகளாகிய சாந்தோக்யர்கள் எருக்கம் இலையையே விசேஷமாய் உபயோகிப்பது வழக்கம்.

அதுவன்றி, அவர்கள் தேவதைகளை ஆவாகனம் செய்யும்போது சூரியனை நடுவிலும், மற்றவைகளை எட்டு திக்குகளிலும் வைக்கிறது வழக்கம். இந்த ப்ரபஞ்சத்தில் சூரியன் மத்தியிலிருக்கிற தென்பதை பிரஷ்யா தேசத்து வானசாஸ்திரியான கோபர்னிகஸ் முதன் முதலில் கண்டு பிடித்ததாக மேல்நாட்டார் எழுதிவைத்திருக்கிறார்கள். இவர் கி. பி. 1473-1543-வது வருஷங்களில் இருந்தவர். சாந்தோக்யர்கள் அநாதி காலத்திற்குமுன் ஸாமவேதத்தை உற்பத்தி செய்தவர்கள். அப்போது முதலே சூரியன் மத்தியிலிருப்பவன் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எருக்கை இலையைப் பிரதானமாய் உபயோகிப்பதிலிருந்தும், இவர்கள் சூரிய வம்சத்தார் என்று நாம் நிர்ணயிக்கலாம்.

வானசாஸ்திரத்திலுள்ள இன்னம் சில முக்கியமான தகவல்களை நாம் காட்டி விளக்குவோம் :—

	தோற்றம்	வாகனம்	சுவை	சுபாவம்
சூரியன்	கிழத்தோற்றம்	ரதம்	கசப்பு	குரூரத்தன்மை
சந்திரன்	பாலன்	முத்து விமானம்	உப்பு	ஸௌமியம்
செவ்வாய்	கௌமாரர்	அன்னம்	கசப்பு	குரூரம்
புதன்	பாலர்	குதிரை	அறுசுவை	ஸௌமியம்
வியாழன்	யௌவனம்	யானை	மதுரம்	ஸௌமியம்
வெள்ளி	நடுவயது	கழுகு	புளிப்பு	ஸௌமியம்
சநி	கிழவன்	காக்கை	துவர்ப்பு	குரூரம்
ராகு	"	ஆடு	புளிப்பு	குரூரம்
கேது	"	சிங்கம்	புளிப்பு	குரூரம்

தேகாரோக்கிய தத்துவம்

தேகாரோக்கிய தத்துவம்

III. ஜீரணகோசம் அல்லது ஊண்மயகோசம்.

நாம் தசை, எலும்பு முதலியவற்றால் எந்த அற்பக்காரியத்தைச் செய்தாலும், அல்லது, மனதால் எண்ணமிட்டாலும், அந்தப் பாட்டினால், நம் சரீரத்தில் சில வஸ்துக்கள் கெட்டுப்போய், விஷ வஸ்துக்களாக மாறிப்போகின்றன. அவை உடம்பை விட்டு வெளிப்படாதிருந்தால், கெடுதல் உண்டாகிவிடுமாதலால், அவை, நமது நாசித்துவாரங்கள், தோலிலுள்ள மயிர்க்கால்கள், சிறுநீர்த் துவாரம் முதலியவற்றால் வெளிப்பட்டுப் போகின்றன. அவ்வாறு ஏற்படும் தேய்வை செப்பனிடுவதற்காக (1) புதிய காற்று, (2) தண்ணீர் (3) ஆகாரம் முதலியவற்றை நாம் உட்கொள்ளுகின்றோம்.

இம்மூன்றில் ஒவ்வொன்றும் இன்றியமையாததாகையால், இவை யில்லாவிடில், நாம் இறந்துபோவது திண்ணம். ஆகவே, இவைகளைப் போதிய அளவில் ஒழுங்காக நாம் ஏற்றுக்கொள்ளாவிடில், நம் தேகாரோக்கியம் கெட்டுப் போவதும் நிச்சயம். புதிய காற்றை நாம் நாசித் துவாரங்களின் மூலம் சுவாசித்துக்கொண்டே இருக்கிறோம். அதை,

நாம் சுவாசகோசத்தைப்பற்றி விரிவாகப் பேசுங்கால் நன்கு விளக்குவோம்.

ஆகாரமும், தண்ணீரும் வாயின் மூலமாக நம் சரீரத்திற்குள் செலுத்தப்படுகின்றனவென்பதை நாம் கூறுவது மிகையாகத் தோன்றினாலும், அவைகளை நாம் உட்செலுத்திய பிறகு, அவை எந்தெந்த வழியாகச் சென்று எப்படி உடம்போடு சேர்ந்துகொள்ளுகின்றனவென்பதைப்பற்றி நாம் அதிகமாகத் தெரிந்துகொள்வதுமில்லை; அதைப்பற்றி கவலைப்படுவதுமில்லை; மனதால் நினைப்பதுமில்லை. பிறகு ஆசனத் துவாரம் முதலியவற்றால், மலம் முதலிய கெட்ட வஸ்துக்கள் வெளிப்படுவதை மாத்திரம் நாம் காண்கிறோம். இவ்விரண்டிற்குமிடையில், ஆகாரம், தண்ணீர் முதலியவை எந்தெந்த வழியாகச் செல்கின்றன, எவ்வெவ்விதமாக மாறுகின்றனவென்பன போன்ற தகவல்கள் ஜீரணகோசம் அல்லது ஊண்மயகோசம் என்பதில் குறிக்கப்படுகின்றன.

நமது வாய் முதல் ஆசனத் துவாரம் ஈறாக உள்ள வழியை இங்கிலீஷில் அலிமேன்டரி கனால் (Alimentary Canal) என்று குறிக்கிறார்கள். அதை நாம் ஊண்கால்வாய், அல்லது, அன்னாசய வாய்க்கால் என்று குறிப்பிடலாம். இதிலிருந்து, அது ஒரு முழ நீளமுள்ள ஒரு குழாய் என்று கருதுவது தவறு. ஆனால், நாம் பேதி மருந்தை உட்கொண்டு, அதிகமான மலப்போக்கினால் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கையில், நாம் கஞ்சியையோ சாதத்தையோ உட்கொண்டால், அது இரண்டொரு நிமிஷ காலத்தில் அதே நிலைமையில் கீழ்வழியாக வெளிப்பட்டு விடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அதிலிருந்து, நமது மேல் வாய்க்கும் கீழ் வாய்க்கும்நேரான வழியிருக்கிற

தென்பதை நாம் சுலபத்தில் அநுமானித்துக் கொள்ளலாம்; ஆனால் இந்த அன்னாசய வாய்க்கால் சுமார் முப்பதடி நீளமிருக்கிறது. மேல்வாயிலிருந்து கீழ் வாய் வரையில் உள்ள தூரத்தை, நாம், உடம்பின் வெளிப்பக்கத்தில் அளந்தால், அது சுமார் இரண்டடி நீளம் தேறலாம்; இதைப்போல பதினைந்து மடங்கு 'நீளம் அந்தக் கால்வாய் இருக்கவேண்டுமானால், அதன் பெரும்பாகமும் சுருள் சுருளா யிருக்கவேண்டுமென்பது சுலபத்தில் அநுமானித்துக் கொள்ளத் தக்கதாகும்.

இந்த ஜீரணகோசத்தைக் காட்டுவதற்கு IV என்ற இலக்கமிடப்பெற்ற படமொன்றை இரண்டாவது சஞ்சிகையில் (அதாவது 32-வது பக்கத்திற்குப் பின்னால்) வெளியிட்டிருக்கிறோம். அதன் மேல்நுனி நம் வாயிலிருந்து ஆரம்பமாவதாய்க் காட்டப்பட்டிருக்கிறது. அடியில் கூராய் முடியும் பகுதியே ஆசனவாய். இவையிரண்டிற்கும் இடையில் உள்ளதான மொத்தப் பகுதியே ஜீரணகோசம் அல்லது ஊண்கால்வாய் என்று குறிக்கப்படுகிறது.

நாம் உண்ணும் உணவு ஜீரணமாய், நம் உடம்பின் தாதுக்களாய் மாறுவதற்குள் அது ஆறு இடங்களில் தங்கி மண்டகப்படி நடத்தப்பெறுகிறது. அந்த ஆறு பகுதிகளையும் நாம் மேற்படிப் படத்தின் உதவியால் எளிதில் தெரிந்து கொள்ளலாம். முதலாவது பகுதி வாய் (1), இரண்டாவது பகுதி, தொண்டையிலிருந்து வயிறுவரையில் சுமார் பத்தங்குல நீளம் நீண்டுள்ள குழாய் (2), இது இங்கிலீஷில் கல்லெட் (Gullet), அல்லது, ஈசோபேகஸ் (Esophagus) என்று குறிக்கப்படுகிறது. மூன்றாவது பகுதி இரைப்பை (3), இது நம் வயிற்றிற்குள் இடது பக்கத்தில் இருக்கிறது. இந்த இரைப்பையின் வடிவம் ஒரு முந்திரிக்கொட்டை; எருக்

கங்காய், அல்லது, ஒரு பரதேசியின் திருவோடு முதலியவற்றின் வடிவத்தைப்போல் இருக்கிறது. நாம் விழுங்கும் ஆகாரம் முழுதும் இந்தப் பைக்குள்ளேதான் போய்த் தங்குகிறது. இந்த இரைப்பை நீட்டுப்போக்காக முட்டை வடிவமாய் அமைந்திருக்கிறது. அது நீட்டுப் போக்கில் சுமார் பத்தங்குல நீளம் இருக்கிறது. இந்த நீட்டுப்போக்கில் ஒரு பக்கம் அகன்றதாயும், இன்னொரு பக்கம் குறுகியதாயும் இருக்கும். அகன்ற பக்கம் நம் வயிற்றின் இடப்புறத்திலும், குறுகிய பக்கம் வலப்புறத்திலுமாய் அமைந்திருக்கின்றன.

வலப்புறத்தில் உள்ள குறுகிய பக்கத்திலிருந்து அது மறுபடி குழாயாக மாறுகிறது; அந்தக் குழாய், சற்றேறக்குறைய, ஒரு லோட்டாவின் காதுபோலக் காணப்படுகிறது. அதை இங்கிலீஷில் டுவோடனம் (Duodenum) என்று குறிக்கிறார்கள். இது நான்காவது அந்தஸ்தாகிறது. நம் ஈரல் குலை, நுரையீரல் ஆகிய இரண்டு ஜீவாதாரமான உறுப்புகளிலிருந்தும் வரும் பித்தநீர், குழாய்களின் மூலம் இந்த டுவோடனத்தில் தான் வந்து ஆகாரத்தோடு சேருகிறது. இந்த டுவோடனம் என்னும் கைப்பிடி சற்று கீழே இறங்கி சிறிய குடலாக மாறி சுருள் சுருளாய்ச் சுருண்டிருக்கிறது. (5), அந்தச் சுருளை நீட்டினால் அது மாத்திரம் சுமார் இருபதடி நீளம் தேறும்; இந்தக் குடலுக்குள் வழியிருப்பதால், ஆகாரம் இந்த இருபதடிக்குள்ளும் நுழைந்து போகிறது. இந்தச் சிறுகுடல் இங்கிலீஷில் ஸ்மால் இன்டேஸ்டைன்ஸ் (Small Intestines) என்று குறிக்கப்படுகிறது. இந்த சிறுகுடல் பெரிய குடலாக மாறி, தலைகீழாய்த் திருப்பப்பட்ட 'ப' என்னும் எழுத்தைப்போன்ற வடிவமுடையதாய், சிறுகுடலின் சுருள்களை யெல்லாம் வளைத்துக்கொண்டு அடியில் போய் ஆசனவாயாக முடிகிறது (6). இந்தப் பெரிய குட-

லின் அடிப்பாகத்தில் பை விரிவாயிருப்பதால், மலம் அதில் தேக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்த ஜீரணகோசம் 6 வகையான உறுப்புகளாய் மாறியமைந்து, ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொருவிதமான வேலையைச் செய்கிறது.

(1) <u>வாய்.</u>

நமது வாய்க்கும் மூக்கிற்கும் சம்பந்தமிருக்கிறதென்பது சிலருக்கு வியப்பை யுண்டாக்கலாம். நாம் ஏதேனும் காரமான வஸ்துவை உண்ணும்போது திடீரென்று தொண்டையிலிருந்து மூக்கிற்குள் நெடி ஏறிக்கொண்டு நம்மை உபத்திரவிப்பதிலிருந்தும், சுருட்டுப் பிடிப்போர் வாயால் வாங்கும் புகையை மூக்கால் விடுவதிலிருந்தும் வாய்க்கும் மூக்கிற்கும் சம்பந்த மிருப்பது நன்கு விளங்கும். ஆனால், அப்படி ஏற்பட்டிருக்கும் சம்பந்தம் மிக விசித்திரமா யமைந்திருக்கிறது.

நமது நாசி நம் வாய்க்கு மேல் இருப்பதிலிருந்து, நாசித்துவாரங்கள் நம் கழுத்தின் பின் புறமாய்ப் போகிறதென்றும், ஆகாரக்குழாய் (கல்லெட்) முன்னால் இருக்கிறதென்றும் நினைப்பது தவறு. அதுவன்றி, நாம் பேசும்போதும், பாடும்போதும் உண்டாகும் ஓசை ஆகாரக்குழாயிலிருந்து வருகிறதென்று நினைப்பதும் தவறானது. நமது கழுத்தில் முன்னும் பின்னுமாய் இரண்டு குழாய்கள் இருக்கின்றன. முன்னால் இருப்பது குரல் பெட்டி (Voice-Box) என்று இங்கிலீஷில் குறிக்கப்படுகிறது. அதை நாம் குரல் வளை, அல்லது, குரவளை என்கிறோம். எலியின் துவாரத்தை எலிவளை யென்று சொல்லுகிறோமல்லவா. அதுபோல, குரலோசை உண்டாகும் குழாய் குரல்வளை என்று குறிக்கப்படுகிறது. அது கழுத்தின் முன் பக்கத்தில் இருக்கிறது. அதற்

குப் பின்னால் இருப்பதே ஆகாரம் போகும் குழாய். இவை இரண்டும், நம் வாய்க்குப்பின் புனல் போல் அகன்றிருக்கும் தொண்டையிலிருந்து ஆரம்பமாகின்றன. நமது நாசித்துவாரம் அங்கே வந்து சேருகிறது. அப்படியானால் நாம் சதாகாலமும் மூக்கினால் இழுத்துக் கொண்டிருக்கும் காற்று தொண்டைக்குள் போய் அங்கிருந்து கீழே இறங்கும் இரண்டு குழாய்களின் வழியாகவும் போகின்றதா என்ற ஐயம் எவருக்கும் உண்டாகலாம். அதுவன்றி, நாம் வாயால் உண்ணும் ஆகாரம், தண்ணீர் முதலியவை ஆகாரப் பையின் வழியாய்ப் போவதோடு குரல்வளையின் வழியாகவும் போகின்றனவா என்ற சம்சயமும் உண்டாவது சகஜமே. ஆனால், அப்படி யெல்லாம் காரியம் நடப்பதில்லை. அதற்கு, இரண்டு யுக்திகள் செய்யப்பட் டிருக்கின்றன. தொண்டையிலிருந்து கழுத்திற்குள் இறங்கும் குழாய்களில் முன்னால் இருக்கும் குரல்வளை எப்போதும் திறந்தே இருக்கிறது; பின்னால் இருக்கும் ஆகாரக்குழாய் சப்பையாய் ஒட்டிப்போய் வழியில்லாதபடி மூடிக்கொண்டிருக்கிறது. இதன் காரணம் பிரத்தியக்ஷமாய்த் தெரியக்கூடியதே. நம் நாசித்துவாரங்கள் வெளியுலகத்தி லுள்ள புதுக்காற்றை ஸதாகாலமும் உள்ளே இழுத்து, குரல்வளையின் மூலம் நம் மார்பின் முன் பக்கத்தில் உள்ள சுவாசத் துருத்திகளுக்குள் அனுப்பிக்கொண்டும், அங்கிருந்து அதே வழியாக வரும் விஷக் காற்றை எப்போதும் வெளிப்படுத்திக்கொண்டும் இருப்பதவசியமாதலால், குரல்வளைக் குழாய் எப்போதும் திறந்தபடியே இருக்கிறது. நமக்குத் தேவையான ஆகாரம், தண்ணீர் முதலியவைகளை நாம் நெடுநேரத்திற்கு ஒரு தரமே உட்கொள்ளுகிறோமாதலால், அந்தக் குழாய் மூடிக்கொண்டு சப்பையா யிருக்கிறது. நாசித் துவாரங்களால்

உள்ளே போகும் காற்று ஆகாரக் குழாயைத் திறந்து கொண்டு உட்புகுவதற்கு சக்தியற்றதா யிருக்கிறது. எனவே, நம் வாய்க்குமே லிருக்கும் நாசித்துவாரத்தின் தொடர்ச்சி தொண்டைக்குக் கீழ், முன்னால் வந்துவிடுகிறது.

ஆனால் குரல்வளைக்குள் ஆகாரம் தண்ணீர் முதலியவை நுழைந்துவிடாதபடி, அதன் வாயில் தசையினால் மெத்தைபோல் ஒரு மூடி வைக்கப்பட்டிருக்கிறது. நாம் எதையேனும் வாயில் போட்டு விழுங்கும்போது, அந்த மூடி குரல்வளையின் துவாரத்தை மூடிக்கொள்ளுமாதலால், ஷை வஸ்து ஆகாரக்குழாயில் போய் முட்டுமாதலால், அது மேல் பக்கத்திலிருந்து திறந்துகொண்டே ஷை வஸ்துவைக் கீழே தள்ளிக்கொண்டு போகும். அவ்வாறு ஆகாரம் தண்ணீர் முதலியவை பின்புறக் குழாயின் வழியாய் உள்ளே போய்க் கொண்டிருக்கையில், முன் புறத்திலுள்ள குரல்வளையின் வழி அதன் மூடியால் மூடப்பட்டிருக்குமாதலால், அப்போது சுவாசம் நிறுத்தப்பட்டிருக்கிறது. தண்ணீரை ஒவ்வொரு வாய் விழுங்கும்போது, இடையிடையில் விட்டு விட்டுப் பருகுவது, அப்போது குரல்வளையின் மூடியைத் திறந்து திறந்து காற்றை வெளிப்படுத்தி உள்ளே வாங்கிக் கொள்ளும்பொருட்டே யாகும்.

நாம் நமது ஆகாரத்தை ஜீரணித்துக்கொள்ளும் விஷயத்தில் நமது பற்கள் நமக்கு எவ்வளவு தூரம் உதவி செய்கின்றன வென்பதை நாம் ஏற்கனவே . ஓரளவு தெரிந்துகொண் டிருக்கிறோம். நாம் பற்களை ரொம்பவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றினால் தான், நமது ஜீரணம் ஒழுங்காக நடைபெறுமென்றும் முன்னரே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

நாம் உண்ணும் ஆகாரத்தை நன்றாக வெட்டி நசுக்கி மென்று மையாக்குவதற்குத் தக்கபடி நான்கு வகையான பற்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவ்வாறு பற்கள் வேலை செய்யும்போது, முக்கியமாய் மோவாய் எலும்பே மேலும் கீழுமாய் நகர்ந்து, கீழ் வரிசைப்பற்கள் மேல்வரிசைப் பற்களில் முட்டுவதால், இடையில் இருக்கும் வஸ்துக்களை வெட்டித் துண்டாக்கி நசுக்குகிறது. மோவாய் எலும்பிற்கும், மேல் பாகத்திலுள்ள எலும்பிற்கும் நடுவில் உள்ள தசைகள் சுருங்கிச் சுருங்கி நீளுவதால், அவ்வாறு மோவா யெலும்பு ஆகாரத்தை மெல்லும் வேலையைச் செய்கிறது. அவ்வாறு நசுக்கப்பட்ட ஆகாரம் உமிழ்நீரோடு சம்பந்தப்பட்டு இளக லாய்விடுவதால், நாக்கும் கன்னங்களும் அசைந்து அதை ஒன்றுசேர்த்து வாய்க்குள் தள்ளுகின்றன. அப்போது வாயின் மேல் மச்சு உயர்ந்து கொள்ளுகிறது; உள் நாக்கின் இரண்டு பக்கங்களும் அழுத்தி ஆகாரத்தைத் தொண்டைக்குள் புகுத்தி விடுகின்றன. தொண்டையிலுள்ள தசைகள் சுருங்குவதால் அதை ஆகாரக்குழாயில் தள்ளிவிடுகின்றன.

ஜீரணகோசக் கால்வாய் முடிய, அதாவது, மேல் வாய் முதல் அடிவாய் வரையில் உள்புறம் முழுதும் வழுவழுப்பான ஜவ்வுத்தோல் போர்த்தப்பெற்றிருக்கிறது. நம் உதட்டைப் பிதுக்கினால், உள் பக்கம் மழமழப்பாயும், நீர்க் கசிவுடையதாயும், மினுமினுப்பாயும் இருப்பது போலவே இந்த ஜவ்வு அடிவாய் வரையில் இருக்கும். இதை இங்கிலீஷில் மியூகஸ் மெம்ப்ரேன் (Mucus Membrane) என்று குறிக்கிறார்கள். ஆகார வஸ்துக்கள் சுலபமாய் நகருவதற்கு அநுகூலமாய் இவ்வித ஜவ்வு அமைக்கப் பட்டிருக்கிறது.

இதுவன்றி, வாயில் உமிழ்நீர் ஊறுவதற்கு, ஆறிடங்களில் ஊற்றுக்கண்கள் பொருத்தப்பட் டிருக்கின்றன. மோவாய் எலும்பு காதுகளுக்கடியில் மேல்எலும்போடு சேர்க்கப் பட்டிருக்கு மிடத்திற்கு மேல் ஒவ்வொரு பக்கத்திற்கு ஒவ்வொன்றாய் இரண்டு ஊற்றுகள் இருக்கின்றன.

மோவாயின் எலும்பு இரண்டு பக்கங்களிலும் மடங்கி உயர்ந்திருக்கும் கோணங்களுக்குள் இரண்டு ஊற்றுக்களும், நாக்கின் கீழ் இரண்டு ஊற்றுகளும் ஆக ஆறு ஊற்றுக்கண்கள் இருக்கின்றன. இவ்வூற்றுத் தலங்களை இங்கிலீஷில் களண்ட் (Gland) என்று குறிக்கிறார்கள். ஒவ்வோர் ஊற்றிலிருந்தும் உற்பத்தியாகும் ஜலம் ஒவ்வொரு கால்வாயின் மூலம் வாய்க்குள் வந்து சேருகிறது. இரண்டு காதுகளின் அடியிலும், மோவா யெலும்பின் இரண்டு முடக்குகளிலும், நாக்கின் கீழ் இரண்டிடங்களிலும் இருக்கும் மூன்று ஜதை உமிழ்நீர் ஊற்றுகளும் இங்கிலீஷில் முறையே பராடிட் களண்ட் (Parotid gland), ஸப்-மாக்ஸிலரி களண்ட் (Sub-Maxillary gland), ஸப்-லிங்குவல் களண்ட் (Sub-lingual gland) என்று குறிக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஊற்றுக்கண்ணிலும் தேன்கூடுகளி லிருப்பது போன்ற நுட்ப நுட்பமான அறைகள் இருக்கின்றன. அவைகளுக்குள் மயிரிழை போன்ற இரத்தக்குழாய்கள் ஏராளமாகப்பொருத்தப் பட்டிருக்கின்றன. அவைகளின் மூலம் வரும் இரத்தத்திலிருந்தும் ஷெ சில அறைகளுக்குள் உள்ள இதர வஸ்துவின் சேர்க்கையாலும் உமிழ் நீர் உற்பத்தி செய்யப்பட்டு கால்வாய் மூலம் வாய்க்குள் கசிகிறது. இக்கால்வாய் 2 அங்குல நீளமிருக்கும். இவ்வாறு வரும் உமிழ்நீர் இங்கிலீஷில் சலவா (Saliva) என்றும், உமிழ் நீர் ஊற்றுகள் சலவறை களண்ட் (Salivary gland) என்றும் குறிக்கப்படுகின்றன.

இவ்வாறு ஆறு ஊற்றுகளிலிருந்தும் வரும் உமிழ்நீரன்றி, வாய் முழுதிலும் இருக்கும் மழமழப்பான ஜவ்விலிருந்து பிசுக்கோடு கூடிய ஒரு விதப் பசைநீரும் சொற்ப அளவில் உற்பத்தியாகி ஷெ உமிழ்நீரோடு கலந்து கொள்ளுகிறதாகையால், நாம் வாயைத் திறக்கும் போது உமிழ்நீர்; சர்க்கரைப் பாகுக் கம்பி போல் நீண்டுகொள்ளுகிறது. அதுவன்றி, அவ்விதமான பிசுக்கில் காற்று சம்பந்தப்படுவதால், சிறுசிறு குமிழிகள் உண்டாகின்றன. உமிழ் நீரில் பற்றைலன் (Ptylin) என்னும் ஒரு வஸ்து விருக்கிறது. புரைமோர் பாலை எப்படித் தயிராவும் ஏடாகவும் மாற்றுகிறதோ, அது

போல, இந்தப் பற்றைலன் மாப்பதார்த்தங்களுக்கு தித்திப்பை ஊட்டி, அவற்றிற்கு சர்க்கரையின் தன்மையை உண்டாக்குகிறது. நாம் தோசையை வாயில் போட்டு நெடு நேரம் மென்று கொண்டேயிருந்தால், அதிலுள்ள மாப் பதார்த்தங்களில் சில பாகம் சர்க்கரைபோல் மாறி சுலபத்தில் தண்ணீரில் கரையக்கூடியதாகிவிடுகிறது.

வாயில் ஆகாரத்தைப் போட்டாலும், அல்லது, நல்ல உணவைப் பார்த்தாலும், அதன் மணத்தை உணர்ந்தாலும், அல்லது, அதை மனதால் நினைத்தாலும், வாயில் ஜலம் ஊறத் தொடங்குகிறது. இது ஸ்பரிச நாடிகளின் உதவியால் உண்டாகிறது. கண், நாசி, வாய் முதலிய இடங்களிலுள்ள நாடிகள் உடனே மூளைக்குச் செய்தியனுப்ப, அங்கிருந்து உண்டாகும் சலனம் உமிழ் நீர் ஊற்றுகளுக்கு உடனே பரவுவதால், தண்ணீர் ஊறுகின்றது. அங்கு வரும் இரத்தக் குழாய்கள் விரிந்து அதிக இரத்தத்தைச் சுரக்கின்றன. அதனால் தண்ணீர் ஊறியபடி இருக்கிறது. மழமழப்பாயிருக்கும் பதார்த்தங்களை விட, காய்ந்து கெட்டியாயிருக்கும் பதார்த்தங்களை மெல்லுவதால், உமிழ் நீர் பெருவாரியாக வாயில் ஊறுகிறது. உதாரணமாக, முறைப்பாயிருக்கும் வறுவல் பதார்த்தங்களை மெல்லும் போது உண்டாகும் உமிழ் நீரில் கால் பங்களவுதான், 'பால்', இளக்கமான சோறு முதலியவற்றை உண்ணுகையில் உண்டாகும். உமிழ் நீர் காரக்ஷாரமான (Alkaline) தன்மையுடையது. வாயில் உண்டாகும் காரக்ஷாரமான இந்த ஜலம் போதிய அளவு ஆகாரத்தோடு சேர்ந்து இரைப்பைக்குள் போனாலன்றி, அவ்விடத்தில் உண்டாகும் காஸ்டிரிக் ஜ்யூஸ் (Gastric Juice) என்னும் இரைப்பை நீர் சரியாக ஊறாது. அதனால், ஆகாரம் ஜீரணமாவது தடையாகும். நாம் சாதாரணமாய் விழுங்க முடியாத உலர்ந்த வஸ்துக்களை உமிழ் நீர் நனைத்து மிருதுப்படுத்துகிறது; ஆகாரத்தின் சுவையை நாம் உணரும்படி அதை இளக்கிக் கரைக்கிறது. அதுவுமன்றி, நாம் பேசும் போது நாக்கு சுலபமாய்த் திரும்புவதற்கு உமிழ்நீர் அநுகூல

மாயிருக்கிறது. நமக்கு திடீரென்று பயம் உண்டானால் நாக்கு வறண்டு போகிறது. அச்சத்தினால் ஸ்பரிச நாடிகளின் சலனம் ஓய்ந்துபோவதால், ஊற்றுக்கண்களுக்கு சலனம் உண்டாகிறதில்லை. ஆகையால் தண்ணீர் ஊறுவதும் நின்று போகிறது.

உமிழ் நீரில் ஜலம், சில உப்புகள், பற்றைலன் என்னும் வஸ்து, ஜவ்விலிருந்து உண்டாகும் ஊன்பிசுக்கு நீர் ஆகியவை இருக்கின்றன.

நமது வாய்க்குப் பின்னால் இருக்கும் தொண்டை இங்கிலீஷில் பேரிங்ஸ் (Pharynx) என்று குறிக்கப்படுகிறது. அது மூக்கிற்கும் வாய்க்கும் பின்னால் பொருத்தப்பட்டிருக்கும் தசைப்பை. அதில் ஏழு துவாரங்கள் இருக்கின்றன. நாசித்துவாரங்கள் இரண்டு, காதுத்துவாரங்கள் இரண்டு, வாய், குரல்வளை (Larynx), இரைப்பைக்குழாய் (Gullet) ஆகிய ஏழு வழிகள் தொண்டையில் இருக்கின்றன.

(2) <u>கல்லெட் அல்லது ஈஸோபேகஸ்.</u>

இது தொண்டையிலிருந்து, வயிற்றின் இடது பக்கத்திலுள்ள இரைப்பையின் அகன்ற பக்கம் வரையில் இருக்கிறது. இது சுமார் பத்தங்குல நீளம் இருக்கிறது. இந்தப் பையின் சுவரான தசை இரண்டு அடுக்குகளாயிருக்கின்றன. தசைநார்கள் ஓர் அடுக்கில் நீட்டுப் போக்காகவும், மற்றதில் வளையம் வளையமாகவும் பொருத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பையின் உள்பக்கம் முழுதும் மியூகஸ் மெம்ப்ரேன் என்னப்படும் மழமழப்பான ஜவ்வினால் போர்த்தப்பட்டிருக்கிறது. ஆகாரத்தை நாம் விழுங்கியவுடன் அதன் பளுவினால், தானாகவே வழி உன்டாகிக் கொண்டு போகிறதில்லை. தொண்டையிலும், கல்லெட் குழாயிலும் வளையம் வளையமாய்ப் பொருத்தப்பட்டிருக்கும் இறுகலான தசை அதைத் தள்ளிக் கொண்டே போகிறது. தண்ணீரின் நடுவில் கல்லைப் போட்டால், அலைகள் நடுவிலிருந்து கரை வரையில் வரப்புப் போலச் சிறிதளவு ஜலத்தை உயர்த்திக் கொண்டே கரை வரையில் போய் முடிவது போல, ஒரு கவளம் ஆகாரம்

உள்ளே செலுத்தப்பட்டால், தொண்டையிலுள்ள தசை இறுகி அதை ஆகாரக்குழாய்க்குள் தள்ளுகிறது. கீழ்பாகம் விரிய விரிய மேல் பாகம் மூடி மூடி, அந்தக் கவளத்தைக் கீழே அழுத்திக்கொண்டே போகும். அந்த இரைத்துவாரம் சப்பையாய் ஒட்டிக்கொண்டே இறுகலாய் இருப்பது தான் அதன் இயற்கையான நிலைமை. இதே தன்மையை நாம் மல மூத்திர துவாரங்களிலும் பிரத்தியக்ஷமாகக் காணலாம். அப்படி ஒட்டிக்கொண்டிருக்கையில் உள் பக்கத்து ஜவ்வு மடிப்பு மடிப்பா யிருக்கும். ஆகாரம் போகும் போது, அது நீண்டுகொள்ளுகிறது. ஒரு குதிரை தண்ணீர் குடிக்கையில் அதன் கழுத்து கீழே இருக்கிறது. வயிறு உயரத்தில் இருக்கிறது. தண்ணீர் அதன் பளுவினால் போவதென்றால், அது மேல் நோக்கிப் போகாது; வாயிலிருந்து கீழேதான் விழவேண்டும். ஆனால் அது மேலே போகிறது; தொண்டையிலும், இரைக் குழாயிலும் இருக்கும் தசை வளையங்கள் தண்ணீர் கீழே இறங்காதபடி அடியில் மூடிக்கொண்டு அழுத்துவதால், மேல்பாகம் திறந்துகொண்டே போகிறது. தண்ணீர் மேலே போகப்போக கீழ்ப்பாகம் இறுகி மூடிக்கொண்டே போகிறது. குதிரையின் கழுத்தில் தண்ணீர் முழுங்குகள் உருண்டை உருண்டையாய் மேலே போவதை நாம் கண்கூடாய்க் காணலாம். இதேபோல, நாம் வாயில் தண்ணீரை வைத்துக்கொண்டு தலைகீழாய் நின்று விழுங்கினால், தசை வளையங்கள் அதைத் தள்ளிக்கொண்டே போய், இரைப்பையில் சேர்த்துவிடும். நாம் வாந்தி எடுக்கையில், வயிற்றை எக்கி, இரைப்பையிலுள்ள வஸ்துவை மேலே தூக்கிவிட்டு, அதே சங்கல்பத்தை மனதில் வைத்துக் கொண்டிருந்தால், தசை வளையங்கள் அந்த வஸ்துவைத் தள்ளிக்கொணர்ந்து வெளியில் சேர்த்துவிடுகின்றன. ஆனால் இவ்வாறு தொண்டையிலிருந்து இரைப்பை வரையில் நீண்டிருக்கும் கல்லெட் குழாயில் ஜீரண வேலை எதுவும் நடைபெறுகிறதில்லை.

இங்கிலாந்திலுள்ள சில சர்வகலாசாலைகளில் சமீப காலத்தில் ஒரு முக்கியமான மர்மத்தைக் கண்டு பிடித்

திருக்கிறார்கள். ஆகாரத்தை நாம் நெடுநேரம் மென்று கொண்டே இருந்தால், அதன் சத்து அதிகரிக்கிறதாம். ஆகையால், நீண்ட காலம் ஆகாரத்தை அதக்கி மெல்லுவதால், இப்போது உட்கொள்ளும் ஆகாரத்தில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்துவிட்டாலும், நம் சரீர வலுவோ, கனமோ குறையாவாம். நாம் மிக நிதானமாக உண்பதால், ஆகாரத்தை நெடுநேரம் வாயில் வைத்திருந்து, அதன் சுவை முழுதையும் இழுத்துவிடுகிறோம். அதுதான் அநுபவித்து உண்பதென்பது. இவ்வாறு உண்போருக்கு அபாரமான வலுவும், தசையின் உரமும், தேகாரோக்கியமும் ஏற்படுவது நம் அநுபவத்தில் தெரிகிறது. அதுவன்றி, அவர்கள் தங்களுடைய மனத்தையும், மிருக உணர்ச்சிகளையும் தங்கள் இச்சைப்படி கட்டுப்படுத்தக் கூடியவர்களாயும் ஆகிறார்களாம். சரீரத்திற்கு என்னவிதமான ஆகாரம், எவ்வளவு தேவை யென்பதையும் அவர்கள் சுலபத்தில் அறிந்துகொள்ளுவார்களாம். அவசரமாய் உண்போருக்கு இவ்விஷயங்களில், நிதானம் தெரியாமல் போகுமாம். ஆகாரத்தை அவசர அவசரமாக வாயில் போட்டால், வாய் அவசர அவசரமாய் அதை விழுங்க நேருமாதலால், கை ஆகாரத்தை எடுத்துப் போடுவதிலேயே மிக மந்தமாக வேலை செய்ய வேண்டுமாம். மெலிந்துபோ யிருக்கும் பிணியாளர்கள் தம் ஆகாரத்தை நன்றாக அசைபோட்டு மென்று மென்று தின்பதால், அவர்கள் தங்களுடைய பழைய ஆரோக்கிய நிலைமையை அடைந்துவிடலாமாம். இங்கிலாந்தில் பிரதம மந்திரி ஸ்தானம் வகித்த மேதாவிகளில் ஒருவரான கிளாட்ஸ்டன் என்பவர் அடிக்கடி வேடிக்கையாய், “ஒவ்வொரு கவளத்தையும் முப்பத்திரண்டு தரம் கடிக்கவேண்டும்; அப்போதுதான் ஒவ்வொரு பல்லும் வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும்” என்பாராம்.

3. இரப்பை (Stomach)

நம் மார்பெலும்புக் கூண்டிற்குள் சுவாசத்துருத்திகள், இருதயம் முதலிய ஜீவாதாரமான விசைகள் வைக்கப்

பட்டிருக்கின்றனவென்று நாம் முன்னரே தெரிந்துகொண்டிருக்கிறோம். அவைகளைச் சுற்றிலும் எலும்புக்கூண்டு பாதுகாத்திருப்பதோடு, அடிப்பக்கத்தில் தசையினாலான ஒரு திரையும் அவைகளை மறைத்துக் கொண்டிருக்கிறது. அதாவது, நம் மார்பு பாகத்தையும், வயிற்றுப் பாகத்தையும், குறுக்கில் போடப்பட்டுள்ள ஒரு படுதா, இரண்டு வெவ்வேறு அங்கணங்களாய்த் தடுத்துக்கொண்டிருக்கிறது. அந்தக் குறுக்குத் திரை இங்கிலீஷில் டயபிரேம் (Diaphragm) என்று குறிக்கப்படுகிறது. இதன் ஓரங்கள் மார்பெலும்புக் கூண்டின் அடிவட்டத்தில் ஒட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் குறுக்குப் படுதாவில் இடது பக்கத்தில் இரைக்குழாய் மாத்திரம் அதைத் துளைத்துக்கொண்டு அப்பால் போய் இரைப்பையில் முடிகிறது. அதாவது, தொண்டையிலிருந்து கீழே இறங்கும் இரைக்குழாயே, குறுக்குத்திரைக்கு அப்பால் போனவுடன், உப்பி இரைப்பையாய்ப் பெருத்திருக்கிறது என்றும் நாம் கருதலாம். இந்தப் பை நம் வயிற்றில் குறுக்காக வைக்கப்பட்டிருக்கிறதென்றும், இடது பாகம் அகன்றதாயும், வலது பாகம் குறுகலானதாயுமிருக்கின்றனவென்றும், இதன் நீளம் சுமார் 10 அங்குலமென்றும் நாம் முன்னரே குறிப்பிட்டோம். இந்தப் பைக்குள் ஆகாரம் இல்லாதபோது, இது சுருங்கிப்போய் சிறிதாயிருக்கும். ஆகாரம் புகப்புக இது பெருத்துக்கொள்ளும். இது மூன்று அடுக்குகளாயமைந்துள்ள தசைகளால் ஆனது. தசை நார்கள் நீட்டுப் போக்காகவும், குறுக்கு வட்டமாகவும், மூலைச் சார்பாகவும் மூன்றுவிதமாயமைந்திருப்பதால், ஆகாரம் பைக்குள் விழுந்தவுடன், அவை மாறி மாறி குறுக்காகவும் நெடுக்காகவும் சுருங்கி விரிவதால், உள்ளே இருக்கும் ஆகாரத்தைத் தயிர் கடைவதுபோல நசுக்கி நசுக்கி விடுகின்றன. இரைப்பையில் ஆகாரம் இல்லாத காலத்தில் உள்புறத்துப் போர்வையான ஜவ்வு மடிப்பு மடிப்பாயிருக்கும். ஆகாரம் விழுந்தவுடன் பை விரிகிறதாகையால், மடிப்புகள் மட்டமாகிவிடுகின்றன.

இரைப்பை ஆகாரத்தை நசுக்கிக் கடையும்போது அதற்குள் ஒருவிதமான நீர் கசிகிறது. நாம் ஒரு சாத்துக்குடி ஆரஞ்சுப்பழத்தின் தோலை உற்று நோக்கினால், அதன் மேல் ஏராளமான புள்ளிகள் காணப்படும். ஒரு பழத்தின் தோலை நாம் உரிக்கும்போது அதிலிருந்து தைலம்போன்ற வாசனையான ஒருவித இரசம் நூல் போலப் பீய்ச்சப்பட்டு நம் முகத்தில் தாக்குவதை நாம் உணர்கிறோம். அப்போது தோலின்மேலும் ஒருவித தைலக் கசிவு காணப்படுகிறது. நாம் தோலை உற்று நோக்கினால், புள்ளிகளாயிருப்பவை நுட்பமான துவாரங்கள் என்பதையும், அதற்குள் இரஸப்பைகள் இருக்கின்றனவென்பதையும் நாம் தெரிந்துகொள்ளலாம். நாம் தோலை உரித்த காலத்தில், அவற்றிலிருந்த இரஸமே நம் முகத்தில் வந்து தெறித்தது. அந்த இரஸத்தில் செடி பழத்திற்குரிய வாசனை ஊட்டப்பட்டிருக்கிறது. இப்படி ஆரஞ்சுப் பழத்தில் புள்ளிகளும், இரஸ அறைகளும் இருப்பதுபோல, நம் இரப்பையின் உள் பக்கம் முழுதிலும் அமைந்திருக்கின்றன.

ஆகாரம் இரப்பைக்குள் விழுந்தவுடனே, பையின் தசையடுக்குகள் சுருங்க வாரம்பிக்கின்றன. அதனால் பை நீட்டுப்போக்கிலும், குறுக்கிலும் மாறி மாறிச் சுருங்கி விரிகின்றதாதலால், உள்ளே இருக்கும் ஆகாரம் நசுக்கப்படுகிறது. அப்போது உள் புறத்து ஜவ்வு ரோஜாப் பூவின் நிறத்தை அடைந்துவிடுகிறது. அதாவது, அவ்விடத்திலுள்ள இரத்தக்குழாய்கள் பெருத்து அதிகமான இரத்தத்தை அங்கே கொண்டுவருகின்றன. இடையிடையில் நிறைந்துள்ள இரஸ அறைகளிலிருந்து, புளிப்பு ஜலம் கசிந்து, ஆகாரத்தோடு கலந்து, பிசரிக் கொள்ளுகிறது.

வாயில் ஊறும் உமிழ்நீர் எப்படி மாப்பதார்த்தங்களை சர்க்கரைபோல் மாற்றியதோ, அதேபோல இரைப்பைக்குள் ஊறும் புளிப்பு நீர், ஆகாரத்திலுள்ள மாமிசம், பால், பருப்பு வகைகள் முதலியவற்றை ஜீரணித்து இளக்கிவிடுகிறது. கெட்டியான உப்புக்கட்டி தண்ணீரில் சுலபத்தில்

கரைந்து போவதுபோல, ஆகாரத்திலுள்ள ஷை கெட்டி வஸ்துக்கள் வயிற்றில் உற்பத்தியாகும் புளிப்பு ஜலத்தால் இளக்கி விடப்படுகிறது.

நாம் உண்ணும் ஆகாரத்தின் தினிசு, அது சமைக்கப் பட்டிருக்கும் பாங்கு, அதை நாம் மென்றிருக்கும் அளவு முதலியவற்றைப் பொருத்து, இரைப்பை ஒவ்வொரு வேளை ஆகாரத்தையும் இரண்டு மணி முதல் நான்கு மணி காலம் வரையில் நசுக்கிக் கடைகிறது. இரைப்பைக்குள் உற்பத்தியாகும் புளிப்பு நீர் எவ்வித நிறமும் அற்றதா யிருக்கிறது. அதன் பெரும்பாகமும் சுத்த ஜலம். அதோடு, சொற்ப அளவு உப்பும், பப்ஸின் (Pepsin), ரென்னின் (Rennin) என்னும் இரண்டு வஸ்துக்களும், ஹைட்ரோ குளோரிக் ஆஸிட் (Hydrochloric Acid) என்னும் புளிப்பு திராவகமும் சேர்ந்திருக்கின்றன. ஹைட்ரோ குளோரிக் ஆஸிட் என்னும் புளிப்பு திராவகம், ஆகாரத்தோடு இரைப்பைக்குள் வந்திருக்கும் கிருமிகளை யெல்லாம் கொன்றுவிடுவதன்றி, உமிழ் நீரினால் காரக்ஷாரமாய் மாறியிருக்கும் ஆகாரத்திற்கு புளிப்பைக் கொடுக்கிறது. பப்ஸின் என்பது ஆகாரம் காரக்ஷாரமா யிருக்கையில் அதை அழிக்கிறதில்லை. ஹைட்ரோ குளோரிக் ஆஸிட் ஆகாரத்தின் காரக்ஷாரத்தைப் புளிப்பாய் மாற்றியவுடன், பப்ஸின் அதை சுலபத்தில் கரைத்துவிடுகிறது. ஆனால், நெய் முதலிய கொழுப்பான பதார்த்தங்கள் இரைப்பையில் எண்ணெய் போல் உருகியிருக்குமே யன்றி, பூர்த்தியாக ஜீரணமாகி விடுகிறதில்லை. எனவே, உமிழ் நீரால் அரை குறையாக மாற்றப்படும் மாப்பதார்த்தங்களும், இரைப் பையினால் எண்ணெயாய் மாற்றப்படும் கொழுப்புகளும் இரைப்பையை விட்டு, அதற்கு அப்பாலுள்ள சிறு குடலில் போய்த்தான் பூர்த்தியாய் ஜீரணமாகவேண்டும். இரைப்பைக்குள் போய்ச் சேரும் ஆகாரம் அதற்கு அப்பால் செல்லும்போது, ஏடும் நுரையுமாய்க் கூழாயிருக்கும். அது இங்கிலீஷில் சீம்(Chyme) என்று குறிக்கப்படுகிறது. பசு மாடு கன்று போட்ட பிறகு சமீப தினங்களில் கறக்கப்பட்ட பாலை நாம் சீம்பால் என்று குறிக்கிறோம்.

அத்தியாயம்—5

III ஜீரணகோசம் அல்லது ஊண்மயகோசம்

(தொடர்ச்சி)

(4) டுவோடனம் (Duodenum)

நமது வயிற்றில் குறுக்குவாட்டாக வைக்கப்பட்டிருக்கும் இரைப்பை வலது பக்கத்தில் குறுகிக் குழாயின் வடிவத்தை யடைந்து கைப்பிடிபோல் வளைந்து, கீழே இறங்குகிறது. அந்தப் பகுதியே இங்கிலீஷில் டுவோடனம் என்று குறிக்கப்படுகிறது. இதைநாம் ஜீரணமயகோசப் படத்தில் II என்ற எண்ணால் குறித்திருக்கிறோம். (32-வது பக்கத்திற்குப் பின்னால் பார்க்க) இரைப்பைக்கும், டுவோடனத்திற்கும் இடையில் அது கழுத்துபோலக் குறுகியிருப்பதால், உள்ளேயிருக்கும் தசைமடிப்பு கபாடம்போல வழியை மறைத்துக் கொண்டிருக்கிறது. இரைப்பையில் போய்ச்சேரும் ஆகாரம் கடையப்பட்டு, சீமாக மாறுகிறவரையில் இந்தக் கபாடம் மூடப்பட்டே இருக்கும். ஆகாரம் சீமாக மாறிப்போன பிறகு இரண்டொரு நிமிஷ காலத்திற் கொருதரம் இந்தக் கபாடம் தளர்வடைந்து, சிறிது சிறிதாக சீமாகிய அன்னக் கூழை அப்பால் போகவிடுகிறது. பிறகு சிறிது நேரத்தில், அது முற்றிலும் திறந்துகொண்டு இரைப்பையிலுள்ள சீம் முழுதும், இன்னம் ஜீரணமாகாத இதரவஸ்துக்களும் டுவோடனத்திற்குள் போகும்படி விட்டுவிடுகிறது. இவ்வாறு அந்தக் கபாடம் (Pylorus) தானாகத் திறந்துகொள்வதற்கு முன், இரைப்பையிலுள்ள எந்த வஸ்து வந்து முட்டினாலும் அங்

தக் கபாடம் அதிக இறுகலாய் வழியை மூடிக்கொள்ளுமே யன்றி, திறந்துகொள்ளாது. அந்தக் கபாடம் எப்போதும் திறந்தே இருந்தால், நம்முடைய சட்டைப்பையின் அடியில் பெரிய துவாரம் இருப்பதை கவனியாமல் நாம் பையில் பட்டாணி முதலிய தின்பண்டங்களைப் போட்டால், அது எப்படிக் கீழே போய்விடுமோ, அதேபோல, இரைப்பையில் ஆகாரம் தேங்கி நிற்காமல் கீழே போய்விடும். அது ஜீரணமாவதற்கே இடமும் அவகாசமும் இல்லாமல் போகும்.

பைலோரஸ் என்பது 32-வது பக்கத்திற்குப் பின்னால் காட்டப்பட்டுள்ள ஜீரணமயகோசப் படத்தில் I என்னும் எண்ணால் குறிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி, பைலோரஸ் என்னும் கபாடம், இரைப்பையில் ஆகாரம் ஜீரணமாகும் வரையில் இறுகியிருந்து, அது ஜீரணமாய்விட்டதென்பதை உணர்ந்து சரியான காலத்தில் எப்படித் திறந்துகொள்ளுகிறது என்னும் விஷயம் ஆதிகாலத்து மனிதர்களுக்கு பெரிய அதிசயமாக இருந்ததாம். அந்த வாசற்படியில் ஒரு தேவதை காவல்காத்திருக்கிறதென்றும், வயிற்றில் ஆகாரம் ஜீரணமாய்விட்டதென்று அது சொன்னால், உடனே அந்தக் கபாடம் திறந்துகொள்ளுகிறதென்றும் அவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்களாம். இது நெடுங்காலம் வரையில், விளங்காத வித்தையாகவே இருந்து வந்ததாம். கடைசியில் சமீப காலத்தில், ருஷ்யா தேசத்தார் ஒருவர் இதன் காரணத்தைக் கண்டுபிடித்தாராம்.

உதாரணமாக, ஒரு மாட்டின் முதுகின்மேல் ஓர் ஈ உட்கார்ந்துகொள்ளுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். கொஞ்சநேரம் வரையில், மாடு அந்த ஈ உட்கார்ந்திருப்பதை உணராததுபோல் இருக்கிறது. சிறிது நேரத்தில், அந்த ஈ இருக்கும் இடத்தைச் சுற்றிலும் இருக்கும் தோல் அதை உணர்ந்ததுபோல சுருங்கிச் சுருங்கி அசையத் தொடங்குகிறது. மேலும் கொஞ்ச நேரத்தில், மாடு வாலைத் தூக்கி வீசி வீசி அந்த ஈயை அடித்து ஓட்ட ஆரம்பிக்

கிறது. ஈ உட்கார்ந்து கடிக்க ஆரம்பித்தது முதல் அங்குள்ள ஸ்பரிசநாடி மூளைக்குச் செய்தி யனுப்பிக்கொண்டே இருக்கிறது. நேரம் ஆக ஆக அவசரத்தந்தி பறக்கிறது. தோலிலுள்ள தசை சலன மடைகிறது. ஆனால் அது ஈயை ஓட்ட சக்தி யற்றதா யிருக்கிறது. வாலாகிய ஆயுதமே நீண்டிருப்பதால், அது கிளம்பி அந்த உபத்திரவத்தை விலக்க முயற்சிக்கிறது. இதிலிருந்து, உடம்பு முழுதிலும் பரவியிருக்கும் ஸ்பரிசநாடிகளும், தசைகளும் ஒன்றுக்கொன்று சலனத்தின்மூலம் செய்தி யனுப்பிக்கொண்டு, மனதின் விருப்பத்திற்கிணங்க, ஒத்துழைக்கின்றன வென்பது பிரத்தியக்ஷமாகத்தெரிகிறது.

ஈ உட்கார்ந்தது எப்படி உடம்பில் சிறுகச் சிறுக உறைத்ததோ, அதேபோல, இரைப்பைக்குள் உற்பத்தியாகும் புளிப்பு நீர், பைலோரஸ் என்னும் கபாடத்திற்கு சலனத்தை உண்டாக்குகிறதாம். ஆகாரம் இரைப்பைக்குள் வர வர, புளிப்பு நீர் உற்பத்தியாகிறது. அவ்வாறு மேன்மேலும் புளிப்பு நீர் உற்பத்தி ஆகி ஆகி ஆகாரம் முழுதிலும் ஊறிப் போகிறதாகையால், இரைப்பையிலிருக்கும் சீம் முழுதும் ஒரே புளிப்பு மயமாக மாறிப்போகிறது. அதுவரையில் சிறுகச் சிறுக கபாடத்திற்கு சலனத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த புளிப்பு அதிகப்பட்டுப் போகவே, கபாடமும் அதனால் இளக்கமடைந்து திறந்து கொள்ளுகிறது. புளிப்பான ஆகாரக்கூழ் அந்தக் கபாடத்தைக் கடந்து டுவோடனத்திற்குள் போனவுடன் கபாடம் மறுபடியும் மூடிக்கொள்ளுகிறது. அது டுவோடனத்திற்குப் போனவுடன், அதன் புளிப்பு மாறிப்போகிறதாகையால், கபாடம் உடனே இறுகிப்போகிறது. டுவோடனத்திற்குள் போகும் சீம் என்னப்படும் ஆகாரக்கூழ் அங்கு சில முக்கியமான மாறுதலையடைகிறது. இரப்பையின் அடியில் நுரையீரல் என்ற ஓர் உறுப்பும், நம் வயிற்றின் வலது பக்கத்தில் ஈரல்குலை என்னும் ஓர் உறுப்பும் ஆக இரண்டு முக்கியமான உறுப்புகள் பொருத்தப் பெற்றிருக்கின்றன. அவற்றிற்கும் டுவோடனத்திற்கும் குழாய் பொருத்தப் பட்டிருக்கிறது. அதன்

மூலம் இரண்டு விதமான இரஸநீர்கள் டுவோடனத்திற்கு வந்து ஆகாரத்தோடு சம்பந்தப்படுகின்றன.

நுரைஈரலை இங்கிலீஷில் பான்கிரியாஸ் (Pancreas அல்லது Sweetbread) என்று குறிக்கிறார்கள். இது 32-வது பக்கத்திற்குப் பின்னுள்ள ஜீரணமயகோசப்படத்தில் 4 என்னும் எண்ணால் குறிக்கப் பட்டிருக்கிறது. இது சம்மட்டி போன்றவடிவமுடையதும், சுமார் 8 அங்குல நீளம் நீண்டு உள்ளதுமான ஓர் உறுப்பு. இது டுவோடனத்தின் முடக்கிலும் இரைப்பையின் அடியிலும் நீளமாயும் சப்பையாயும் அமைந்திருக்கிறது. வாயில் பொருத்தப்பட்டிருக்கும் உமிழ்நீர் ஊற்றுகள் எப்படி அமைந்திருக்கின்றனவோ, அதுபோல, இது பெரிய அளவில் அமைந்துள்ள ஒருவிதமான ஊற்று நிலை. ஆகாரம் ஜீரணமாவதற்கு அவசியமான இரஸங்களை உற்பத்தி செய்யும் கருவிகளில் முக்கியத்தன்மையில் இதுவே முதன்மையானது. இது வெண் சிவப்பான நிறமுடையது. இந்த நுரையீரலிலிருந்து ஊற்பத்தியாகும் நீர் எவ்வித நிறமுமற்றது. அதிலிருந்து எப்போதும் ஓயாமல் நீர் வந்து கொண்டே இருப்பதில்லை. நாம் ஆகாரத்தை உண்ட பின், இரைப்பை அதை சீமாக மாற்றி, டுவோடனத்திற்கு அனுப்பிய உடனே, டுவோடனத்தில் ஒருவித இரஸம் உற்பத்தியாகிறது. அது இங்கிலீஷில் ஸிக்ரீடின் (Secretin) என்று குறிக்கப்படுகிறது. அது இரத்தக் குழாய்களின் மூலம் நுரையீரலுக்குள் போய் தூதனைப்போல் செய்தி சொல்லுகிறது. உடனே நுரையீரல் தன் இரஸத்தை டுவோடனத்திற்குள் அனுப்பிவைக்கிறது.

இந்த நுரையீரல் இரஸத்தில் மூன்று விதமான சக்திகள் அமைந்திருக்கின்றன. அது உமிழ்நீரைப் போல, மாப்பதார்த்தங்களை சர்க்கரைபோ லாக்கிக் கரைத்துவிடுகிறது; இரைப்பையில் ஊறும் புளிப்பு நீர்போல, பருப்பு, மாமிசம் முதலியவற்றைக் கரைக்கிறது; கொழுப்பாகிய நெய் முதலியவற்றையும் ஜீரணிக்கிறது. ஆகவே, வாயிலும், இரப்பையிலும் அரை குறையாகச் செய்யப்படும் வேலைகளை அது பூர்த்தியாகச்

செய்து முடிக்க உபயோகப்படும் கடைசி ஆயுதம். இந்த நுரையீரல் நீரில் மூன்று வஸ்துக்கள் அடங்கியிருக்கின்றன. அவை இங்கிலீஷில் (1) அமிலாப்ஸின் (Amylopsin), (2) டிரிப்ஸின் (Trypsin), (3) லிபாஸி (Lipase) என்று முறையே குறிக்கப்படுகின்றன.

(1) அமிலாப்ஸின் என்பது வாயின் உமிழ் நீரின் குணமுடையது. மிச்சமிருக்கும் மாப்பதார்த்தம் இதனுதவியினாலேயே சர்க்கரைபோல் மாற்றப்பட்டுப் போகிறது. (2) டிரிப்ஸின் என்பது இரைப்பையில் உற்பத்தியாகும் புளிப்பு நீர் போன்றதானாலும், அதைவிட அதிக சக்தி வாய்ந்தது. இதற்கு ஹைட்ரோகுளோரிக் ஆஸிட் என்னும் திராவகத்தின் உதவி அநாவசியம். (3) லிபாஸி என்பது ஸோடா உப்பின் (Sodium Carbonate) குணமுடையது. இது கொழுப்பான நெய், எண்ணெய் முதலியவைகளைப் பழையபடி அவற்றின் ஆதிநிலைமைக்குக் கொண்டுபோகிறது. பாலைக் காய்ச்சித் தோய்த்துத் தயிராக்கி அதைக் கடைந்து வெண்ணெயெடுத்து, அதை உருக்கி நெய்யாக்குகிறோம். ஆகையால், பாலில் நெய் தன் வடிவம் தெரியாதபடி ஒன்றுபட்டுச் சேர்ந்திருக்கிறதல்லவா. இந்த லிபாஸி என்னும் நுரையீரல் ஸத்து நெய் முதலிய கொழுப்பு வஸ்துக்களை நீர்போலக் கரைக்கிறது.

நுரையீரல் இவ்வாறு மூன்றுவிதமான சக்திகளையுடைய இரஸத்தை உற்பத்தி செய்வதோடு மாத்திரமன்றி, இன்னொரு முக்கியமான இரஸநீரையும் உற்பத்திசெய்கிறது. அது பிரத்தியேகமான குழாயின் மூலமாய் வருகிறதில்லை. அது நேராகவே இரத்தத்தோடு கலந்துகொண்டு, இரத்தக் குழாய்களின் வழியாகப் பரவுகிறது. இந்த நான்காவது ஸத்து நம் உடம்பில் மிக முக்கியமான ஒரு வேலையைச் செய்கிறது; நாம் உட்கொள்ளும் சர்க்கரையை எப்படியெப்படி ஒழுங்குப்படுத்தி உபயோகிக்க வேண்டுமோ அந்த வேலையைச் செய்கிறது. இந்த நான்காவது ஸத்துநீர் குறைவாக உற்பத்தியாகும் பட்சத்தில், நமது இரத்தத்தில் சர்க்கரை

ஏராளமாகச் சேர்ந்துவிடும். அதனால் டையபெடீஸ் (Diabetes) என்னப்படும் நீரிழிவு வியாதி உண்டாகிவிடும். மேல் நாட்டார் இன்ஸுலின் (Insulin) என்ற ஒரு வஸ்துவைத் தயாரித்து, இந்த நீரிழிவு வியாதிக்குக் கொடுக்கிறார்கள். இந்த மருந்து, நுரையீரலில் உற்பத்தியாகும் மேலே குறிக்கப்பட்ட நான்காவது ஸத்துநீரின் குணமுடையதாகையால், அதன் மூலம் சர்க்கரையின் தேக்கத்தை விலக்கி, நீரிழிவை நிற்க வைக்கிறார்கள்.

ஈரல்குலை என்பது சிறிய குழாயின் மூலம் டுவோடனத்தோடு சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கும் ஜீவாதாரமான ஓர் உறுப்பு. இதைப் பித்தப்பை என்றும் சொல்வதுண்டு. இங்கிலீஷில் இது லிவர் (Liver) என்று குறிக்கப்படுகிறது. இது 32-வது பக்கத்திற்குப் பிறகு. சேர்க்கப்பட்டுள்ள ஜீரணமயகோசப்படத்தில் டுவோடனத்திற்கு வலது பக்கத்தில் 'வ' என்னும் எழுத்தினால் குறிக்கப்பட்டிருக்கிறது. நம் சரீரத்திலுள்ள இரஸ ஊற்றுக்கருவிகள் எல்லாவற்றிலும் இதுதான் மிகப் பெரியது. இதை நிறுத்துப் பார்த்தால் மூன்று முதல் நான்கு பவுண்டு கனம் வரையில் இருக்கும். இது பார்வைக்கு, சாக்கோலேட்டின் நிறமாயிருக்கும். இது நம் வயிற்றின் வலது பக்கத்தில், டயபிரேம் (Diaphragm) என்னப்பட்ட குறுக்குத் திரைக்கு அடியில் இருக்கிறது. இதன் பெரும்பாகமும் நம் வயிற்றின் வலது பக்கத்தில் இருக்கிறதானாலும், ஒரு சிறிய பாகம் இரைப்பைக்கு மேலேயும் ஏறிநிற்கிறது. இதன் வடிவம் குட்டையான இரண்டு வாழைப்பழங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு ஒரே தோலிற்குள் இருப்பதுபோலிருக்கும். இது நம் இடுப்பிற்குள் இருப்பதால், ஆடையை அழுத்திக்கட்டுவதனால், இது அழுந்திப்போகக் கூடிய நிலைமையில் இருக்கிறது. இதன்

இரண்டு பகுதிகளும் வலது பகுதி (Right lobe), இடது பகுதி (Left lobe) என்று குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒவ்வொரு சிறிய குழாய் வந்து, அலாக்காக நிற்கும் இன்னொரு பையில் சேருகிறது. அந்தப் பையை, நாம் மேலே குறிப்பிட்ட 'வ' என்னும் உறுப்பின் நடுவில் காணலாம். அது நீட்டுப்போக்கான ஒரு பலா மூசு போன்ற வடிவமுடையதாயிருக்கிறது. அது கால்-பிளாடர் (Gall-bladder) என்று குறிக்கப்படுகிறது. பித்தநீர்ப் பை அல்லது கசப்புநீர்ப் பை என்பது அதன் பொருள். ஈரல் இரண்டு பகுதிகளாயிருப்பதால், அது ஈரல்குலை என்று குறிக்கப்படுகிறது. அதன் பகுதிகளுக்குள்ளிருந்து குழாய்களின் மூலமாய்ப் பித்தநீர், கால்-பிளாடர் என்னும் பலாமூசு வடிவப் பைக்குள் வந்து தேங்கி நின்று, அங்கிருந்து குழாயின் மூலம் டுவோடனத்திற்குப் போய்ச் சேருகிறது.

ஈரல்குலை என்னப்படும் இந்த உறுப்பு, தேனடையில் இருப்பனபோன்ற மிக நுட்பமான சில் அறைகளே மயமாய் நிறையப்பெற்றதாயிருக்கிறது. அவ்வறைகளிலேயே பித்தநீர் உற்பத்தியாகிறது. அந்த நீர் பசுமையான மஞ்சள் நிறமுடையதாயும், தடிப்பாயுமிருக்கிறது. காரக்ஷாரமாயிருக்கும் இந்த நீர் எப்போதும் ஆயத்தமாய் கால்-பிளாடர் பையில் நிறைந்திருக்கும். இது டுவோடனத்திற்குப் போகும் குழாயில் சில சமயங்களில் கல்லடைப்புகள் ஏற்பட்டுப் போகும். அப்போது பித்தநீர் டுவோடனத்திற்குள் போய்ச் [illegible]ருகிறதில்லை. அப்போது இந்தப் பித்தநீரில் ஒரு பாகம் [illegible]தத்தோடு சேர்ந்துகொள்ளுகிறது. அதனால் கண் இமை முதலியவை மஞ்சளாகிவிடுகின்றன. மஞ்சள் காமாலை என்று நாம் சொல்லுகிறோம்.

ஈரல்குலை மூன்று விதமான முக்கியக் கடமைகளைச் செய்கிறது. (1) ஜீரணமாக்கப்பட்ட சர்க்கரை, மாஸத்து ஆகியவற்றை சேமித்துவைக்க, ஈரல்குலை ஒரு கொட்டியம் போல் உபயோகப்படுகிறது. (2) அது நம்முடைய உடம்பிற்கு ஒரு ரக்ஷகன்போல் இருந்து, நம்மால் உட்கொள்ளப்படும் விஷ வஸ்துக்கள் இரத்தத்தில் சேராதபடி தடுத்து அவற்றை அழித்துவிடுகிறது. ஒரு மனிதனைக் கொல்வதற்கு நாம் உடம்பின் தோலின் மூலம் விஷத்தை உட் செலுத்தினால், அதற்கு ஒரு வாரகனிடை அளவு விஷம் வேண்டுமென்றால், அதையே வாயின் மூலமாய்க் கொடுத்தால், இரண்டு வாரகனிடை அளவு தேவையாகும். ஏனென்றால், அதன் பாதிபாகம் ஈரல் குலையால் அழிக்கப்பட்டுப்போகும். காப்பி, லாகிரி வஸ்துக்கள் முதலியவற்றின் வேகம் அநேகமாய் ஈரல் குலையால் எரிக்கப்பட்டுப் போகிறது. (3) ஈரல் குலை நாம் மேலே குறித்தபடி, பித்தநீரை உற்பத்தி செய்யும் ஊற்றாகவும் இருக்கிறது. இரத்தத்தில் உள்ள அசுத்தங்களாலும், உடம்பின் சேதார வஸ்துக்களாலுமே, பித்தநீர் உண்டாகிறது. அது உடம்பை விட்டு வெளிப்பட வேண்டிய வஸ்து. அப்படி இருந்தும், அது வெளிப்பட்டுப் போகும்போது, வழியில் நமக்குப் பெரிய உதவியைச் செய்துகொண்டே செல்லுகிறது. அது காரக்ஷாரமாயிருப்பதால், சீமாகிய ஆகாரக் கூழ் இரைப்பையிலிருந்து டுவோடனத்திற்குள் வந்த பின் அதன் புளிப்பை, பித்த நீர் மாற்றிவிடுகிறது. நுரையீரலிலிருந்து வரும் இரஸத்தோடு [illegible] பித்த நீரும் சேர்ந்து, நெய் முதலிய கொழுப்புகளை சுலபத்தில் ஜீரணிக்க உதவி செய்கிறது. பித்தநீர் முக்கியமாய் இன்னொரு வேலையையும் செய்கிறது. சுமார் இருபதடி நீளம் நீண்டு சுருண்டு கிடக்கும் சிறு குடலின் உள்பக்கத்

திற்கு மழ மழப்பை உண்டாக்கி, ஆகாரம் சுலபத்தில் அந்த வழியாக நகர்ந்து போகும்படி செய்கிறது.

5 சிறு குடல். (Small Intestine)

டுவோடனமென்னும் கைப்பிடி வளைவு சற்று கீழே இறங்கி சுருள் சுருளாய் மடங்கிக்கிடக்கிறது. இந்தச் சுருளின் மத்தியை நாம் ஜீரணமய கோசப்படத்தில், 7 என்னும் எண்ணினால் குறித்திருக்கிறோம். இந்தச் சிறு குடல் சுமார் 20 அடி நீளமிருக்கிறதென்று நாம் ஏற்கனவே தெரிந்துகொண்டோம். இந்தக் குடலின் பருமன் சுமார் ஓர் அங்குலமிருக்கும். இதன் உள் பக்கத்தில் இருக்கும் மழமழப்பான மெல்லிய தோல் மடிப்பு மடிப்பாக மடங்கி இருக்கும். இந்தத் தோல் ஒரே மட்டமாக இருந்தால், இடம் கொஞ்சமாயிருக்குமென்று, இவ்வித மடிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பெண் ஒரு துணியைத் தட்டாடையாய் இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டால், அதற்கு மூன்று முழத் துணி பிடிக்கும். அதையே மடிப்பு மடிப்பாக வைத்துப் பாவாடையாகத் தைத்தால் அதே இடுப்பின் சுற்றளவுக்கு சுமார் பதினைந்து முழத் துணி தேவையாகும். அதே போல குடலின் உள்ளீட்டுத் தோலை மடிப்பு மடிப்பாய் வைத்திருப்பது அதன் பரப்பு அதிகமாவதற்காகவே. இப்படி அதன் பரப்பு அதிகப்படுத்தப்பட்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. இந்தச் சிறு குடலின் உள்ளீடான மழமழப்பான தோலிலிருந்து ஒரு விதமான இரஸஸத்து கசிகிறது. அதுவும் நுரையீரல் இரஸத்தோடு சேர்ந்து, ஜீரண வேலையைப் பூர்த்திசெய்ய உதவுகிறது. அதுவன்றி, இந்தக் குடலின் உள்புறத்தில் செல்லும் ஆகாரத்தின் ஸத்தை இந்த மழமழப்பான உள்ளீடு இழுத்துக் கொள்ளுகிறது. இவ்வாறு இரஸக் கசிவை உண்டாக்கவும்,

ஆகார ஸத்தை இழுத்துக்கொள்ளவும் ஏராளமான பரப்பு அவசியமாதலால், அதன்பொருட்டே, சிறு குடலுக்குள் தோல் மடிப்பு மடிப்பாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதுவன்றி, இவ்வாறு அமைந்திருக்கும் மடிப்புத் தோல் முழுதிலும் நூலிழைபோலக் கூர்கூராய் ஆயிரக்கணக்கான முளைகள் அமைந்திருக்கின்றன. அவை வில்லி (Villi) என்று குறிக்கப்படுகின்றன. நாயின் உடம்பு முழுதிலும் மயிர்கள் நிறைந்திருப்பதுபோல, சிறு குடலின் உள்பக்கம் முழுதிலும் நூலிழைபோன்ற மெல்லிய முளைகள் பொருத்தப்பட்டிருப்பதால், அந்த உள்ளீடு முழுதும் வெல்வெட்டு போல வழுவழுப்பா யிருக்கும். ஒவ்வொரு முளையிலும் மயிரிழைபோன்ற இரத்தக் குழாய்களிருக்கும். அதுவன்றி ஆகாரப்பால் போவதற்கு லாக்டீல் (Lacteal); அல்லது, லிம்பாடிக் (Lymphatic), என்னும் ஒரு குழாயிருக்கும். இவ்வாறு மடிப்புகளாலும், கூராயுள்ள முளைகளாலும், இந்த உள்ளீட்டின் விஸ்தீர்ணம் கணக்கிட இயலாதபடி அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஆகாரம் நம்முடைய வாயில் சில நிமிஷகாலமே இருக்கிறது. இரைப்பையில் அது இரண்டு முதல் மூன்று மணிகாலம் இருக்கிறது. ஆனால் சிறு குடலிலோ, அது பத்து முதல் பன்னிரண்டு மணி காலம் தங்குகிறது. ஆகாரக் கூழாகிய சீம் சிறுகுடலில் ஒரு நிமிஷத்திற்கு அரையங்குல தூர விகிதம் நகருகிறது. சிறு குடலில் ஆகாரக்கூழ் போவது தண்ணீரின் அலை உயர்ந்து தணிந்து போகும் தோற்றமாயிருக்கும். ஒரு குறித்த கவளம் இந்தச் சிறு குடலின் கோடியை அடைய சுமார் மூன்று மணி காலம் பிடிக்கும்.

சிறு குடலின் பக்கச் சுவர், இரைப்பைபோல, மூன்று அடுக்குகளாயிருக்கும் தசைகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. உள்புறத்தில் இருக்கும் மழமழப்பான தசை மடிப்புகள் சில இடங்களில் கால் அங்குல உயரமிருக்கும். இவ்வாறு சிறு குடலில் இருக்கும் மடிப்புகளுக்கும், இரைப்பைக்குள் இருக்கும் மடிப்புகளுக்கும் முக்கியமான ஒரு வேறுபாடிருக்கிறது. இரைப்பைக்குள் ஆகாரம் நுழைந்தவுடன், உள்ளே இருக்கும் மடிப்புகள் எல்லாம் படிந்து சமமாகிவிடும். ஆனால், சிறு குடலில் உள்ள மடிப்புகள் சமமாகாமல் எப்போதும் அதே நிலைமையில் இருக்கும். இம்மடிப்புகளில் கீரை முளைகள்போல் நிறைந்திருக்கும் வில்லி என்னும் முளைகளுக்கு இடையிடையில் அடியில் ஊற்றுக் கண்களும், சில அறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்தே நீர்க்கசிவு ஏற்படுகிறது. சிறுகுடலின் அடிப்பாகம் கெட்டுப்போவதனாலேயே டைபாய்ட் (Typhoid) என்னப்படும் சன்னிபாத ஜுரம் உண்டாகிறது.

நாம் உண்ணும் ஆகாரத்தில் மாப்பதார்த்தங்களாயிருப்பவைகளில் ஒரு சிறியபாகம் வாயின் உமிழ் நீரினால் சர்க்கரைபோல மாறிப்போகிறது; பருப்பு, மாமிசம் முதலியவை இரைப்பையில் உண்டாகும் புளிப்பு திராவகத்தினால் பெரும்பாலும் நைந்துபோகின்றன. அவ்விடத்தில் நெய்முதலிய கொழுப்புப் பதார்த்தங்கள் எண்ணெய்போல் உருகிப்போகின்றன. எல்லாம் சேர்ந்து சீமாக மாறி டூவோடனத்திற்குப் போகின்றன. அங்கு நுரையீரலிலிருந்து வரும் இரஸமும், ஈரல்குலையிலிருந்து வரும் பித்தநீரும், டூவோடனத்தின் உள்ளீட்டுத் தோலிலிருந்து கசியும் இரஸமும் ஒன்றுகூடி ஆகாரக் கூழோடு கலந்து சிறு குடலுக்குள் புகுகின்றன. அவ்விடத்தில் ஜீரணவேலை பூர்த்தியடைவதோடு, வில்லி

என்னப்படும் கூர்முளைகளால் ஆகாரப்பால் உள்ளே இழுத்துக்கொள்ளப்பட்டு, லாக்டீல் என்னும் குழாய்களின் வழியாய் உள்ளே போகிறது.

இவ்வாறு ஆகாரக்கூழ் சுமார் 20 அடி நீளமுள்ள சிறுகுடலுக்குள் போய், அதன் அடியை அடைவதற்குள் அதில் ஸாரமாயிருக்கும் பகுதி முழுதும் சப்பப்பட்டுப் போகிறது. சக்கையாயிருப்பது, அதற்கப்பால் இருக்கும் பெரிய குடலில் போய்ச் சேருமிடத்தில் ஒரு கபாடம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கபாடம் சிறு குடலிலிருக்கும் சக்கையாகிய மலம் பெரிய குடலுக்குள் போக வழிவிடுமேயன்றி, பெரிய குடலிலுள்ள மலம் திரும்ப சிறு குடலுக்குள் வர வழிவிடாது. இவ்வாறு சிறுகுடல் பெரிய குடலில் சேருமிடத்தை நாம் மேலே குறித்திருக்கும் ஜீரணமயகோசப்படத்தில் III என்னும் எண்ணினால் குறித்திருக்கிறோம்.

6 பெரிய குடல் (Large Intestine)

இந்தப் பெரிய குடல் தலைகீழாய்த் திருப்பப்பட்ட ‘ப’ என்னும் எழுத்தைப்போல் அமைந்து, சிறு குடல் சுருள்களையெல்லாம் வளைத்துக்கொண்டு கீழே இறங்கி, சிறிது மடங்கி நடுவரையில் வந்து கீழே கூராய் நீண்டிருக்கிறது. அந்த முடிவுதான் மலப்பை. அது இங்கிலீஷில் ரெக்டம் (Rectum) என்று குறிக்கப்படுகிறது. அதன் கீழ் ஆசனவாய் இருக்கிறது. அதை இங்கிலீஷில் எனஸ் (Anus) என்று குறிக்கிறார்கள்.

இந்தக் குடல் பெரிய குடல் என்று குறிக்கப்பட்டாலும், இது ஐந்து முதல் ஆறடி நீளந்தான் இருக்கிறது. ஆனால் இதன்பருமன் இரண்டரை அங்குலம் இருக்கும். சிறு

குடலின் பருமன் ஓரங்குலம் என்று நாம் முன்னரே குறிப்பிட்டோம். இந்தப் பருமன் வேறுபாட்டினாலேயே இரண்டும் சிறுகுடல், பெரிய குடல் என்று வித்தியாசப்படுத்தப்பட்டிருக்கின்றன. நம் அடிவயிற்றின் நடுவில் உள்ள சிறு குடல் வலது பக்கமாகப் பெரிய குடலில் வந்து சேருகிறது. அவ்வாறு சேருமிடத்தின் அடியில் ஒரு கூர் நீட்டிக்கொண்டிருக்கிறது. அது வர்மிபோரம் அப்பெண்டிக்ஸ் (Vermiform appendix) என்று குறிக்கப்படுகிறது. அந்தக் கூர் சில சமயங்களில் வேக்காடடைந்துவிடுவதுண்டு. அந்த நோயை இங்கிலீஷில் அப்பெண்டிஸிடிஸ் (Appendicites) என்று சொல்லுகிறார்கள். சில வருஷ காலத்திற்கு முன்னர் மகாத்மா காந்திக்கு குடலில் ஆபரேஷன் செய்யப்பட்டது நினைவிருக்கலாம். அதை அப்பெண்டிஸிடிஸ் என்று கூறினார்கள். அதாவது, இந்தக் கூரின் வீக்கம்.

பெரிய குடலின் உள்புறத்தில் வில்லி என்னப்படும் நூலிழை போன்ற முளைகள் இல்லை. பெரிய குடலிற்குள் ஜீரணவேலை எதுவும் நடைபெறுகிற தில்லையானாலும், அங்கு தள்ளப்படும் வஸ்துவில் மிச்சமிருக்கும் ஈரப் பசையை பெரிய குடலின் உள் பாகம் இழுத்துக்கொண்டு மலத்தை கெட்டியாக்கி அடியில் தள்ளுகிறது. இந்தக்குடலின் உள் பாகத்தில் நீர்க்கசிவு சொற்பமாக உண்டாகிறது. அதன் பிசுக்கு மலத்தை நகர்த்தி விடுவதற்கு உபயோகப்படுகிறது.

கிராமங்களில் எருவிற்காக சிலர் கால்நடைகளின் சாணியை மேடாய்க் குவித்து வைத்திருப்பார்கள். அதிலிருந்து நாக்குடை என்னப்படும் காளான் மிக சீக்கிரத்தில் முளைத்துப் பலவாய்ப் பெருகிப்போவதுண்டு. நாம் உண்ணும் ஆகார வஸ்துக்கள், பலகாரங்கள் முதலியவற்றிலும் சில சமயங்களில், பஞ்சுபோன்ற பூஞ்சற்காளான் நிறைந்து

போவதை நாம் காண்கிறோம். இதை இங்கிலீஷில் பாக்டீரியா (Bacteria) என்று குறிக்கிறார்கள். நாம் உண்ணும் ஆகாரத்தோடு கூட, இந்தக் காளானும் நுட்பமான அளவில் உள்ளே சென்றுவிடுகிறது. நம் வயிற்றில் உற்பத்தியாகும் ஹைட்ரோகுளோரிக் ஆஸிட் இந்தக் காளானைப் பூர்த்தியாய் அழித்துவிடுகிற தில்லையாகையால், அது குடலுக்குள் போய், அங்கிருக்கும் கார க்ஷார ரஸத்தின் உதவியால் ஏராளமாய்ப் பெருகிவிடுகிறது.

இவ்வாறு குடலுக்குள் செல்லும் காளான் ஜீரண இரஸங்களுக்கு சிறிதளவு அநுகூலமாயிருக்கிறது. எப்படியென்றால், காய்கறி முதலிய சாக பதார்த்தங்களில் ஸெல்லுலோஸ் (Cellulose) என்னும் ஒரு ஸத்து இருக்கிறது. அது நம் உடம்பிலுள்ள எந்த இரஸத்தினாலும் கரையக் கூடியதல்ல. ஆனால் காளான் அந்த ஸெல்லுலோஸை அழித்து வாயுவாக மாற்றிவிடுகிறது. இந்த விஷயத்தில் காளான் சிறிதளவு நம் ஜீரணத்திற்கு உதவியாயிருக்கிறது. ஆனால், காளான் குடலில் அதிகமாகச் சேர்ந்தால், அதனால் வேறு பல தீங்குகள் உண்டாகிவிடுகின்றன. ஏனென்றால், அது மாமிசம், பருப்பு, ஸெல்லுலோஸ் முதலியவற்றை அழித்து வாயுவாக மாற்றிவிடக் கூடிய சுபாவமுடையதாகையால், அதனால் உடம்பில் வாயு உபத்திரவங்கள் பல உண்டாகிவிடுகின்றன. இரத்தமும் கெட்டுப்போகிறது.

காய்கறிகளை ஏராளமாய் உண்போருடைய சரீரம் வாத சரீரமாய் உப்பிப்போவதற்கு பெரும்பாலும் இதுவே காரணம். குடலில் காளான் ஏராளமாகப் பெருகி வாயுவை, ஓயாமல் உற்பத்தி செய்துகொண்டே இருப்பதால் உடம்பில் தொந்தி தொப்பைகள் ஏற்பட்டு பூதாகாரமானதோற்றம் உண்டாகிவிடுகிறது. காளானிலிருந்து உற்பத்தியாகும்

பல கிருமிகளிலிருந்து நம் உடம்பில் பலவகையான நோய்கள் உண்டாகின்றன.

ஆதலால், ஒவ்வொருநாளும் தவறாமல் மலம் கழிக்கும் வழக்கத்தை நாம் மிக அவசியமாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனென்றால், பழைய மலம் நம் குடலில் தேங்கியிருப்பதனால், ஏராளமான விஷ வாயுக்கள் உற்பத்தியாகி, பல இடங்களிலும் நுழைந்து வேதனைப்படுத்தும். இரத்த ஓட்டத்தின் போக்கு தடைப் பட்டுப்போகும். அதனால், பசி மந்தம், தலைக்கனம், தலைநோவு, அஜீரணம், வயிற்று உப்புஸம், நாக்கில் முள்கள் காணப்படுதல், துர்க்கந்தமான மூச்சுக்காற்று முதலிய அறிகுறிகள் காணப்படும். சரீர ஆரோக்கியமும், அதன் ஊக்கமும் மலினமடைந்துவிடும். உடம்பின் வன்மை குறைந்துபோவதால், வேறு பல நோய்கள் தொற்றிக் கொள்வதற்கு இடம் ஏற்படும். மலம் இறுகிப்போய் அடிக்குடலில் உராய்ந்துகொண்டே இருப்பதால், குடல் வழுவுண்டு போவதுபற்றி, அஜீரணக்கழிச்சல் ஏற்படுவதும் உண்டு. மலச்சிக்கல் நிரந்தரமாய் நிலைத்துவிடுமானால், மூல உபத்திரவம் முதலிய கடுமையான நோய்கள் பலவும் உண்டாகிவிடுவது நிச்சயம்.

நாம் இதுவரையில் விவரித்த ஜீரணக் கால்வாயில் பல இடங்களில் பலவிதமான இரஸ நீர்கள் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி உற்பத்தியாகி, ஆகாரத்தை ஒழுங்காக ஜீரணித்து, ஸத்தை உடம்பில் சேர்த்து, சக்கையை வெளிப்படுத்தவேண்டுமென்பது தெளிவாய்த் தெரிகிறதல்லவா? இந்த நீண்ட கால்வாயில் நடைபெறும் சிக்கலான வேலை சில இடங்களின் ஒழுங்கீனத்தினால் கெட்டுத் தாறுமாறாகி விடுகிறது அதனால் அஜீரணம், வயிற்று வலி, புளித்த ஏப்பம் முதலிய எண்ணிக்கையற்ற பிணிகள் ஏற்பட்டுப் போகின்றன.

சிலருக்கு வயிற்றில் எப்போதும் ஒருவிதமான எரிச்சல் தோன்றி கமகமவென்று உபத்திரவப் படுத்திக்

கொண்டே இருக்கும். புளித்த எப்பமும் உண்டாகும். இரைப்பையில் உற்பத்தியாகும் ஹைட்ரோகுளோரிக் ஆஸிட் அளவிற்கு மிஞ்சி அதிகமாய் உண்டாகிவிடுவதால் இந்த உபத்திரவம் உண்டாகிறது. ஸோடா உப்பைத் தண்ணீரில் கலந்து பருகுவதால், இது குணப்படும்.

நம் உடம்பின் ஜீரணக் கால்வாயின் உள்ளீடாய் அமைந்திருக்கும் மழமழப்பான ஜவ்வுத்தோல் வழுவுண்டு போவதுபற்றி, இறுகலான பிசின்போன்ற கபம் உண்டாக, அதனால், ஜீரண வேலை குந்தகப்பட்டுப் போவதால் பெரும்பாலும் அதனாலேயே இரைப்பையின் ஜீரண வேலை ஒழுங்கீனப் பட்டுப்போகிறது. இவ்விதமான நிலைமையிலிருப்போர் ஆகாரம் உண்பதற்கு முன்னர் ஒரு குவளை வென்னீரை உட்கொண்டால், ஷை கபம் கீழே தள்ளப்பட்டுப் போகும். இரைப்பைக்குள் இருக்கும் துவாரங்களால் புளிப்பு இரஸம் சரியான அளவில் உற்பத்தியாகும்.

இம்மாதிரி உள்ளீட்டுத்தோல் வழுவுண்டு போவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஆகாரத்தை வாயால் நன்றாக மெல்லாமல், அவசர அவசரமாய் விழுங்குவதால், அதில் கெட்டியாயிருக்கும் பாகம், இரைப்பையில் உள்ள நுட்பமான உள்ளீட்டில் அழுந்தி, அது வழுவுண்டு போகும்படி செய்கிறது. அதேபோல, பற்களிலிருந்து உள்ளே போகும் ஊற்றை முதலிய விஷ வஸ்துக்கள், அமிதமான மசாலை, கடுகு முதலியவை, உரமான லாகிரி வஸ்துக்கள், உரமான தேத்தண்ணீர் முதலியவைகள் இரைப்பையின் நுட்பமான உள்ளீடு வழுவுண்டுபோகச் செய்கின்றன. எனவே, இவ்விதமாக உள்ளீட்டில் வேக்காட்டை உண்டாக்காதபடி உணவை ஒழுங்குப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சுலபமாக ஜீரணித்துக்கொள்ள சக்தியற்ற பலஹீனர்கள், "சொற்ப சொற்பமாய்ப் பல தடவைகளில் நிதானமாய் உண்ணவேண்டும்" என்பதே அவர்கள் முக்கியமாகக் கடைப்பிடிக்கவேண்டிய விதி.

விஞ்ஞான ஆராய்ச்சி

அத்தியாயம்—7

ஓசையும், சங்கீதமும்

(தொடர்ச்சி)

வினு:—ஒரு பொருளின் அதிர்ச்சி, காற்று முதலிய வஸ்துக்களின் மூலம் பரவி, நமது செவிகளில் தாக்கும் போது, நாம் ஓசையை உணர்கிறோம். அதே ஓசை காதுகளுக்கு இன்பகரமான சங்கீதமாய் எப்படி மாறுகிறது?

விடை:—ஒருபொருளின் அதிர்ச்சி காற்றைத் தாக்கும் போது, ஒரு குறித்த ஏற்ற இறக்க ஒழுங்கைப் பின்பற்றி அது தாக்குமானல், அதனுல் நாம் நமது விருப்பப்படி சங்கீத ஓசையை உண்டாக்கலாம். ஒழுங்கான ஏற்ற இறக்கமில்லாமல் தாறுமாருன முறையில் ஒருபொருள் காற்றைத் தாக்குமானல், அது இன்பம் பயக்காத வெறும் ஓசையாயிருக்கிறது. உதாரணமாக, ஒரு பிடில் வாத்தியத்தில் பயிற்சிபெற்றவர் அதை எடுத்து வைத்துக்கொண்டு வில்லைப் போட்டால், அவர் ஏற்கனவே முன்னோரால் நிர்ணயிக்கப்பட்ட வழியில் அதைப் போடுவாராதலால், அவர் ஆரம்பிக்கும்போதே இன்பகரமான ஓசை உண்டாகத் தொடங்குகிறது. பிடில் வாத்தியத்தில் பயிற்சியடையாதவர் அதில் வில்லைப்போட்டு வாசிக்கத்தொடங்கினுல், ஒரு குறித்த வழியைப் பின் பற்ருமல் வில்லும் விரல்களும் தாறுமாருய்ப்

போகுமாதலால், அதனால் உண்டாகும் ஒலி செவிகளுக்கு இன்பம் பயக்காத வெறும் ஓசையா யிருக்கும்.

வினா:—வெறும் ஓசை செய்வதிலும், சங்கீதம் பாடுவதிலும், மெதுவான ஓசையும், உரமான ஓசையும் எப்படி உண்டாகின்றன?

விடை:—அதிர்ச்சி சொற்பமாகவோ, அல்லது, சிதறிப் போனதாகவோ இருந்தால், ஓசை மெதுவாகக் கேட்கும். அதிர்ச்சி ஏராளமாகவும், ஒருமுகப்பட்டும் வரும் பட்சத்தில் ஓசை உரமாகக் கேட்கும். உதாரணமாக, புருஷருடைய தொண்டை அகன்றிருப்பதால், அவர்களுடைய குரல் இறைசலாகக் கீழ்ஸ்தாயியில் பேசுகிறது. சில ஸ்திரீகளுடைய தொண்டை குறுகலாயும், இறுகலாயு மிருப்பதால், அவர்களுடையது கீச்சுக்குரலாய் கணீரென்று மேல்ஸ்தாயியில் த்வனிக்கிறது.

வினா:—அப்படியானால், ஒருமுகப்பட்டு உரமாக வரும் கீச்சுக்குரலோசை காற்றில் அதிக விசையோடு செல்லுமோ?

விடை:—இல்லை. மேல்ஸ்தாயி ஓசையும், கீழ்ஸ்தாயி ஓசையும் ஒரே விகிதப்படிதான் செல்லும்; ஆனால் மேல்ஸ்தாயி ஓசை ஏராளமாகவும், ஒருமுகப்பட்டும் செல்வதால், அது அதிக தூரம் கேட்கும். கீழ்ஸ்தாயி ஓசை சொற்பமாய் ஒருமுகப்படாமல் வருவதால், அது அதிக தூரம் கேட்கிறதில்லை. ஒரு குளத்தில் நாம் ஒரு சிறிய பருக்கைக் கல்லைப் போட்டால், அதனால் உண்டாகும் அலைகள் சொற்ப தூரத்தோடு மறைந்துபோகின்றன. பெரிய கல்லைப்போட்டால், அதனால் உண்டாகும் அலைகள் குளத்தின் கரைவரையில் போகின்றன.

வினா:—அப்படியானால், தணிவான ஓசையை நாம் கேட்கும்போது, நம் செவிகளில் காற்றின் தாக்கு சொற்பமாயிருக்கும்; கீச்சுக்குர லோசையைக் கேட்கும்போது, காற்றின் தாக்கு அதிகமாயிருக்கும்.

விடை:—முன்னதில், சிறிய தொகையான காற்றணுக்களே நம் செவிகளில் தாக்கும்; பின்னதில் ஏராளமான அணுக்கள் வந்து தாக்கும்; அதாவது முன்னதில் நம் செவிகள் சொற்பத்தொகையான அடிகளையே பெறும்; பின்னதில் அதே காலத்தில் நம் செவிகள் ஏராளமான அடிகளைப் பெறும்.

வினா:—சங்கீத வித்வான்கள் பல மாதிரியான இராகங்களைப் பாடுகிறார்களே; அவற்றில் வேற்றுமை எப்படி உண்டாகிறது?

விடை:—நம் செவிகளில் தாக்கும் காற்றணுக்களின் தொகையும், அவற்றின் அடர்த்தியும், அவற்றின் துரிதகதியும் பல விதங்களில் அதிகப்பட்டும், குறைந்தும் மாறுபடுவதால், வெவ்வேறான இராகங்கள் உண்டாகின்றன.

வினா:—அப்படியானால், தோடி இராகத்தை எவர் பாடினாலும், நம் செவிகளில் வந்து படும் அடிகள் ஒரே மாதிரியாகத்தானே இருக்கும். ஒருவருடைய ஓசை மாதிரியே இன்னொருவருடைய ஓசை ஏன் இருப்பதில்லை?

விடை:—ஒரு மனிதருடைய முகத்திற்கும், இன்னொரு மனிதருடைய முகத்திற்கும் சொற்ப வித்தியாசமாவதிருப்பதுபோல, ஒருவருடைய குரல்வளை, தொண்டை, வாய், நாசித்துவாரங்கள் முதலியவற்றிற்கும் இன்னொருவருடைய குரல்வளை முதலியவற்றிற்கும் சொற்பமாகிலும் வேறுபாடு இருக்கிறது. ஆகவே அவரவர் பாடும்போது அதனால் உந்தப்படும் காற்றணுக்களும், அதனால் உண்டா

கும் ஓசையலையும் வெவ்வேறு அளவும், வெவ்வேறு உரமும் உடையதாயிருப்பதால், ஒருவருடைய குரலோசை போல், இன்னொருவருடைய குரலோசை இருப்பதில்லை.

விஞ:—குரலோசை விஷயத்தில் மனிதருக்கு மனிதர் சொற்பமாகிலும் வேற்றுமை இருக்கிறது. ஆனால், கிராமபோன் என்னப்படும் இயந்திரம், ஒருவருடைய குரலொலியை கிட்டத்தட்ட அதே மாதிரி உண்டாக்கிக் காட்டுகிறதே. மனிதரைவிட, உயிரும், உணர்ச்சியும் அறிவுமில்லாத இயந்திரம் எவ்வளவு அபூர்வமான காரியத்தைச் செய்கிறது? அது எதனால் அப்படிச் செய்கிறது?

விடை—ஒரு மனிதர் பாடும்போது காற்றின் அணுக்கள் பல வகையாக அதிர்ந்து, நம் செவிகளில் வந்து உதைந்து நமக்குப் பலவகையான ஒலியுணர்ச்சியை உண்டாக்குகின்றன. நம் செவிகளுக்குள், ஓசை வந்து உதைவதற்கு, மெல்லிய ஜவ்வுத்தோல் திரையொன்று குறுக்கில் பொருத்தப்பட்டிருக்கிறது. ஒருவர் மத்தள மடிக்கும்போது, அவரது கை தோலில் பட்டு ஓசையை உண்டாக்குவதுபோல, காற்றின் அதிர்ச்சி நம் செவிகளுக்குள்ளிருக்கும் ஜவ்வுத்திரையில் மோதி, பலவகையாக உதைந்து, அதை நாம் உணரும்படி செய்கிறது. நம் செவிகளில் ஓசையின் அதிர்ச்சி உதையுமிடத்தில் உள்ள திரை டிம்பனம் (Tympanum) என்று குறிக்கப்படுகிறது. அதில் மூன்று சிறிய எலும்புகள் இருக்கின்றன. காற்றின் அதிர்ச்சி அவ்வெலும்புகளில் உதையுமானால், அவற்றிலும் அதிர்ச்சி உண்டாகிவிடுகிறது. அதை ஸ்பரிச நாடிகளின் உதவியால் நம் மூளை உணருகிறது. ஷை டிம்பனத்திற்கு பதிலாக, அரக்கினால் ஆன ஒரு தகட்டை சிறிதளவு இளக்கிக்கொண்டு, ஓசையின் அதிர்ச்சி அதில் படும்படி செய்து, அதை நகர்த்தி

நகர்த்திச் சுழற்றிக்கொண்டே இருந்தால், தொடர்ச்சியாக வரும் ஒலியதிர்ச்சி அரக்கில் வெவ்வேறிடத்தில் தொடர்ச்சியாகப் பதிந்து, பல வடிவமான பள்ளங்களை உண்டாக்கிக் கொண்டே போகும். உடனே அரக்கு காய்ந்து இறுகிப் போகுமாதலால், அதிர்ச்சிப் பள்ளங்கள் அப்படியே நின்றுவிடும். அந்த அரக்குத் தகடுதான் கிராமபோன் தகடுகள் (பிளேட்டுகள்) தயாரிப்பதற்கு அஸ்திவாரமானது. அந்த அஸ்திவாரத்தை வைத்துக்கொண்டு மெல்லிய தாமிரத் தகட்டில் ஓர் அச்சுத் தயாரித்து, அதிலிருந்து, ஆயிரக்கணக்கான பிளேட்டுகளை சுலபத்தில் தயாரித்து விடுவார்கள்.

விஞ:—அரக்கில் ஏற்படும் பதிவு மிக நுட்பமாகத் தானே இருக்கும். அதற்கு அச்சு எப்படித் தயாரிக்கிறது? கிராமபோன் பிளேட்டில் ஊசி படுவதால், அது எப்படி ஆதி ஒலியை அப்படியே உண்டாக்குகிறது? கிராமபோன் பிளேட் சுற்றும்போது அது ஒரு மரப்பெட்டியின்மேல் வைக்கப்பட்டிருக்கிறதே; அந்தப் பெட்டியிலிருந்துதான் ஓசை உண்டாகிறதோ?

விடை:—கிராமபோன் இயந்திரத்தில் அடிப்பெட்டி பெரிதாயிருக்கிறதே யன்றி, அதற்குள் முக்கியமான விசை எதுவுமில்லை. கிராமபோன் பிளேட்டைச்சுற்றிவிடும் 'வில்' (Spring) ஒன்றுதான் அதற்குள் இருக்கிறது. கிராமபோன் இயந்திரத்தில் ஊசி சொருகப்படுமிடத்திற்குமேல், ஒரு சிறிய சகடைபோல், வட்டமாகவும், சப்பையாகவும் காணப்படும் சிறிய பெட்டிதான் உயிர்நிலையான கருவி. அது ஓசைப்பெட்டி (Sound Box) என்று குறிக்கப்படும். ஓசையைப் பெரிதாக்கி வெளிப்படுத்தும் வாய் (Horn) இருக்கிறதல்லவா. அது அடியில் வளைந்து, பிளேட்டின்மேல் போய்நிற்கும் மூனையில் இந்த ஓசைப்பெட்டி பொருத்தப் பட்டிருக்

கிறது. அதில்தான் ஊசி சொருகப்படுகிறது. அந்தச் சிறிய ஓசைப் பெட்டிக்குள் மெல்லிய அப்பிரேகத் தகடு ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அது நம் செவியின் நடுவில் டிம்பனம் என்னும் குறுக்குத் திரை அமைக்கப் பட்டிருப்பது போல், அந்த ஓசைப்பெட்டிக்குள் அமைக்கப் பட்டிருக்கிறது. பாட்டு பதிக்கப்பட்டுள்ள பிளேட்டில், காற்றின் அதிர்ச்சி தொடர்ச்சியாகப் பதிந்து செய்திருக்கும் தாறுமாறான பள்ளத்தில் ஊசியின் முனையை வைத்து, பிளேட்டைச் சுற்றிவிட்டால், ஷை பள்ளம் பாட்டின் சரியான வடிவமடங்கிய பதிவாதலால், அந்தப் பாட்டிற்குரிய அதிர்ச்சியை அது ஊசியின் முனைக்கு உண்டாக்கிவிடுகிறது. ஊசியில் உண்டாகும் அதிர்ச்சி, அந்த ஓசைப் பெட்டிக்குள் இருக்கும் மெல்லிய அப்பிரேகத் தகட்டில் தாக்கி, ஓசையை எழுப்புகிறது. அந்த ஓசை, கீழே சுழலும் பிளேட்டில் பதிக்கப் பட்டிருக்கும் பாட்டைப்போலவே உண்டாகிறது. அது ஒலி பெருக்கிக் கருவிக்குள் போய், அதன் வாய் (Horn) மூலமாய் வரும்போது, மனிதர் பாடுவதுபோலவே இருக்கிறது. உண்மையில் நாம் கேட்பது அப்பிரேகத் தகட்டின் ஓசை; பாடகரின் தொண்டையில் இருந்து கிளம்பும் ஒலியின் அதிர்ச்சி காற்றின் அணுக்களுக்கு மாறி, அது அரக்குத் தகட்டில் தாறுமாறாகப் பதிந்திருக்கிறது. அந்தப் பதிவு அதே மாதிரியான அதிர்ச்சியை ஊசிக்கு உண்டாக்குகிறது. அந்த ஊசியின் அதிர்ச்சி அப்பிரேகத் தகட்டில் தாக்கி, பாடகரின் தொண்டையில் எவ்விதமான ஒலி யுண்டாயிற்றோ, அதே மாதிரியான ஒலி உண்டாகும்படி செய்கிறது. அது பெரிதாக்கப்பட்டு வாயின்மூலம் வெளியில் வருகிறது. ஆகவே, கிராமபோனில் ஜீவாதாரமான விசை ஊசியும், அப்பிரேகத்தகடும் பொருத்தப் பட்டிருக்கும் சக்

கர வடிவமான சிறிய உருளைப்பெட்டிதான். அடியில் இருக்கும் பெரிய மரப்பெட்டி, பிளேட்டைச் சுற்றிவிடவும், அதை அழகாய் ஏந்திக் கொண்டிருக்கவும்தான் உபயோகப்படுகிறது. இந்த விசையின் ரந்திரத்தை நாம் விளக்கியபின் இது சர்வ சாதாரணமாகத்தான் தோன்றும். ஆனால், இதை முதன் முதலில் யூகித்துக் கண்டுபிடித்து உற்பத்தி செய்ததுதான் எல்லாமனிதராலும் செய்ய இயலாத அதிமாநுஷச் செய்கையென்று நாம் கருதவேண்டும். அத்யாச்சரியகரமான வேலைகளைச் செய்யும் இயந்திரங்களெல்லாம் அநேகமாய் இப்படியே சுலபத்தில் சாதிக்கக் கூடியவையாகவே இருக்கின்றன.

வினா:—கிராமபோனுக்கு உபயோகிக்கப்படும் ஊசிகளில் கூட வித்தியாசம் உண்டோ?

விடை:—ஊசி தடிப்பாயும், குட்டையாயுமிருந்தால், அது வளையாமல் விரைப்பாக நிற்கிறது. அதனால் ஏற்படும் அதிர்ச்சி அப்பிரேகத் தகட்டில் உரமாக மோதுமாதலால், அப்போது உண்டாகும் ஓசை கணீரென்று சுத்தமாகக் கேட்கும். ஊசி வளையக் கூடியதாயிருந்தால், ஓசை தெளிவாயிராது. இதைக் கருதி எஃகினாலான ஊசிகளே பெரும்பாலும் உபயோகிக்கப்படுகின்றன. ஊசி அகப்படாவிடில், முள்ளம்பன்றியின் முள், வேலி முள் முதலியவைகளை வைத்துக்கூட அதிர்ச்சியை உண்டாக்கிவிடலாம். அப்போதும் பாட்டு உண்டாகும்.

வினா:—கருப்பாயிருக்கும் பிளேட்டுகளை எப்படித் தயாரிக்கிறார்கள்?

விடை:—கந்தைத்துணிகள், ரோஜன், டிரிபோலி பவுடர் என்னப்படும் பாலிஷ், லாம்ப்ளாக் என்னப்படும் கருப்பு வர்ணம், குங்கிலியம் ஆகியவற்றை அரைத்து, மிக நுட்ப

மான பொடியாக்கி தகடாகச்செய்து, சூடேற்றப்பட்ட இரண்டு கல்லுருளைகளின் இடையில் கொடுத்து நெருக்கினால், அவை கெட்டியான தகடுகள் ஆய்விடுகின்றன. சூடு தணிந்த பிறகு அவை அழுத்தமாய் இறுகிப்போகின்றன.

வினா:—முதலில் இளகலான அரக்குத் தகட்டில் எடுக்கப்படும் பாட்டுப்பதிவை அதிலிருந்து இந்த இறுகலான கருப்புத் தகட்டிற்கு எப்படி மாற்றுகிறது?

விடை:—அரக்குத் தகட்டின்மேல், நிரம்பவும் மெல்லியதாயிருக்கும் தாமிரத் தகட்டை வைத்து, மின்சார சக்தியை உபயோகித்தால், அரக்கிலிருக்கும் நுட்பமான பள்ளங்களுக்கு சரியாக தாமிரத்தகட்டின் அடிப்பக்கத்தில் நுட்பமான பிதுக்கம் உண்டாகிவிடும். அதாவது அரக்கில் ஏற்பட்டிருக்கும் பள்ளத்தில் சரியாகப் பதியக்கூடிய எதிரிடையான மேடுகள் தாமிரத்தகட்டின் ஒருபக்கத்தில் உண்டாகிவிடும். அந்தத் தாமிரத்தகடுதான் அச்சு. அது வளையாமல் விரைப்பாயிருக்கும் பொருட்டு அதை கெட்டியான ஓர் எஃகுத் தகட்டின்மேல் வைத்து மூடுக்கி வைத்துக்கொண்டால், அந்த அச்சின் உதவியால் ஆயிரக்கணக்கில் கருப்பு பிளேட்டுகளை சுலபத்தில் தயாரித்துவிடலாம். இந்த அச்சில் சூடேற்றி அதன்மேல் கருப்புப் பிளேட்டை வைத்து, ஓர் இயந்திரத்தில் வைத்து முடுக்கினால், அச்சில் உள்ள மேடுகளுக்கு சரியான பள்ளங்கள் கருப்புப் பிளேட்டில் உண்டாகிவிடும். ஒரு பிளேட்டின் விலை ரூ 2, ரூ 3 என்று ஏற்படுத்துகிறார்களானாலும், அதைச் செய்வதற்கு நான்கணாகூடப் பிடிக்காது. பாட்டின் மகிமையால், கந்தைத்துணிக்கும், குங்கிலியத்திற்கும், ரோஜனுக்கும், அவ்வளவு அதிக விலை ஏற்பட்டுப்போகிறது.

வினா:—நாம் சங்கீதத்தைக் கேட்டால், அது செவிகளுக்கு இன்பகரமாயிருக்கிறது. ஓசையைக் கேட்டால், அது துன்பகரமாயிருக்கிறது. திடீரென்று மிக அருகிலிருந்து உண்டாகும் ஓசையால் சில சமயங்களில் காதடைப்பு உண்டாகிவிடுகிறது. காது செவிடாயும் போவதுண்டு. இடி முதலிய பலத்த ஓசையால், ஜன்னல் கண்ணாடிகள்கூட நொருங்கிப்போகிறது. இதிலிருந்து, ஓசை வேலை செய்யக்கூடிய உரம் உடையதாயிருக்கிறதென்பது தெரிகிறது. அப்படியானால் ஓசை என்பது ஏதேனும் ஒரு வஸ்துவா?

விடை:—அது எப்படி வஸ்துவாகும். ஒரு பொருளிலுள்ள அணுக்கள் ஆடுவதால் உண்டாகும் அதிர்ச்சி பக்கத்திலிருக்கிற காற்றின் அணுக்களுக்கு மாறுகிறது. அந்த அதிர்ச்சி நெடுகிலும் வந்து நமது செவிகளில் தாக்குகிறது. வழி நெடுகிலும் இருந்த காற்றின் அணுக்கள் அங்கங்கு இருக்கின்றன. கடைசியாக உள்ள அணுக்கள் நம் செவிகளில் தாக்கி அதிர்ச்சியை டிம்பனமென்னும் ஜவ்வுத் தோலிற்கு உண்டாக்குகின்றன. நம் உடம்பிற்குள் புதிய வஸ்து எதுவும் புகவில்லை என்பதை நாம் ஒரு யுக்தி செய்து தெரிந்துகொள்ளலாம். மிக நுட்பமான வித்தியாசங்களைக் காட்டும் ஒரு தராசின் ஒரு தட்டில் நாம் உட்கார்ந்து, நமக்கு சரியான கனத்தை இன்னொரு தட்டில் வைத்து, இரண்டு தட்டுகளும் சமமாக நிற்கும்படி செய்வோம். பிறகு நம்முடைய செவிகளில் தண்ணீரை விட்டுக்கொள்ளுவோம். நாம் இருக்கும் தட்டு உடனே கீழே தணியும். அதாவது, இன்னொரு புதிய வஸ்துவான ஜலம் நம் உடம்பில் சேர்வதால், அதன் கனம் தட்டைக் கீழே தாழ்த்துகிறதென்பது நிதரிசனமாகத் தெரிகிறது. அவ்வாறு நாம் தண்ணீரை விடவில்லை. அந்த சமயத்தில் நமக்குப் பக்கத்தில் பாட்டின் ஓசை உண்டாகி நம் செவிகளில் தாக்கியபடி இருக்கிற

தென்று வைத்துக் கொள்ளுவோம். அப்போது, நாமிருக்கும் தட்டு கீழே தணியுமா? எள்ளளவுகூடத் தணியாது. ஓசை நம் செவிகளில் உள்ள ஜவ்வுத்தோலில் மோதி அதிர்ச்சியை உண்டாக்கும். அந்த அதிர்ச்சி நம் உடம்பில் உள்ள அணுக்களின் அதிர்ச்சியேயன்றி, வேறு புதிய வஸ்துவின் சேர்க்கையன்றாகையால், நம் கனம் அதிகரிக்கிறதில்லை.

அத்தியாயம்—8

சூடு

வினா:—சூட்டை என்னவென்று சொல்வது? அதுகூட ஒரு வஸ்துவல்லவா?

விடை:—அதுவும் வஸ்துவல்ல. நம்மை நாம் நிறுத்துக்கொண்டதுபோல, ஓர் இரும்புக் கம்பியை நாம் உலையில் போட்டுப் பழுக்கக் காயவைத்து, அதை ஒரு தராசுத்தட்டில் வைத்து நிறுத்து, பிறகு அதன் சூட்டைத் தணிய வைத்து, மறுபடி நிறுத்துப் பார்த்தால், அது அப்போதும் அதே நிறையாகத்தான் இருக்குமன்றி, அதன் கனம் எள்ளளவும் குறையாது. எனவே, சூடு ஒரு வஸ்து வல்லவென்பது இதனால் தெரிகிறதல்லவா.

வினா:—அப்படியானால் சூடு என்பது என்ன?

விடை:—நாம் ஒரு சேமக்கலத்தைத் தட்டி ஓசை உண்டாக்கினால், அதன் அணுக்கள் எல்லாம் அதிர்வது போல, ஒரு வஸ்துவில் சூடேற்றினால், அதன் அணுக்கள் இன்னொரு புதுமாதிரியான அதிர்ச்சியை யடைந்து அபாரமான விசையில் நடுங்குகிறது. அதனால் அது சுடுகிறது. நாம் நமது இரண்டு கைகளையும் ஒன்றோடொன்று விசையாகத்

தேய்த்துக்கொண்டால், உடனே சூடுண்டாவது பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. தேய்ப்பதால் புதிய வஸ்து எதுவும் நம் கைகளில் உண்டாகிவிடவில்லை. ஆனால், அணுக்களின் அதிர்ச்சியினால், சூடு உண்டாகிவிடுகிறது. வஸ்துவின் அணுக்கள், நாம் கண்ணால் பார்க்க முடியாதபடி அவ்வளவு அதிக நுட்பமாயிருப்பதனாலும், அவற்றின் அசைவு நம் மனதால் பாவிக்க முடியாதபடி அவ்வளவு வேகமாய் நடைபெறுகிறதாகையாலும், சூடு உண்டாகும்போது உண்மையில் என்ன நடக்கிறதென்பதை கவனிக்க நம்மால் இயலுகிறதில்லை.

வினா:—ஒரு வஸ்து சூடேற்றப்பெற்றால், அதன் அணுக்கள் அதிர்கின்றன. அப்படியானால் அதிலிருந்து ஏன் ஓசையுண்டாகவில்லை? அந்த அதிர்ச்சி காற்றின்மூலம் ஏன் நம் செவிகளுக்குப் பாவி வரவில்லை?

விடை:—இரண்டிற்கும் முக்கியமான ஒரு வித்தியாசமிருப்பது பிரத்தியக்ஷமாகத் தெரியக்கூடியது. ஒரு சேமக்கலத்திலிருந்து ஓசையுண்டாகவேண்டுமானால், அதை ஒரு கட்டையாலோ, இரும்புத் துண்டாலோ தட்டவேண்டும். அந்தத் தட்டு, சேமக்கலத்திலுள்ள அணுக்களை ஒருவிதமாக உலுக்குகிறது. அதனால், திடீரென்று அதிர்ச்சியைப் பெறும் அணுக்கள் அந்த அதிர்ச்சியை திடீரென்று உரமாகக் காற்றின் அணுக்களுக்கு ஊட்டுகின்றன. அந்த உரமான அதிர்ச்சி காற்றின் மூலமாய் நம் செவிகளில் வந்து தாக்குகிறது. அதே சேமக்கலத்தைக் கொல்லன் உலையில் போட்டுப் பழுக்கக் காயவைக்கிறோம். அதில் கட்டை இரும்புத்துண்டு முதலியவை போன்ற இதர வஸ்து உரமாக வந்து மோதவில்லையாகையால், சேமக்கலத்தின் அணுக்கள் காற்றின் அணுக்களைத் தாக்குவதில்லை. சூடு சேமக்

கலத்தின் அணுக்களில் ஏற்றப்படும்போது, அணுக்களின் அதிர்ச்சி வேறுமாதிரியாயிருப்பதால், அது காற்றை அதிகமாய் பாதிக்கிறதில்லை. அதனால் உண்டாகும் வெளிச்சத்தின் அதிர்ச்சி நம் கண்களில் வந்து தாக்குகிறது.

வினா:—அப்படியானால் சூடு எப்படிப் பரவுகிறது?

விடை:—சூடாயிருக்கும் ஒரு வஸ்து எப்போதும் சூடாகவே இருப்பதில்லை; அது தன்னைச் சுற்றிலும், சூடற்றுக் குளிர்ந்திருக்கும் வஸ்துக்களுக்கு தன் சூட்டின் ஒரு பகுதியைப் பரப்பிவிடுகிறது. அவ்வாறு பரப்பப்படும் சூடு மூன்று வகைகளில் பரவுகிறது. (1) நாம் ஓர் இரும்புக் கம்பியின் ஒரு நுனியை அடுப்பில் வைத்து, இன்னொரு நுனியைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கிறதாக வைத்துக் கொள்வோம். நெருப்பு, அடுப்பில் இருக்கும் நுனிக்கு சூடேற்றிவிடும். சிறிது நேரத்தில் அந்தச் சூடு நெடுகிலும் பாவி இன்னொரு நுனிவரையில் வந்துவிடும். அதற்குமேல் நாம் அந்தக் கம்பியைப் பிடித்துக் கொண்டிருப்பது கூடாததாகிவிடும். இந்த விதமாய் சூடு ஒரு வஸ்துவின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குப் பரவுவதை இங்கிலீஷில் கண்டக்ஷன் (Conduction) என்று குறிக்கிறார்கள். இதை நாம் சூட்டின் வியாபகம் என்று வைத்துக் கொள்ளலாம். இதில் இரும்புக் கம்பியின் அணுக்கள் நகருவதில்லை; ஆனால் சூடு ஓர் அணுவிலிருந்து இன்னொன்றுக்குப் பாவிக் கடைசிவரையில் வருகிறது. கெட்டிப்.பதார்த்தங்களில் இந்த விதமாகத்தான் சூடு பரவுகிறது. (2) நாம் ஒரு பாத்திரத்தில் அரைப்பங்கு ஜலத்தை விட்டு, பாத்திரத்தை அடுப்பின்மேல் வைத்து, சூட்டை ஏற்றினால், அடியில் உள்ள அணுக்கள் முதலில் சூடேற்றப்பட்டு விரிந்து, மேல் மட்டத்திற்குப் போகின்றன. அப்போது மேலே உள்ள கனமான

அணுக்கள் கீழேவருகின்றன. உடனே அவற்றின்மேல் சூடு ஏறுகிறது. இந்த உதாரணத்தில், சூடே ஒவ்வோர் அணுவிற்கும் பரவிப் போகிறதில்லை. தண்ணீரின் அணுக்கள் மாறிமாறிக் கீழே போய் சூட்டை ஏற்றிக் கொள்ளுகின்றன. ஜலவடிவப் பதார்த்தங்களிலும், காற்று வடிவப் பதார்த்தங்களிலும், சூடு இந்த விதமாகப் பரவுகிறது. இவைகளின் அணுக்கள் சுலபத்தில் பிரிந்து போகக் கூடியவைகளாயிருப்பதால், முதலில் சூடேற்றப்பட்ட அணுக்கள் இலேசாய்ப்போய் அதே இடத்தில் இராமல் மேலே ஏறிவிடுகின்றன. கனமாயிருப்பவை கீழே வந்துவிடுகின்றன. இவ்வாறு அவைகளே ஸ்தானபேதமடைந்து மாறி மாறிசூட்டினிடம் போய் மரியாதை பெற்றுக்கொள்ளுகின்றன. இவ்விதம் சூடு பரவுவதை இங்கிலீஷில் கன்வெக்ஷன் (Convection) என்று குறிக்கிறார்கள். இதை நாம் அணுக்களின் நிரவல் என்று குறிக்கலாம் (3) இந்த இரண்டு வகைகளிலும் சேராத இன்னொரு வகையுமிருக்கிறது. சூரியனிடத்திலிருந்து நமக்கு சூடும் வெளிச்சமும் வேறுவிதமாக வருகின்றன. சூரியன் நாமிருக்குமிடத்திலிருந்து 930 லக்ஷம் மயில் தூரத்திலிருக்கிறது. ஆனால் அதிலிருந்து உண்டாகும் சூடும் வெளிச்சமும் எட்டு நிமிஷ காலத்திற்குள்ளாகவே இவ்வளவு அபாரமான தூரத்தைக் கடந்து நம்மிடம் வந்துவிடுகின்றன. பூமிக்குமேல் சுமார் நூறுமயில் தூரமே காற்றுப்படலம் பரவியிருக்கிறதென்று நாம் முன்னரே தெரிந்துகொண்டோம். இவ்வாறு சூரியனிடத்திலிருந்து வரும் சூடு அணுக்களுக்குப்பின் அணுக்களாய் சூடேற்றிக்கொண்டு வருவதானால், அது எட்டு நிமிஷ காலத்திற்குள் நம்மிடம் வருவதென்பது சாத்தியமானதாயிராது. சூரியனிடத்திலிருந்து நேர் கோடுகளாக

வரும் கிரணங்களின் மூலமாக சூடு உடனே பரவிவிடுகிறதென்பது பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. இதேபோல, அடுப்பு, விளக்கு முதலியவற்றிலிருந்தும் சொற்ப அளவில் சூடும், வெளிச்சமும் கிரணக் கோடுகளாய்ப் பரவுகிறதையும் நாம் பார்க்கிறோம். இதை இங்கிலீஷில் ரேடியேஷன் (Radiation) என்று குறிக்கிறார்கள். இதிலிருந்து நாம் இன்னொரு விஷயத்தையும் அநுமானித்துக் கொள்ளலாம். கிரணத்தின் மூலம் பரவும் சூட்டிற்கும், வெளிச்சத்திற்கும் காற்றின் உதவி அவசியமில்லையென்பது தெரிகிறது. ஆகாய வெளி முழுதிலும் 'இதர்' (Ether) என்னும் ஒரு வஸ்து பரவியிருப்பதாகவும், அது காற்றைவிட அதிக நுட்பமாயிருப்பதாகவும், அதன் மூலம் சூடும், வெளிச்சமும் ஒரு விநாடிக்கு 186,000 மயில் வீதம் ஓடிவருகிறதென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய வான சாஸ்திரத்தில், ஆகாயத்தின் தடிப்பிலிருந்தே காற்று முதலிய மற்ற நான்கு பூதங்களும் உண்டாகின்றனவென்ற விஷயம் காணப்படுகிறது. லக்ஷ்மி என்னப்படும் சகலமான செல்வங்களும் ஆகாயத்திலிருந்தே உண்டாகின்றனவென்றும், நம் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. நம் சாஸ்திரங்களில் 'இ' என்னும் எழுத்து லக்ஷ்மியைக் குறிக்கிறது. 'இதர்' என்றால், 'லக்ஷ்மியின் தரை', அல்லது, லக்ஷ்மியின் இருப்பிடமாகிய ஆகாய மண்டலம் என்ற பொருளைத் தருவதாகவும் நாம் கொள்ளலாம். நம் வான சாஸ்திர சங்கேத எழுத்துகள் எல்லா தேசங்களிலும் பரவியிருப்பது பிரத்தியக்ஷமாகத் தெரிவதால், 'இ' என்பது சகலமான பொருள்களுக்கும் மூலாதாரமான தஹராகாசத்தைக் குறிப்பதென்பது இதர தேசத்தாருக்குத் தெரிந்திருக்காதென்று நாம் நினைப்பது சரியல்ல.

வினா:—சூடு மூன்று விதமாகப் பரவுகிறதென்று தெரிந்துகொண்டோமல்லவா. இதில் முதல் வகையான சூட்டின் வியாபகத்தில், எல்லா வஸ்துக்களிலும், அது ஒரே மாதிரியாகப் பரவுகிறதா?

விடை:—இல்லை. நாம் ஓர் இரும்புக் கம்பியின் ஒரு நுனியைப் பிடித்துக்கொண்டு இன்னொரு நுனியை நெருப்பில் பிடித்தோமல்லவா. அவ்வாறு வேறு பல வஸ்துக்களை முறையே பிடித்தால் சிலவற்றில், சூடு பரவ நெடுநேரம் பிடிக்கிறது; சிலவற்றில் சூடு பரவுகிறதே இல்லை. ஷை கம்பிக்கு பதிலாக, நாம் அடுப்பில் வைத்து எரிக்கும் விறகையே வைத்துக்கொண்டு பார்ப்போம். விறகின் ஒரு பக்கத்தில் நெருப்புப் பற்றி எரிகிறது. இன்னொரு பக்கத்தை நாம் கையால் தொட்டு நகர்த்துகிறோம்; உள்ளே தள்ளுகிறோம். அப்போது நம் கையில் சூடே சிறிதும் உறைக்கிறதில்லை. அடுப்பின்மேல் இருக்கும் சூட்டுப் பாத்திரத்தை இறக்கிக் கீழே வைக்க வேண்டுமானால், இரண்டு கைகளிலும் துணியையோ, பிளானலையோ, அல்லது, இரண்டு விறகுச் சக்கைகளையோ பிடித்துக்கொண்டு தூக்கினால், பாத்திரத்தின் சூடு கையில் உறைக்கிறதில்லை. அவைகளுக்கு பதில் இரண்டு இரும்புத்தண்டுகளை வைத்துக்கொண்டு தூக்குவதாக வைத்துக்கொள்வோம். அப்போது பாத்திரத்தின் சூடு, மிக சீக்கிரத்தில் இரும்புத் தண்டுகளில் தாக்கி நம் கையைச் சுடவாரம்பிக்கிறது. இதிலிருந்து நாம் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிறோம். சில வஸ்துக்களில் சூடு உடனே வியாபித்துப் பரவிவிடுகிறது; சிலவற்றில் மந்தமாக வியாபிக்கிறது; சிலவற்றில் சூடு வியாபிக்கிறதே இல்லை.

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களால் இனிய மொழியில் இன்பரச நடையில் இப்பொழுதே எழுதி வெளியிடப்பட்ட மூன்று வினோதமான நாவல்கள் !!

1. தில்லை நாயகி

அல்லது

திகம்பரசாமியார் அந்தர்த்தானம்!

விலை ரூபா 2—4—0

2. நீலலோசனி

அல்லது

கனவில் மணந்த கட்டழகி?

விலை ரூபா 1—2—0

3. முத்துலக்ஷ்மி

அல்லது

வெடிகுண்டு மர்மம்!

விலை ரூபா 1—4—0

N. B.—ஒவ்வொன்றுக்கும் தபாற் செலவு 0—6—0 ஆகும்.

முக்கிய கவனிப்பு:—மேற்குறித்தவைகளில் எந்த நாவல் தேவையோ அதன் கிரயத்தை முன்பணமாக மணி ஆர்டர் செய்தால், தபாற் செலவு இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி

286, அப்பார் பில்டிங்ஸ், எஸ்பிளனேட், மதறாஸ்.

ஆரம்பமாய்விட்டது!!

ஒவ்வொரு மாதமும் ஒரு முழு நாவல்! "நவரசமாலிகா" என்னும் பத்திரிகைக்கு உடனே சந்தாதாரராய்ச் சேர்ந்துவிடுங்கள். வடுவூர் கே. துரைசாமி ஐயங்காரால் எழுதப்பட்ட பன்னிரண்டு புதுமையான நாவல்கள், மாதம் ஒன்றாக, உங்கள் வீடு வந்து சேரும்.

இதன் வருட (அதாவது 12 முழு நாவல்களின்) சந்தா ரூ. 8—0—0. ஆறு மாத (அதாவது 6 முழுநாவல்களின்) சந்தா ரூ. 4—8—0. சந்தாத்தொகை முன் பணமாக மணி ஆர்டர் செய்யவேண்டும்; வி. பி. யில் அனுப்பப்படுவதில்லை. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளி நாடுகளுக்கு ஒரு வருட சந்தா ரூ. 10-0-0. பிரதி மாதமும் வெளிவரும் ஒவ்வொரு நாவலும் தபால் பார்சல் மூலமாய் அனுப்பப்படும்.

நவரசமாலிகாவில், "நீலலோசனி" "முத்துலக்ஷ்மி" என்னும் இரண்டு நாவல்கள் வெளிவந்துவிட்டன. "கலியாண சுந்தரம்" என்னும் மூன்றாவது நாவல் 1935-ளு ஜனவரிமீ கடைசியில் வெளிவரும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி

286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.

199431

268

மலர் 1. இதழ் 1(

தமிழ்ப் பெருமாட்டி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1935
MADRAS

வடுவூர் கே. துரைஸாமி ஐயங்கார் பி.ஏ.

34-1-1
19431

விலை அணா 3.

தமிழ்ப் பெருமாட்டி

இது 1934ஆம் மார்ச் மாதத்திலிருந்து தொடங்கி, ஒவ்வொரு மாதத்திலும் வெளியாகும் மாதாந்தப் பத்திரிகை. தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஸ்ரீமான் வடுவூர்-கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள் பி.ஏ.யால் திருவல்லிக்கேணியில் நிறுவப்பட்டுள்ள ஓரியன்டல் ஹோம் யூனிவர்ஸிட்டி என்னும் தமிழ் ஸ்தாபனத்தின் ஆதரவில் இப்பத்திரிகை நடத்தப்படுகிறது. இது ஒவ்வொரு மாதமும் 25-யன்று வெளியிடப்படும்.

வடுவூர் கே. துரைஸாமி ஐயங்காரே இதன் ஆசிரியராயிருந்து சகல பொறுப்புகளையும் நேரில் வகித்து இதைப் பெரிதும் சிறப்பாக நடத்துகிறார்.

இதில் சாதாரண நாவலின் பக்க அளவில், அதாவது, டபில் கிரௌன் பதினாறாய் மடிக்கப்பட்ட அளவில், 96 பக்கங்கள் ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் அடங்கியிருக்கும்; இப்பக்கங்கள் பெரும் பாகத்திலும், திடீர்ப்பிரவேச மகாஜாலப் பரதேசியார் என்னும் மிக விநோதமான ஒரு தொடர் நாவல் எழுதப்பட்டு, பன்னிரண்டு மாதங்களில் முடிவுறும். இவ்வாறு முடிவுறும் நாவலின் விலை மாத்திரம் ரூ. 3-க்குமேல் பெறக் கூடியதாயிருக்கும்.

நவீனகம்

9-JAN 1935
MADRAS

அத்தியாயம்—8

ஆகாயப் பந்தலில் ஆடிய பதுமைகள்

திருநடன வைபவம்பிள்ளை மெயில் ரயிலில் முதலாவது வகுப்பு வண்டியில் ஏறி, ஒரு ஸோபாவில் உட்கார்ந்து கொண்டார். அவருடன் சென்ற சேவகன், பக்கத்தில் சேர்க்கப்பட்டிருந்த வேலைக்காரர் வண்டியில் உட்கார்ந்து கொண்டான். இரவு எட்டேகால் மணிக்கு வண்டி எழும்பூரை விட்டுச் சென்றது. பிள்ளையவர்கள் இருந்த முதல் வகுப்பு வண்டியில் ஆறு ஸோபாக்கள் போடப்பட்டிருந்தனவானாலும், அவர் ஒருவரே அதில் ஏறியிருந்தா ராதலால் மற்ற ஐந்து ஸோபாக்களும் காலியா யிருந்தன.

கதவிற்குப் பக்கத்தில் தாம் உட்கார்ந்து கொண்டால் எவரேனும் கதவைத் திறந்து கொண்டு ஏறுவது தமக்கு உபத்திரவமா யிருக்கு மென்று கருதி, ஒதுப்புறமாயிருந்த ஒரு ஸோபாவைப் பொறுக்கி, அதில் படுத்துக்கொண்

372-வது பக்கத்தில் காணப்படும், மைலாப்பூர், மைலாப்பூரில் என்னும் இரண்டு சொற்களையும் முறையே இராயப்பேட்டை, இராயப்பேட்டையில் என்று மாற்றிக்கொள்ளவும்.

199431

டார். அவர் தமது இராப் போஜனத்தை முடித்துக்கொண்டு வந்துவிட்டாராதலால், தாம் படுத்துத் தூங்க வேண்டுமென்ற தீர்மானத்துடனிருந்தார். வண்டி தஞ்சைக்கு விடியற்காலையில் போகுமாதலால் தாம் தூங்கிப் போய்விட்டாலும், தம்மை எழுப்பும்படி அவர் சேவகனிடம் கூறி திட்டப்படுத்தி யிருந்ததன்றி, தமது படுக்கை, பெட்டி, கூஜா முதலிய சாமான்களை அவனே தன்னுடன் வைத்துக்கொண் டிருக்கும்படி உத்தரவு செய்திருந்தார்.

தாம் தூங்க வேண்டுமென்ற தீர்மானத்துடன், அவர் ஸோபாவில் சயனித்துக் கொண்டாரானாலும், அவருடைய மனது சஞ்சலமடைந்தபடி இருந்ததாகையால், அவர் இமைகளை மாத்திரம் மூடியபடி தூங்காமல் படுத்திருந்தார். அவருடைய மனதில் பலவகைபான எண்ணங்களும், கவலைகளும் எழுந்து அவரை உலப்பியபடி இருந்தன. அவை முக்கியமாய்த் தமது புதல்வியரது விவாகத்தைப்பற்றியவை யாகவே இருந்தன.

பெண்கள் இருவருக்கும் உரிய பருவகாலம் ஏற்பட்டு சில வருஷங்கள் கழிந்து விட்டதுபற்றி, தக்க இடங்களில் அவர்களை வாழ்க்கைப்படுத்த வேண்டுமென்ற ஓரே கவலையே அவரை நெடுங்காலமாய்ப் பீடித்திருந்த நிலைமையில், கந்தசாமி, கோபாலசாமி ஆகிய இருவருக்கும் தமது புதல்வியரைக் கொடுப்பதென்ற நிச்சயம் ஏற்பட்டபின், அதைப்பற்றி அபரிமிதமான மனக்கிளர்ச்சியும், மகிழ்ச்சியும் அடைந்து, மணப்பிள்ளைகள் இருவரும் எல்லா அம்சங்களிலும் பரம சிலாக்கியமானவர்கள் என்றும், அவர்கள் கிடைத்தது அதிர்ஷ்ட வசத்தினால்தா னென்றும் கருதி, அதைப் பற்றி எண்ணி எண்ணிப் பூரித்துப் பொங்கி, பணத்தை

ஆயிரக்கணக்கில் செலவிட்டு இராஜகுமாரிகளுக்குரிய முஸ்திப்புகளை யெல்லாம் செய்துகொண் டிருந்தார்.

அந்த நிலைமையில் தமது மூத்த குமாரி திடீரென்று மிக பயங்கரமான நோயில் வீழ்ந்து விட்டதும், தாம் எதிர்பார்க்காதபடி மன்னார்குடியார் முகூர்த்தத்தை நிறுத்தியதும், அவற்றிற்கு சிகரம் வைக்கதுபோல, புஷ்பாங்கியின் படமும், அவளுக்குக் கந்தசாமியால் எழுதப்பட்ட கடிதமும் வந்ததும், அவருடைய சந்தோஷ வெள்ளம் ஓரே நிமிஷத்தில் வறண்டு போகும்படி செய்தன. அவர் பலவாறு கோடித்துக் கட்டியிருந்த மனக்கோட்டை யெல்லாம் இடிந்துபோனதுபோ லாகிவிடவே, அவர் இந்த உலகத்தையே இழந்துவிட்டவர் போல மாறித் தமது சந்தோஷத்தையெல்லாம் துறந்து, பெரிதும் ஏக்கமும், கவலையும், வியாகுலமும் அடைந்தவராய், ஊக்கமின்றி மௌனத்தில் ஆழ்ந்தவரா யிருந்தார்.

அவர் முக்கியமாய்க் கந்தசாமி தமது பெண்களில் ஒருத்தியை மணக்கப்போதைப்பற்றியே அபாரமான ஆனந்தங்கொண்டு, அது தாம் என்றும் எதிர்பார்க்க முடியாத பெரிய பேறு என்று நினைத்து நினைத்து இன்பக்கடலி லாழ்ந்திருந்த நிலைமையில், கந்தசாமியே துன்மார்க்கமான நடத்தையில் ஈடுபட்டார் என்ற செய்தி கிடைத்தது, அவருக்கு சிறிதும் நம்பிக்கைப்படவே இல்லை. அந்த ஏமாற்றமும், ஏக்கமும் அவரால் சகிக்க இயலாத விபரீதமான இன்னலாகத் தோன்றி, அவருடைய மனத்தை வதைத்துப் புண்படுத்தியபடி இருந்தன.

அந்தச் செய்தி உண்மைபோலவும் இருந்ததாகையால், அவருக்கு இந்த உலகமே இருண்டு பாழடைந்து

போனதுபோலத் தோன்றியதானாலும், அவர், அந்தச் செய்தி, எப்படியாவது பொய்யாகிவிடலாகாதா வென்ற நம்பிக்கையைக் கொண்டதன்றி, அப்படி அது பொய்யாகுமானால் தாம் தமது சமஸ்தானத்திலுள்ள கோவில்களிலெல்லாம் திருவிழாக் கொண்டாடுவதாக தெய்வங்களை யெல்லாம் பிரார்த்தித்துக்கொண்டார்.

இவ்வித மனநிலைமையில் அவர் ஸோபாவில் படுத்திருக்க, வண்டி அபாரமான விசையோடு காடுகளையும், தோப்புகளையும், வயல்களையும், ஆறுகளையும், வாய்க்கால்களையும், பாதைகளையும், ஊர்களையும், இரவையும் இரண்டாய்ப் பிளந்துகொண்டு இராமபாணம் பாய்ந்து செல்வது போலச் சென்றுகொண்டே இருந்தது. அது மெயில்வண்டியாதலால், பல ஊர்களுக் கோரிடத்திலேயே சொற்ப நேரம் தங்கிப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்க, ஆங்காங்கு, ஜனங்கள் மூன்றாவது வகுப்பு வண்டியிலேயே ஏறினாரன்றி முதல் வகுப்பிலும், இரண்டாவது வகுப்பிலும் எவரும் ஏறவில்லை.

இரவு பதினொருமணி வரையில் விழித்துக்கொண்டிருந்த திருநடன வைபவம்பிள்ளை ரயில் வண்டியின் இன்பகரமான அசைவினாலும், படுக்கையின் சுகத்தினாலும், ஜிலுஜிலென்று வீசிய சுத்தமான காற்றின் இதமான வருடலாலும் அப்படியே ஆநந்தமயமான நித்திரையில் ஆழ்ந்துபோனார்.

ஆயினும் அவர் இரவில் சுமார் நான்குமணி காலத்திற்குமேல் அதிகமாய்த் தூங்குவதில்லையாதலால், அதன் பிறகு அவருடைய துயில் அரைப் பிரக்ஞையோடு கூடிய வெறும் உறக்கமாகவே இருக்கும். அப்போது, அற்ப ஓசை யுண்டானாலும் அவர் விழித்துக் கொள்வார். அருகில் எவரேனும் பேசினாலும், அதை அவர் கனவுபோல் உணர்வார்.

எனவே இரவு சுமார் மூன்றுமணி சமயத்தில் அவருடைய ஆழ்ந்த நித்திரை கலைந்து போகத் தொடங்கியது. தாம் ரயிலில் பிரயாணம் செய்துகொண் டிருக்கிறோமென்பதையும், அப்போதைக்கப்போது வண்டி ஸ்டேஷன்களில் நின்றதையும், அப்போது ஜனங்கள் பேசியதையும் அவர் கனவுபோல் உணர்ந்தபடியே தமது கண்களை இறுக மூடிக் கொண்டு படுத்திருந்தார்.

அதுவரையில் அவருடைய வண்டியில் வேறு எவரும் ஏறவில்லை. வண்டி சிதம்பரம் போனவுடன் அங்கு கதவைத் திறந்துகொண்டு ஒருவர் ஏறி உள்ளே வந்து, திருநடன வைபவம் பிள்ளை படுத்திருந்த ஸோபாவிற்குப் பக்கத்தில் உட்கார்ந்தாராதலால், அதுவும் பிள்ளையவர்களுக்குக் கனவு போல் இருந்ததாகையால் அவர் விழித்துக்கொண்டு பார்க்கவில்லை.

அவ்வாறு வந்து ஏறிய மனிதர் இடுப்பில் பட்டுவேஷ்டியைப் பஞ்சகச்சமாக உடுத்தி, உடம்பில் ஒரு பிளானல் ஷர்ட்டை அணிந்து, தலையில் கான்பூர் கம்பளிக் குல்லாவை வைத்து, பச்சைநிறச் சால்வையால் தம்மை நன்றாகப் போர்த்திக் கொண்டிருந்தார். அவருக்கு சுமார் நாற்பது வயதிருக்கலாமென்று எவரும் மதிக்கத்தக்க தோற்றத்தோடு, அவர் இருந்ததன்றி, நெற்றியில் விபூதி யணிந்து, பார்வைக்கு ஐயர் போலும், வெள்ளாளர் போலும் காணப்பட்டார்.

அவர் படுத்துக் கொள்ளாமல் ஸோபாவில் சாய்ந்து உட்கார்ந்தபடியே இருந்ததன்றி, தமது திருஷ்டியை மற்ற ஸோபாக்களின்மீது செலுத்தி, இன்னம் யார் யார் அந்த வண்டியில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள எண்ணுகிறவர்போலப் பார்த்ததன்றி, திருநடன வைபவம்

பிள்ளையின் வடிவத்தை உற்று உற்றுப் பார்த்தது, அவர் ஒருகால் தமக்குத் தெரிந்தவரோ என்று அறிய விரும்புகிறார் என்பதைக் காட்டியது.

வண்டி மேலும் சென்று மாயூரம் ஸ்டேஷனில் நின்றது. அது நாற்சந்தியாதலால் அங்கு ஜனங்களின் கூப்பாடு அதிகமா யிருந்ததாகையால், திருநடன வைபவம் பிள்ளை திடீரென்று விழித்துத் தமது தலையை உயர்த்தி வெளிப்பக்கத்தில் பார்த்து, அது மாயூரம் என்பதைத் தெரிந்துகொண்டு மறுபடி முன்போலப் படுத்துக் கண்களை மூடிக்கொண்டார்.

தமது ஸோபாவிற்குப் பக்கத்திலிருந்த ஸோபாவில் ஒருவர் இருந்தார் என்பதைப் பிள்ளையவர்கள் அப்போது தெரிந்துகொண்டா ரானாலும், அவரைப் பார்க்கவோ, அவர் இன்னார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணவோ இல்லை. அவ்வாறு வந்து உட்கார்ந்திருந்தவர் தமது முகத்தை வெளிப்புறம் திருப்பி, வேடிக்கை பார்ப்பவர்போல் இருந்தவர் திடீரென்று வெளியில் தலையை நீட்டி, "ஸாயப்பையா, ஐயா, ஒங்களைத்தானே; காது கேக்கல்லியா? ஒங்களைத்தான் ஐயா, டிக்கெட் எக்ஜாமினர் ஸார், இப்பிடிக் கொஞ்சம் தயவு பண்ணணும்" என்று தமது கைகளைத் தட்டி உரத்த குரலில் யாரையோ அழைத்ததைத் திருநடன வைபவம் பிள்ளை உணர்ந்தாரானாலும், தமது கண்களைத் திறக்கவில்லை. அடுத்த நிமிஷம் ஸாயப்பு ஒருவர் அந்த வண்டியண்டை வந்து நின்று உள்ளே உற்றுப் பார்த்து நிரம்பவும் ஸந்தோஷ மடைந்தவராய், "ஹலோ, ஹலோ, யாரோன்னு பாத்தேன் ஸாமீ! நீங்களா! எங்கே போயிருந்தீங்கொ ஸாமீ?" என்றார்.

உடனே ஐயர் "நம்ப பொண்ணை செதம்பரத்துலே குடுத்திருக்கோன்னோ. அதுக்கு ஒடம்பு கொஞ்சம் அசௌக்கியம்னு சேதி வந்துது; போய்ப் பாத்துட்டுப் போறேன். நீங்க டிக்கட்டெல்லாம் பாத்தாச்சோன்னோ? இப்ப எந்தப் பக்கம் போறணும்?" என்றார்.

ஸாயப்பு "தஞ்சாவூருப் பக்கந்தான் போவணும். நீங்கொ தஞ்சாவூருக்குத்தானே போறீங்கொ?" என்றார்.

ஐயர், "ஆமா, வேறே நேக்கு எந்தூருலெ என்ன ஜோலி யிருக்கு. எங்கூருக்குத்தான் போறணும். வாங்கோளேன் உள்ளே" என்றார்.

உடனே ஸாயப்பு சந்தோஷ முகமலர்ச்சியோடு கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து, ஐய ரிருந்த ஸோபாவின்மேலேயே அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டவர், மற்ற ஸோபாக்களை யெல்லாம் பார்த்து, "யாரோ ஜெண்டில்மன் படுத்திருக்காங்களே. எங்கே எறங்கணுமோ என்னமோ! தூங்கறாப்பலே இருக்குதே!" என்று கூறியபடி எழுந்து வந்து, திருநடன வைபவம்பிள்ளை படுத்திருந்த ஸோபாவண்டை போய் நின்று, வண்டிப் பக்கத்தில் லொட்டு லொட்டென்று இரண்டு மூன்று தடவைகள் தட்டி, "ஸார், ஸார், யார் ஸார் படுத்திருக்கறது?" என்று உரக்கக் கூப்பிட்டார். உடனே திருநடன வைபவம் பிள்ளை கண்களைத் திறந்து, "எஸ், என்ன?" என்றார். ஸாயப்பு, "நீங்க எந்தூருக்குப் போறீங்கொ ஸார்? இது மாயவரம்; இங்கே எறங்கறவங்களா?" என்று மிக விநயமாக வினவினார்.

திருநடன வைபவம்பிள்ளை "நான் தஞ்சாவூருக்குப் போகிறவன்" என்றார்.

ஸாயப்பு, "தாங்கஸ். தூங்குங்கொ; நாம்ப டிக்கெட் எக்ஜாமினர்; தஞ்சாவூரு வரையிலே இதுலே இருப்பாங்கொ; ஓங்கிள்கி எளுப்பறாங்கொ" என்று கூறிவிட்டு வந்து, மறுபடி ஐயருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "இந்த ராவண்டைலே, ஸாமீ, இதுதான் ரொம்ப தண்டாவா இருக்குதுங்கொ. ஸரெ க்வுனிக்காமெ தூங்கிப்போறாங்கொ. எக்ஸெஸ் கேக்கறத்துக்கு நம்பிளுக்கும் மனசு வல்லெ. அவுங்களும் பணங் குடுக்க மூக்காலே அளுவறாங்கொ" என்றார்.

ஐயர்:—நீங்க இருக்கற வரையிலே, ஒரு பிராணிக்கும் ஸத்துருவம் இல்லே. நீங்க நூத்துலே ஒத்தர் தப்பிப் பொறந்த மனுஷா; தாராளமா விட்டுட்றக; மத்தவா பணத்தெக் கீழே வச்சூட்டு அந்தண்டை போடா தருடிகேன்னு காலகண்டன் மாதிரி நடந்துக்குவா.

ஸாயப்பு:—(நிரம்பவும் பச்சாதாபமும், தயாளகுணமும் த்வனிக்க) என்னாங்கொ ஸாமீ, நாம்போ மனிஸரில்லீங்களா! ராவுலே தூக்கம் ஆருக்கு பயப்புடும் ஸாமீ. என்னமோ அவுங்கவுங்க என்னா கஸ்தியினாலெயோ பொறப்புட்டுப் போறாங்கொ. அவுங்களையும் மீறி தூக்கம் அமிக்கிப் புடுதுங்கொ. அதுக்காவ தண்டம் வச்சா, அவுங்களுக்கு, வவுறு எப்பிடிப் பத்தி எரியும் ஸாமீ; நம்ப புள்ளெகுட்டிங்க நல்லா இருக்க வணாமா ஸாமீ; ஆண்டவரு நம்புளுக்குப் படியளக்க வாணாமா; அதெல்லாம் தப்புங்கொ; நாம்ப அந்த ஜோலிக்கே போறதில்லீங்கொ; யாராச்சும் தூங்கினா, எளுப்பி, அவுங்கொ போற ஊருலே எறக்கிவுட்டுடுவேன். தருமம் தலை காக்கும் ஸாமீ. இந்த அக்கிரம்பப் பணத்தை நாம்பொ சம்பாறிச்சுக் குடுக்காமப்போனா, கம்பெனிக்காரன்

சத்துப்பூடுவானா! அது இருக்கட்டும். நம்ப கொளந்தைக்கி என்னா ஒடம்புங்க ஸாமீ?

ஐயர்:—மூணுமாஸமா முழுகாமே இருந்தா. எங்கேயோ பயந்துண்டாளம்; திடீருனு வயத்துலெ தொங்கரவு ஆரம்பிச்சூட்டுது. நேக்கு முந்தாநா தந்தி வந்துது. நானும் வீட்டுக்காரியுமா விழுந்தடிச்சுண்டு ஓடினோம்.'

ஸாயப்பு:—(திடுக்கிட்டு நிரம்பவும் பயந்தவராய்) அரேரே! அது ரொம்பொ அபாயமாச்சுதுங்களே! இப்ப எப்பிடி இருக்குதுங்கொ? சேமந்தானுங்களா?

ஐயர்:—வயத்துலெ இருந்தது பேட்டுது. பொண் பொழைச்சது புனர்ஜென்மம். நேக்கு ஊருலெ அவசர ஜோலி இருக்கு. ஸம்சாரத்தை அங்கெ விட்டுட்டு, நான் மாத்தரம் போறேன்.

ஸாயப்பு:—பிஸ்மில்லாஹ்! நல்ல மனிஸருக்கு ஒரு நாளும் கெடுதல் வராதுங்கொ. வவுத்தலெ இருந்தது போனாப் பூடெ போச்சுதுங்கொ. மொதலு தப்பிச்சுதுங்களே. அதுவே போதுங்கொ. ஓங்க மாப்பிளையும் பொண்ணும் கெயமா கெட்டையா! இன்னம் ஆயிரங்காலம் இருக்கப்போறாங்கொ; இன்னும் எத்தினியோ கொளந்தைங்களெப் பெத்துக்கப் போறாங்கொ. அது போவட்டுங்க. ஊரு சங்கதியெல்லாம் என்னமா இருக்குதுங்கொ? அந்த ஜில்லா ஜட்ஜியெ ஆசுபத்திரிக்குக் கொண்டுபோனாங்களே! அவுரு பொளச்சுக்குவாரா? இல்லாமெப்போனா, போனத்துலெ சேத்தியா?

ஐயர்:—குண்டு மாருக்குள்ளே பேருந்தா, இத்தருவா ஜட்ஜி போன எடத்துலெ பில்லு மொளெச்சுப் பேருக்கும். குண்டு மார்லெ ஓரமாச் செதிக்கிண்டு பேட்டுதாம். டாக்டர்

பாத்தத்துலெ சதேலே அஞ்சாறு இரும்புத்துண்டு இருந்தாம். எல்லாத்தியும் எடுத்துட்டு மருந்து வச்சுச் கட்டிருக்காளாம். திடீருனு அடிபட்டத்துலெ, மூச்சுப் புடிச்சிண்டிருக்காம். சுவாசப்பை அப்பிடியே நின்னுபேருக்காம். ஒத்தடங் குடுத்துண்டே இருக்காளாம். ஜட்ஜி இன்னும் கண்ணைத் தறக்கவே இல்லியாம். தாது அடிச்சுக்கவே இல்லியாம். என்னமோ பொழைச்சாலும் பொழைக்கலாம்; வாயை பொளந்தாலும் பொளந்துடலாம்னு சொல்லிக்கறா.

ஸாயப்பு:—ஐயோ பாவம்! அவுங்கொ ரொம்ப புத்திசாலீன்னு சொல்லிக்கிறாங்களே!

ஐயர்:—அதுக்குத் தடை யென்ன! இந்தத் தஞ்சா ஊருக்கு இதுவரையிலே எத்தனையோ பேர் ஜட்ஜா வந்துட்டுப்பேட்டாளே. இவரோடெ சாமர்த்தியம் இந்த பூப்பிரதிவீலே ஒத்தருக்கு வராது. எந்த துஷ்ட வக்கீலும் இவர்கிட்ட வாலாட்ட முடியாது. எப்பேர்ப்பட்ட கேஸாயிருந்தாலும் இவுருக்கு ஒரு க்ஷணத்துலெ நெஜம் புரிஞ்சுபேடும். அபார மூளை. சட்டஞானம் இவ்வளவுதான்னு சொல்ல முடியாது. ஆனா,.........

ஸாயப்பு:—பூராக்குடி. நாலாவது ஜார்ஜ் தொரையை உருட்டறத்துலெ ரொம்ப கெட்டிக்காரருன்னு சொல்லிக்கறாங்கொ ஸாமி.

ஐயர்:—ஒத்தொத்தருக்கிட்ட ஒரோரு தோஷம் இருக்கும். அதெ யெல்லாம் பாக்கறதுன்னா, ஒரு மனுஷங்கூட சுத்தனாத் தேறமாட்டான். ஜட்ஜி தொரை குடிச்சாலும், கொஞ்சங்கூட நிதானம் தவர்றதில்லெ. நீதி செலுத்தறத்துலெ லவலேசம் தப்பறதில்லெ. அதுன்னா சாமர்த்தியம்!

ஸாயப்பு:—ஆமாங்கொ. அப்பிடியும் சொல்லிக்கறாங்கொ. நம்ப ஊருலெ காதறுந்தவங்க மூக்கறுந்தவங்கள்ளாம் ஓரணா, ரெண்டணாவுக்குப் புளிச்சக்கள்ளெச் சப்பிப்புட்டு, ரோட்டுலெ கெடந்து பொரண்டு, துணிபோன எடந்தெரியாமெக் கூச்சப்போடுதுங்களே. ஜட்ஜி பீப்பா பீப்பாவா நெட்டிப்புட்டு, கொஞ்சூண்டுகூட நிதானம் தவறாமெ கேஸை வெசாரிக்கறதுன்னா, அவுருக்கு எப்பிடிப்பட்ட மூளை இருக்கணும் ஸாமீ! அவுரு கிறிஸ்தவராமே?

ஐயர்:—இப்பன்னா கிறிஸ்தவரானார். அவர் ஒரு பஞ்சாங்கக்காரனுக்குப் பொறந்த புள்ளே. அவரோடெ அப்பன், அண்ணனுக எல்லாரும் இப்பகூட ஆமசிரார்த்தம் வாங்கறானுக. புள்ளெ தஞ்சாவூருலெ மாஸம் ரெண்டாயிர ரூவா சம்பளத்துலெ ஜில்லா ஜட்ஜி உத்தியோகம் பாக்கறான். அதுக்குக் கூப்பிடு தூரத்துலெ, சொந்தக்காரனுகள்ளாம் மூட்டி தூக்கறானுக. அதுஷ்டம் வந்தா, அப்பிடீன்னா வரணும். பாதாளத்துலெயிருந்து மனுஷனெ ஆகாசம் வரையிலே தூக்கிண்டு பேட்டுடுதே அதுஷ்டம்.!

ஸாயப்பு:—அதெல்லாம் ஸரிதாங்கொ. அவுரோடெ ஸம்சாரம் மலையாளத்துப் பொம்புள்ளையாமே. ஐயா புட்டி புட்டியாக் குடிச்சா, அம்மா அண்டா அண்டாவா உடுவாங்களாமே! பொம்பளைங்கொ அப்பிடிக்கூடக் குடிப்பாங்களா ஸாமீ?

ஐயர்:—(கலகலவென்று சிரித்து) பொம்மனாட்டிக மொத்தத்துலெ பயந்த சுபாவமுடையவா. அவா எடுப்பார் கைக் கொழந்தைதானே. புருஷன் எப்பிடிப் பழக்கறானோ, அந்த மாதிரி அவா மாறிப்போறா. புருஷன் அவாளெ நல்ல மாதிரியாக் கொண்டுபோனா, அவா ஒழுங்காத்தான் இரு

ப்பா; கெட்ட காரியத்துலெ பழக்கிவிட்டா, அவா கெட்டுப் போகக்கேக்கணுமா! அந்த அம்மா மேலே சொல்றத்துலெ என்ன ஒபயோகம்? ஒழுங்கா யிருக்கற புத்தியெ, சாராயத்தைக் குடிச்சுக்கொழப்பிண்டுட்டு, அது கெட்ட வழீலே போகாமெ இருக்கணும்னு, அது எப்பிடி முடியும் ஸாயப்பூ?

ஸாயப்பு:—ஜட்ஜியெ சுட்டாருங்களே. அவுருக்கும் அந்தம்மாளுக்கும் ரொம்ப நாளாப் பளக்கமுண்டுங்களாமே! அது நெசமா யிருக்குமா?

ஐயர்:—என்ன ஸாயப்பு நீங்க பேசறது வேடிக்கையா யிருக்கே! ராத்திரி யெல்லாம் ராமாயணம் கேட்டு, ராமனுக்கும் சீதைக்கும் என்ன சொந்தம்னு ஆரோ கேட்டான்னு சொல்லுவா! அந்த மாதிரி சொல்றகளே! அவன் சுத்தக் காலாடிப் பையன். இங்கிலீஷ் பொஸ்தகத்தைப் பொட்டைப்பாடம் பண்ணி பி. ஏ. பி. எல் படிச்சுப்புட்டா யோக்கியதை வந்துடுமா? ஆரோ சிபார்சு பண்ணி முனிசிப் உத்தியோகம் பண்ணி வச்சுப்புட்டா ஜென்மாந்தர வாசனே போயிடுமா! தேவிடியாக் கள்ளனே யெல்லாம் புடிச்சு, பெரிய உத்தியோகத்துலெ வச்சாலும், குச்சு நொழையற புத்தி அவனெ விட்டுப் போகுமா?

ஸாயப்பு:—அவுருக்கு எம்பிட்டு வயசு இருக்குங்கொ?

ஐயர்:—அவுருக்கு ஆயிருக்கும் டெண்டரைக்கழுதை வயசு. இருவத்தஞ்சுக்குக் கொறைச்சலில்லே.

ஸாயப்பு:—அதுக்குள்ளறவா முனுஷீப்பு உத்தியோகம் பாக்கறுரு?

ஐயர்:—சிபார்சிருந்தா சின்னக் கொழந்தைக்கிக்கூட பெரிய உத்தியோகம் ஆயிப்போறது. அவனோடெ சேத்தாளி இன்னொத்தன் இருக்கான். அவன் இன்னம் சின்னவன். அவுனுக்கு ஸப்-ஜட்ஜி உத்தியோகம் ஆயிருக்கே! அதுக்கென்ன சொல்றக. இப்ப சிபார்சிருந்து, ஒங்களுக்கு கவுணர் உத்தியோகம் குடுத்தா, நீங்க பாக்கமாட்டிகளா?

ஸாயப்பு:—ஏன் பாக்கமாட்டாங்கொ. போர்டு துப்பட்டிலெ கையெழுத்துன்னு நாம்ப நல்லாப் போடுவாங்கொ. அது இருக்கட்டுங்கொ. இந்த ஜட்ஜியெ சுட்டாருங்களே அவுரு பேரென்னுங்கொ?

ஐயர்:—அவரோடெ பேரு கோபாலசாமி பிள்ளே.

ஸாயப்பு:—அவுரும் தஞ்சாவூருலெயே டிஸ்டிரிக்ட் முனிஷீப்பா?

ஐயர்:—திருவாலூருலெ.

ஸாயப்பு:—அவுரு இருக்கறது திருவாலூரு. ஜட்ஜோடெ ஸம்சாரம் இருக்கறது தஞ்சாவூருலெ. ரெண்டு பேரும் எப்பிடி சந்திக்கறது?

ஐயர்:—இந்தக் காலத்துலெ அதுதானு கஷ்டம். தஞ்சாவூருக்கும் திருவாலூருக்கும் 20,25 கல்லு தூர மிருக்கும். மோட்டார் வண்டி இருக்கவே இருக்கு. ஜட்ஜி பகல் முழுக்க கோர்ட்டுலெ உத்தியோகம் பண்ணு, அம்மா மோட்டாரைப் போட்டுண்டு, ஒரே மணீலே திருவாலூருக்குப் பேடமாட்டாளா! திருவாலூருலெ, அவன் வச்சது சட்டம். பகலெல்லாம் கூத்தடிச்சுப்புட்டு, அந்தப் பிராக்யன் ராத்திரி யெல்லாம் கச்சேரி நடத்தறதாம்—என்றார்.

இவ்வாறு ஐயரும், ஸாயப்புவும் சம்பாஷித்துக் கொண்டிருந்தது திருநடன வைபவம் பிள்ளையினுடைய செவிகளில் நன்றாகப் பட்டதாகையால், அந்தச் செய்தி அவருக்குப் பெருத்த இடிபோலவே இருந்தாகையால்,

அவர் பேச்சு மூச்சற்று அப்படியே ஸ்தம்பித்துப் போய், அவர்களுடைய சம்பாஷணையில் ஒரு சொல்லைக்கூட விடாமல் கேட்டபடி பிரமித்துப்படுத்திருந்தார்.

கந்தசாமியின் நடத்தையைப்பற்றித் தாம் விசாரிக்க வர, கோபாலசாமியின் குணதிசயங்களும், தஞ்சையில் நடந்த பயங்கரமான சம்பவமும் நடுவழியிலேயே தமக்குத் தெரிந்ததைப்பற்றி அவர் அபாரமான வியப்படைந்தவரானார். விவாக முகூர்த்தம் ஒத்திவைக்கப்பட்டுப் போனது தெய்வத்தின் அபார கருணையே என்று கருதியபடி அவர் அவர்களுடைய சம்பாஷணையை உற்று கவனிக்கலானார்.

ஸாயப்பு:—ரொம்ப நல்லா இருக்குதுங்கொ முனிஷீப் உத்தியோகம். அவுருக்கு இத்தினி வயசாச்சுங்களே கண்ணாளம் கிண்ணாளம் ஒண்ணுமில்லீங்களா?

ஐயர்:—அதைப் பத்திக்கூட என்னமோ ஜனங்க சொல்லிண்டா. சென்னப்பட்டணத்துலெ தேனாம்பேட்டேலே, ஆரோ, இந்த கோபாலசாமிக்கும், அவன் சேத்தாளி கந்தசாமிக்கும் ரெண்டு பொண்ணுகளைக் குடுக்கறதாயிருந்தாளாம். ஆனா மூர்த்தம் நின்னுபோச்சுன்னு சொல்லிக்கறா.

ஸாயப்பு:—கந்தசாமிங்கறவரு ஆருங்கொ?

ஐயர்:—அவர் இவுருக்குமேலெ அசாத்தியக் கோலாகல புருஷராம். அவர் தஞ்சாவூருலெயே ஸப்-ஜட்ஜி உத்தியோகம் பண்ணறவர். ஊர்லெ, ஒரு தேவிடியா வீட்டைக் கூட அவர் பாக்கி விட்டவரன்னும். அவர் இப்பதான் சில தினங்களுக்கு மின்னே ஆரோ ஒரு பெரிய மனுஷா வீட்டுப் பொண்ணை அழைச்சிண்டு, அதுக்காகவே ஒரு மாசத்துக்கு ரஜா வாங்கிண்டு, சென்னப் பட்டணத்துக்குப் பேட்டாராம். அந்த ஊருலெ எங்கெயோ இருந்துண்டு

டிராமா என்ன, சினிமா என்ன, சமுத்தரக்கரை யென்ன, நெனைச்ச எடத்துக்குப் போறதாம் வரதாம். அவா ரெண்டு பேரும் அந்தூருலெ அப்பிடிக் கூத்தடிக்கறாளாம்—என்றார்.

அதைக் கேட்கவே திருநடன வைபவம் பிள்ளையின் உடம்பு தூக்கிப்போட்டது. கந்தசாமி சென்னையில் வந்து இருந்து துன்மார்க்கமான காரியங்களைச் செய்துகொண்டிருக்க, தாம் அநாவசியமாய்த் தஞ்சைக்கு வந்தோமே என்ற நினைவு அவருக்குள் உண்டாயிற்று. அந்த ஐயர் சொன்ன தகவல்களுக்கும், தமக்குக் கிடைத்த கடிதத்திலுள்ள தகவலுக்கும் ஒற்றுமை இருந்தது அவருக்கு அபாரமான வியப்பை உண்டுபண்ணிய தாகையால், அவர் கல்போலச் சமைந்து ஒரே விபப்பின் வடிவாய் ஸோபாவோடு ஸோபாவாய் ஒட்டப்பட்டுப்போனவர்போலாய்விட்டார்.

ஸாயப்பு:—நல்லா இருக்கிதுங்கொ ஸாமீ இவுங்க உத்தியோகம். ஊருக்கு நல்ல நீதிபதிங்களை ஸர்க்கார்லெ நேமிச்சாங்கொ. ஆசாமிங்களும் நல்லாத்தான் ஜோடி சேந்தாங்கொ. மூத்த அண்ணாத்தெ மொடாக்குடியரு; அவுரோடெ பொஞ்சாதி பீப்பாக்குடித் தேவிடியா. நடு அண்ணாத்தெ ஸப்-ஜட்ஜி குச்சு நொழையறவரு; கடைசிலவரு குருவுக்குத் தண்ணி காட்டறவரு. நாலும் நாலு ரெத்தனங்க ஸாமீ. ஆமா, அன்னைக்கி அந்த முனுஷீப், ஜட்ஜி அண்ணாத்தெ பங்களாக்குள்ளற போயி சுட்டாரே. அப்ப அந்தப் புண்ணியவதி என்ன சேஞ்சாளாம்?

ஐயர்:—மலையாளத்துப் பொம்புள்ளெங்களை மலையாள பகவதீன்னு சொல்ற வழக்கம். அவா பாக்கறத்துக்கு அழகா யிருக்கான்னு, பயலுக போயி, தீபத்துலெ விட்டில் பூச்சி விழறாப்புலெ விழறது; கடசிலே அந்தப் பிசாசு

அவனோடெ உசிரைக் கொண்டிண்டுதான் போகும். அந்த மாதிரியே முடிஞ்சுது இந்த ஜட்ஜி தலையெழுத்து. அடுத்தாப்புலெ முனாசீப்பு வசமா மாட்டிண்டிருக்கான். அவனை விட்டுடவா போறா?

ஸாயப்பு:—ஆமாங்கொ, ஸாமீ. அவன் சுட்டப்ப, அந்த லச்சுமி என்ன பண்ணா? அவனைத் தடுக்கலியா?

ஐயர்:—உள் ரந்தரம் இன்னம் போலீஸாருக்கே புரியல்லெ. ரிவால்வராலே முனிசிப்பு ஜட்ஜியெ சுட்டிருக்கான். போலீஸாரெல்லாம் வந்து பங்களாவெ யெல்லாம் சோதனை போட்டு அமக்களப்படுத்தறா. அவ ஸொகுஸா மெத்தை மேலே படுத்துண்டு தூங்கறாப்புலெ பாசாங்கு பண்ணறாளாம்.

ஸாயப்பு:—(வியப்போடு சிரித்து) அரேரே! அச்சா! நல்ல பொம்புளெ ஸாமீ! நீங்க சொல்றாப்புலெ மலையாள பகவதிதான் ஸாமீ அவ.

ஐயர்:—எத்தனையோ பேர் அவளெ இழுப்பிப் பாத்தாளாம்னா; மைக்கானாப் போதுவிடியற வரையிலே ஏந்திருக்கவே இல்லியாமே. அதன்னா சாமர்த்தியம்!

ஸாயப்பு:—மைக்கானா எந்திரிச்சவ என்னாதான் ஸொன்னாங்கொ?

ஐயர்:—புருஷனைச் சுட்டுப்புட்டான், அவர் ஆசுபத்திரிலெ இருக்கார்னு சொன்னா, ஒண்ணுந்தெரியாத பரமஸாது மாதிரி, அவ வயத்துலெயும் வாயிலெயும் லபோலத்தின்னு அடிச்சுண்டு தரையிலெ கெடந்து பொரளாறாம்! கோபாலசாமி ஆருன்னு கேக்கறாளாம்! தானும் புருஷரும் சாப்பிட்டபோது, தான் அதியமா விஸ்கியைக் குடிச்சுப்புட்டதாகவும், தான் மயங்கி விழுந்துட்டதாகவும், தனக்கு

ஒண்ணுமே தெரியாதுன்னும் சொல்லி ஓரே சாதனையா சாதிக்கறாளாம். இருந்தாலும் பொண்டாட்டி அப்பிடித் தான் இருக்கணும்.

ஸாயப்பு:—பளைய புராணங்கள்ளெ பொம்புள்ளைங்களாலெ ராஜ்ஜியமே அளிஞ்சு பூட்டுதான்னு சொல்றது சரியா யிருக்குதுங்கொ ஸாமீ.

ஐயர்:—ஆமா. சூர்ப்பனகையாலெ லங்கேஸ்வரன் குண்டோடெ கைலாசம் போயிட்டான். அவனோடெ ராஜ்யம் இருந்த எடம் தெரியாமெப் போட்டுது. துரோபதையாலே பாண்டவா கௌரவாள்ளாம் என்ன கதியானா! இப்பவும் எந்தக் குடும்பக்கலெயும் பொம்மனாட்டிதான் தலை உமை மகாளனி. ஆயிரம் ஆம்புள்ளெக ஒண்ணாயிருந்து ஒத்துப்பேடுவா. ரெண்டு பொம்மனாட்டி சேந்தாப்புலெ ரெண்டு நிமிஷம் ஒண்ணாயிருந்து குப்பை கொட்டமாட்டா. அதுக்குள்ளெ கலகத்தீ மூண்டுபேடும். குடும்பம் அலங்கோலந்தான்.

ஸாயப்பு:-பொம்புள்ளைங்க இல்லாமெயும் நம்பவேலை ஆவறதில்லிங்கொ; அவுங்க இருக்கறத்தனாலெ, பல தொல்லைங்களும் உண்டாவுதுங்கொ. எவந்தான் இந்த மாதிரி யோசனை பண்ணி, ஆம்புள்ளைக்கு எதிரிடையா பொம்புள்ளென்னு ஒரு சிருட்டியெ உண்டாக்கினானோ தெரியல்லிங்கொ. இதுக்காவத்தான், எங்க பெரியவங்க, பொம்புள்ளைங்களை சாமானைப் பத்தரப் படுத்தறாப்புலெ, வூட்டுக்குள்ளறவே வைக்கணும்னு ஏற்பாடு பண்ணாங்கொ; வெளியெ வந்தா, அவுங்களெ தலக்காணி மூட்டெ மாதிரி துணியாலெ மறைச்சு அனுப்பறாங்கொ. பாக்கறத்துக்கு இது புது மாதிரியா இருந்தாக்கூட, அதனாலெ புருசருக்கு எம்பிட்டு நிம்மதி தெரி

யுங்களா! பொம்புள்ளெங்களும் சுத்தமா இருக்கறுங்கொ. மனஸூம் சுத்தம்; ஒடம்பும் சுத்தம்; ஒரு ஆம்புள்ளெ இன்னொருத்தரு ஷூட்டுப் பொம்புள்ளெங்கமேலே ஆசெப்பட எடமில்லாமெப் போவுதுங்கொ.

ஐயர்:—ஓங்க ஏற்பாடு ரொம்ப நல்ல ஏற்பாடு. நம்ப ஊரிந்துக்கள்ளெயும் பொம்மனாட்டிக வீட்டைவிட்டு வெளீலெ வரமாட்டா. ஆரோ ஏழைப்பட்டவா வேறெ விதியில்லாமெ வெளிலே போரா. ஆனாலும் வெள்ளெக்காரா தான் இந்த விஷயத்துலெ அன்னியாய மோசம். அவாள்ளெ ஆம்புள்ளெக ஜாக்கிரதையா ஒடம்பெ மறச்சு சட்டை, கிஜார், பூட்ஸ், டோப்பி எல்லாம் போட்டுக்கறானுக; பொம்மனாட்டிகளெ சுத்த நிர்வாணமா விட்டுட்டுடறா. அதெப் பாக்க சகிக்கல்லியே கண்ட்றாவி. அவாளெப் பாத்து நம்ப பொம்மனாட்டிககூடப் கெட்டுப்போற வழியான்னா இருக்கு. அதை யெல்லாம் சினிமாவுலெயும், பத்திரிகை விளம்பரங்கள்ளெயும் வெக்கமில்லாமெப் போட்டுக் காட்டறானுக. இருந்தத்துக்கும் போனத்துக்கும் ஒலகம் இப்பிடி மூக்கறுந்த ஒலகமா மாறிண்டிருக்கே.

ஸாயபு:-ஸாமீ, நீங்க போனவாரத்து சுதேசமித்திரன் வாரப்பதிப்பைப் பாத்தீங்களா? அதை முக்கியமா பொம்புள்ளெங்களே கூச்சமில்லாமெ வாங்கிப் படிக்கறதுங்கொ. அதுலெ ஆபாசப்படத்தை யெல்லாம் போட ஆரம்பிச்சுட்டாங்கொ ஸாமீ. மகாவிஷ்ணு மோகினி அவதாரம் எம்பிட்டு மேலான சங்கதிங்கொ. அந்தப் படத்துக்குப் பக்கத்துலெ எடுபட்டுப்போன ரெண்டு வெள்ளெக்கார முண்டைங்க படத்தைப் போட்டிருந்தாங்கொ ஸாமீ.

ஐயர்:—ஆமாமா. நாங்கூடப் பாத்தேன்னா! ஏது அவா கூட இப்பிடி வல்கரா (இழிவா) ஆரம்பிச்சுட்டா. அந்தப் பொம்மனாட்டிகளுக்கு இடுப்புலெ ஒரே சாணகலத்துலெ பாவாடைதான் இருக்கு. அதையும் கையாலெ தூக்கிக்காட்டறா. அவா எந்த ஸ்தானத்தைத் தூக்கிக் காட்டாறாளோ அதுக்கு பின்னாலே விற்பனைக்கு (For sale) இன்னு விளம்பர நோட்டீஸ் போட்டிருக்கு.

ஸாயபு :—(சந்தோஷத்தோடு) ஆமாங்கொ ஸாமீ; ஆமாங்கொ ஸாமீ. அதெத்தான் நாம்ப மறைச்சுச் சொன்னுங்கொ. நீங்கொ நல்லா விளக்கிக்காட்டறுங்கொ. அத்தான் வித்தியாஷம். இருந்திருந்து, இந்த ஆபாசத்தைப் பொறுக்கி நம்ம பொம்புள்ளெங்களுக்கு என்னாத்துக்குக் காட்டறுங்கோங்கறதுதான் தெரியல்லெங்கொ. அதெப் பாத்து நம்ப பொம்புள்ளெங்க சந்தோசப்படட்டும்னு போட்டாங்களா, இல்லாமெப்போனா, அந்த அபுருப வித்தெயெக் கத்துக்கட்டும்னு போட்டாங்களா?

ஐயர் :—நம்ப தேசத்துலே கெட்டுப்போன தாசிகூட இந்த மாதிரி ஆபாஸத்தைப் பாத்து சந்தோஷப்படவும் மாட்டா; அதுனாலே ஆயிரம் பதினாயிரம் வரதா இருந்தாக் கூட அந்தமாதிரி பகிரங்கமா எலம் போடமாட்டா. இப்பிடித்தான் மின்னே ஒரு விளம்பரம் பாத்தேன். எங்க மதகுரு ஒத்தர் எறந்து பேட்டர். அவரோடெ படம் போட்டிருந்துது. பிராம்மணாள்ளே அநேகமா எல்லாரும் அந்த குருவைக் கண்டா விழுந்து நமஸ்காரம் பண்ணுவா; அவ்வளவு பெரிய மகான் அவர். அவரோடெ படம் ஒரு பக்கத்துலே இருந்துது. அதுக்கு மேலே 'பூட்ஸ்' கடை விளம்பரம் இருந்துது. 'பூட்ஸ்' படம் லக்ஷணமாத் தலெக்குமேலே போட்டிருந்துது. அதெப் பாக்கச்சே நேக்கு என்னமாப் பத்திண்டுது தெரியுமா! அந்தப் பரமசிவன்

ஒரு க்ஷணத்துக்கு அவரோடே நெத்திக் கண்ணைக் குடுக்காமெப்பேட்டார். குடுத்திருந்தா, காரியமே வேறெமாதிரியா நடந்திருக்கும்.

ஸாயப்பு:—அதுவும் இந்த வாராந்தப் பத்திரிகையிலெ தானுங்களோ?

ஐயர்:—பேரை என்னத்துக் கேக்கிறீங்க. அந்த மாதிரி ஒரு பத்திரிகை பிரகஸ்பதி அவரோடெ பத்திரிகேலெ போட்டிருந்தார்.

ஸாயப்பு:—(விரக்தியாக) காலம் அப்பிடி யெல்லாம் கெட்டுப்போச்சுதுங்கொ ஸாமீ. புதுநாகரீக விவேகத்துலே எல்லாம் ஏக லக்ஷியாப் போச்சுதுங்க ஸாமீ. நாம்ப ஆரையும் சொல்லப்படாதுங்கொ. காலு செருப்புக்கும், பெரியமடாதிபதிக்கும் வித்தியாஷந் தெரியலிங்கொ. துணிகட்டறத்துக்கும் நிருவாணமாயிருக்கறத்துக்கும் வித்தியாஷந் தெரியலிங்கொ. இன்ன ஜாமானைத்தான் பகிரங்க ஏலத்துலெ உட்றதுங்கற வெவஸ்தை யில்லாமெப் போச்சுங்கொ. நாம்ப என்னா ஸெய்யலாமுங்கொ. உள்ளது ஸொன்னா ஒடம் பெரிச்ச லாயிடுங்கொ. இந்த ஜட்ஜியெயே பாருங்கொ. அவுங்கொ பாப்பாரு வம்மிஷத்துலே பொறந்தவங்கொ; நல்லாப்படிச்ச புத்திசாலி. ஒரு பொம்புள்ளெக்காவ கிறிஸ்தவரா மாறிப்போனாரே! அது எம்பிட்டு வெக்கக்கேடு பாருங்கொ. வண்ணானுக்கு வண்ணாத்திமேலே ஆசே, வண்ணாத்திக்குக் கழுதெமேலே ஆசேன்னு ஸொலவம் சொல்லுவாங்களே ஸாமீ; அந்த மாதிரி, அதே பொம்புள்ளெ அவுரு தலைமேலே மொளக்கா அறைச்சாளே! ஆமா; அதிருக்கட்டும்; அந்த முனுஷீப்பெ ஜாமீனுலெ உடனும்னு கேட்டாங்களாமே உட்டாங்களா?

ஐயர்:—விடமாட்டேன்னு சொல்லிப்புட்டாளாம். அவன் இப்ப ஜெயில்லெதான் இருக்கான். அந்த ஜட்ஜி பொழைச்சா, ஆளுதப்புவான்; இல்லாட்டா, கழுத்துலெ சுருக்கை மாட்டிண்டு ஊஞ்சலாட வேண்டியதுதான். போலீஸ்காரா அந்த முடிவு தெரியறத்துக்காகத்தான் பொறுத்திண்டிருக்கா. இல்லாட்டா, இத்தருவா, விசாரணை தீந்துபேருக்கும்.

ஸாயப்பு:—போலீஸாரு கேக்கறத்துக்கு அந்த முனிஷீப்பு என்னாத்தான் ஸொல்லராரு?

ஐயர்:—அவர் என்னமோ கதை சொல்லறார். அது பழைய காலத்து அரேபியன் நைட் கதை மாதிரி இருக்கு. ஆரோ ஒரு பெரிய மனுஷர் வீட்டுப் பொண்ணாம்; தன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கந்தசாமிக்குக் கடுதாசி எழுதினாளாம்; அவர் தன்னைப் பாக்கணும்னா, கண்ணைக் கட்டிண்டு, தான் அனுப்பற மோட்டார் வண்டிலெ வரணும்னு எழுதினாளாம்; அது நெஜமா பொய்யான்னு கண்டுபிடிக்கச் சொல்லிட்டு கந்தசாமி என்னமோ அவசரஜோலியாப் பட்டணத்துக்குப் பேட்டாராம்; நெஜத்தைக் கண்டுபிடிக்க, இவர் கண்ணைக் கட்டிண்டு போனாராம்; வண்டி எங்கேயோ ஒரு பங்களாவுக்குப் போச்சாம். ஒரு பொண்ணிருந்தாளாம்; இன்னும் அவளுக்குத் தாயார் தோப்பனார் எல்லாரும் இருந்தாளாம். இவுருக்கு ரோஜாப்பூ மாலை போட்டு ஒபசாரம் பண்ணாளாம். தாம் கந்தசாமி இல்லைன்னு இவர் நெஜத்தைச் சொன்னாராம். அந்தப் பொண்ணோடெ சிறிய தாயார் பொண் தஞ்சாவூருலெ யிருக்குன்னும், அவளை கோபாலசாமிக்குக் கலியாணம் பண்ணிக்கலாம்னும் சொல்லி, அந்தப் பொண்ணைக் காட்டறதாச் சொல்லி, பழையபடி கண்ணைக் கட்டி மோட்டார்லெ வச்சு

ஆளுக அழைச்சுண்டு வந்தாளாம்; அவுருக்குப் போட்ட மாலையை கைக்குட்டையிலெ கட்டிண்டு வந்தாராம். ஜட்ஜி பங்களாவுக்குப் பின்னாலெ வண்டியெ நிறுத்தி, 'இதுதான் அந்த பங்களா, மேலே ஏறிப்போயி, ஹால்லே உக்காருங்கோ, நாங்க கீழாலே உள்ளே போயி, பொண்ணோடெ மனுஷாளெ மேலே அனுப்பறோம்னு ஆளுக சொன்னாளாம். இவர் அதை நம்பிப் படிமேலே ஏறி அந்தண்டை போறாராம். ஒடனே ஆரோ சுட்ட ஓசை கேட்டதாம்; சுட்டவரே கீழெ விழுந்துட்டாராம். இவர் பயந்து போயி பக்கத்துலெ மறைஞ்சுண்டாராம். போலீஸ்காரா புடிச்சிண்டாளாம். இப்பிடி யெல்லாம் என்னென்னமோ மூட்டையெ யெல்லாம் அளக்கறார்.

ஸாயப்பு:—(வியப்போடு நகைத்து) அரே ரே ரே! நீங்கொ ஸொல்றுப்புலே இது அராபிநைட் கதை மாதிரி தான் ஸாமீ இருக்குதுங்கொ. அவுரு ஸொல்றத்தைப் பாத்தா, ஜட்ஜியெ தன்னெ சுட்டுக்கின மாதிரியல்ல இருக்குது. அப்பிடி செய்ய ஜட்ஜிக்கென்ன பைத்தியமா? இவுருபேரு போட்ட கடுதாசி ஜட்ஜியோடெ சொக்காப் பைக்குள்ளே எப்பிடி வந்திச்சாம்?

ஐயர்:—கண்ணைக் கட்டி அழைச்சிண்டுபோனவாளே வேணும்னு அந்தக் கடுதாசியெ இழுதி அனுப்பிச்சிருக்காங்கறார்.

ஸாயப்பு:—இவுங்கோ அன்னக்கி ராவுலெ கண்ணெக் கட்டிக்கினு வருவாங்கோங்கறது, அவுங்களுக்கு நிச்சயமாத் தெரிஞ்சா அவுங்கோ, ஜட்ஜி பொஞ்சாதிக்கு இவரு எளுதி ஒப்பலே கடுதாசி எளுதி அனுப்பலாம்.

ஐயர்:—ராத்திரி ஒன்பது மணிக்கு மணிக்குண்டண்டை மோட்டார் வந்து நிக்கும், அதுலெ நீங்க வரலாம்;

வா ஓங்கிளுக்கு அசௌகரிய மாயிருந்தா, ஒடனே ஒரு வரி இழுதி மதில் சுவருமேலே, வச்சுப்புடுங்கோன்னு அவா கடுதாசி இழுதினாளாம். இவர் அந்தமாதிரி இழுதல்லே. அதனாலே இவர் கட்டாயம் வருவார்னு நம்பி, அவா அந்த மாதிரி இவரோடெ கையெழுத்தைப் போட்டு, மின்னாலெ அனுப்பிச் சிருக்கலாங்கறார்.

ஸாயப்பு:—அவுங்கொ அனுப்பிச்ச கடுதாசியெக் காட்டினாரா?

ஐயர்:—அவா கந்தசாமிக்கு ரெண்டு கடுதாசி இழுதியனுப்பிச்சா, ரெண்டும் கந்தசாமி மேஜைமேலே இருந்துதான்னு சொல்றார். ஆனாப் போலீஸார் அந்த வீட்டுலெ சோதனை போட்டுப் பாத்தாளாம். கடுதாசியும் இல்லியாம், கிடுதாசியும் இல்லியாம்.

ஸாயப்பு:—அவுரு ஸொல்ற அராபிக்கதை உப்புக்கும் ஆவாது; புளிக்கும் ஆவாது. சாக்கி இல்லாமெ அவுரு ஆயிரம் கதை கட்டலாம். இருக்கறத்தெப் பாத்தா அவுருக்கு தெண்டனை ஆயிப்பூடும்னுதான் நம்ப புத்திக்குப் படுதுங்கொ.

ஐயர்:-இல்லாமெப் போறக்காது அள்ளாமெக் கோறையாதுன்னு சொல்லுவா; ரொம்ப நாளாவே ஜட்ஜி தொரைக்குப் பொண்டாட்டி மேலே சந்தேகமாம்; பகல்லெ கொஞ்சநாழிகூட அவ பங்களாவுலெ இருக்கறதில்லியாம். ராவுத்தருக்குத் தெற்கே பயணம்னா, குதிரைக்கு வடக்கே பயணங்கறப்லெ, ஜட்ஜி கச்சேரிக்குப் பொறப்பட வேண்டியதான் தாமஸம்; அம்மா மோட்டாரைப் போட்டிண்டு திருவாலூருக்கு ஜாத்தாஹேதான். தினம் ரகஸியமாக் கடுதாசி வருமாம். தன் பேருக்கு வர கடுதாசியெ தொரைக்

கிட்டக் குடுக்கக் கூடாதுன்னு சேவுகனுக்கெல்லாம் உத்தரவு பண்ணியிருந்தாளாம். ராத்திரியானா, ரெண்டு பேரும் எலியும் பூனையும் மாதிரி வசண்டு, கத்திக்கிண்டிருப்பாளாம். ஆசைநாயகன்கிட்ட இன்னமேப் போனா சுட்டுப்புடுவேன்னு தொரை தினம் சொல்லி அதட்டுவாராம். இப்பிடி யெல்லால் நடந்திருக்கச்சே, அது சுத்த அபாண்டக் கட்டாவா இருக்கும். தொரை யென்ன அவ்வளவு பைத்தியக்காரனா! சம்சாரம் பரிசுத்தமானவளாயிருக்கச்சே, அவகிட்ட அப்பிடி யெல்லாம் பேசுவாரா; அவளை பயமுறுத்துவாரா.

ஸாயப்பு:—இப்பிடி யெல்லாம் நடந்திச்சின்னு சேவுகருங்க சொல்றுங்களா?

ஐயர்:—ஆமா. தினம் ராத்திரியானா புருஷனுக்கும் சம்சாரத்துக்கும் சஷ்டாஷ்டகந்தானாம். சேவுகனுகளுக்கு ராத்திரியானா தூக்கமே புடிக்கறதில்லியாம். பாதி ராத்திரி வரைக்கும் அமக்களப்படுமாம்.

ஸாயப்பு:—நல்லாயிருக்குதுங்கொ அவுரு ஜட்ஜி உத்தியோகம் பாத்ததும், அபூருவமான பொஞ்சாதியை சம்பாறிச்சுக்கினதும். நம்பளெப்போலெ இருக்கற ஏளெங்க ராவுலெ நம்ப ஊட்டுக்குப் போனா, நம்ப பொஞ்சாதிமாருங்கொ நம்பகிட்ட எத்தினி ஸந்தோஸமா இருக்காங்கொ; நம்பிளுக்கு என்னா என்னா தாஜா பண்ணிவுட்டு நம்பளெ ஸந்தோஸப்படுத்தறாங்கொ. நம்ப பொஞ்சாதி மாருங்களெ, நாம்ப பாத்து, கணத்துலெ உளுந்னா, மறுபேஸ் இல்லே; அப்பவே உளுந்துடுவாங்கொ ஸாமீ. நம்ப ஜாதி பொம்புள்ளெங்களுக்கு புருசன்னா, உசிர் மாதிரி ஸாமீ.

ஐயர்:—(புன்னகையோடு) ஒங்கிளுக்கு ஒரே ஸம்சாரந்தானே?

ஸாயப்பு:—நம்ப வாயிலேயிருந்து பொய் பேஸ் வராதுங்கொ. நம்புளுக்கு மூனு பொஞ்சாதிமாருங்கொ. சாஸ்தாத்துக்கு ஒரு பொஞ்சாதியெக் கட்டிக்கினு, ஊருப்பொம்புள்ளெமேலெ யெல்லாம் திருட்டுத்தனமா ஆசை வைக்கறது ரோக்கியமா? எல்லாருக்கும் தெரிஞ்சு, ரெண்டு மூனு பேரைக் கட்டிக்கினு அதோடெ திருத்தியாறது ரோக்கியமா ஸாமீ. நம்ப ஸலமன் ராஜா எல்நூறு பொஞ்சாதி கட்டிக்கினாராம்; முன்னூறு வைப்பாட்டி வச்சிக்கினாராம். மொத்தம் ஆயிரம் பொம்புள்ளெங்களாம் ஸாமீ. அவுருக்கு ஒடம்புலெ எம்பிட்டு வீரியம் இருக்கணும் பாருங்கொ.

ஐயர்:—அடேயப்பா! ஆயிரம் ஸம்சாரங்களா! ஒரு ஸம்சாரத்தை வச்சுண்டு காலக்ஷேபம் பண்ணறத்துக்குள்ளெ, நம்ப தாவு தீந்துபோறதே. ஆனா நீங்க சொல்றது ஒரு விதத்துலெ நாணயமான காரியந்தான். சாஸ்தரப்படி ஒரே ஸம்சாரத்தைத்தான் கலியாணம் பண்ணிக்கணும்னு சொல்லிண்டே, திருட்டுத்தனமா, ஊரான் வீட்டு ஸ்திரீகளை யெல்லாம் கண்டு துர்மோகம் கொள்றது தப்புதான். அதுக்காகத்தான் எங்க பெரியவா ஸாத்விகமான ஆகாரமா சாப்பிடணும்னு ஆகார நிர்ணயம் சொல்லியிருக்கா; எங்களுக்கு மாம்சம் எல்லாம் தள்ளுபடி. அதனாலே எங்க மனஸு கட்டுப்பாட்டுலெ நிக்கறது. எங்க பொம்மனாட்டி எங்களைவிட இன்னம் சொற்பமாத்தான் போஜனம் பண்ணுவா. போஜனத்துலெதான் எல்லா ரஹ்ஸ்யமும் அடங்கியிருக்கு.

ஸாயப்பு:— அதென்னமோ வாஸ்தவந்தானுங்கோ. ஸலமன் ராஜாவுக்கு ஆயிரம் பொஞ்சாதிங்கன்னு நாம்ப சொன்னாங்களே. அவுருக்கும் அவுரு பொஞ்சாதி மாருங்களுக்கும் ஒரு காலைக்கி சாப்பாடு திட்டம் என்ன தெரியுங்களா? முப்பதுபடி மொதல்தர கோதும்பை மாவு, அறுவது படி சாப்பாட்டு தானியம், அரமனெலெயே கொழுக்கவச்ச காளைமாடு பத்து, மேச்சத்தரையிலெயிருந்து புடிச்சாறது இருவது காளை மாடு, நூறு வெள்ளாடு, இதுங்க தவுர, பெருமொசலுங்க, மானுங்க, குழிமொசலுங்க, கொழுத்த கோழிங்க இம்பிட்டும் ஒரு நாள்ளெ தின்னு தீக்கறதாம். ஒவ்வொரு நாள்ளெயும் இத்தினி உருப்பிடியையும் தவறுமெ சமைக்கணுங்கறது அவரோடெ திட்டமாம்.

ஐயர்:—(காதுகளில் கையை வைத்துக்கொண்டு) சிவ சிவா! கேக்கறபோதே கொடலைக் கலக்கறதே! இத்தனை சாமான்களையும் ஒவ்வொரு நாளும் தின்னு தீக்கற பொம்புள்ளைகளை ஒரே மனுஷர் கட்டி மேய்க்கறதுன்னா, அவர் எப்பிடித்தான் இருந்தாரோ? மனசாலெகூட பாவிக்கமுடியாத சங்கதியாத்தான் இருக்கு. இதெல்லாம் எங்கே சொல்லியிருக்கு?

ஸாயப்பு:—நம்ப கிறிஸ்துவ வேதத்துலெ இதை யெல்லாம் எழுதியிருக்காங்களேன். இந்த ஸலமன் ராஜாதான் புத்திசாலித்தனத்துலெ எல்லா மனிசருக்கும் மேலானவராம். இவுரைப்பத்தி நீங்க படிச்சதில்லீங்களா? இவரோடெ வம்மிஷத்துலெதானே ஏசுநாதரு பொறந்தாராம்.

ஐயர்:—ஓகோ! அப்பிடியா! ஆயிரம் பொம்புள்ளைங்களுக்குப் புருஷராயிருந்தவரு எல்லா மனுஷரையும்விடப் புத்திசாலியானா, பதினாயிரத்துக்கு அதிகமான பொம்மனாட்டிகளுக்குப் புருஷாயிருந்த எங்க கிருஷ்ணசாமி ஸலமனைவிட பத்துப்பங்கு அதிகமான பராக்கிரமசாலியும், புத்திசாலியுமா யிருக்கணும்போ லிருக்கே. அதிகமாப் பொம்மனாட்டிகளை வச்சுக்கறவாளுக்கு புத்தியும் அதிகமாத்தான் இருக்குமோ! அதுனாலெதான் கிருஷ்ணசாமி பகவத்கீதையை உபதேசிச்சார் போலிருக்கு. ஆனா கிறிஸ்தவாளுக்கு எங்க கிருஷ்ணனைக் கண்டா ரொம்பக் கோவம் வறது. "ஆயிரம் பொம்மனாட்டிகளைக் கட்டி மேச்ச ஸலமன் புத்திமான்னு இருந்தோம்; இவன் எங்கேயிருந்து வந்தான். ஸலமனைவிடப் பத்துப் பங்கு மேலானவனா யிருக்கானே"ங்கற எண்ணம்போலிருக்கு. முக்கியமா, கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு கிருஷ்ணன்னா, சகிக்கவே முடியறதில்லே. ஆனா எங்க கிருஷ்ணசாமி ஸலமனைப்போல மனுஷன் அல்ல. அது ஞானத்தைக்கொடுக்கும் ராகுவைக் குறிக்கிறது. ஆயிரக்கணக்கான கோபிகைகள் என்பது சிருஷ்டியிலுள்ள எண்ணிக்கையற்ற கோப்யமான ஞான ரகஸியங்களைக் குறிக்கிறது. ராகு பாம்பு. அதுனாலேதான், கிருஷ்ணசாமி பாம்புமேலே நிக்கறப்புலே காட்டியிருக்கு.

ஸாயப்பு:-ஸலமன் ஒரு மலைமேலே ஜிஹோவாங்கறசாமிக்கு கோயில் கட்டினாங்கோ. அவுங்கோ ஒரு தகராறுலெ தீர்ப்புச் சொன்னாங்களாம். அது ரொம்ப புத்திசாலித்தனமா இருக்குது ஸாமீ.

ஐயர்:—என்ன தகராறு அது?

ஸாயப்பு:—ரெண்டு தேவிடியாளுங்கொ ஒரே வூட்டுலெ குடியிருந்தாளுங்கொ; ரெண்டுபேரும் புள்ளெ உண்டாயிருந்தாங்கொ. ஒருத்தி புள்ளெப் பெத்த மூணா நாளு இன்னொருத்தி புள்ளெப் பெத்தா. ஆனா, ராவுலெ அவ கொளந்தைமேலே பொரண்டு படுத்தத்துலெ, அது நசுங்கி

சத்துப்போச்சுங்கொ. அவ சத்துப்போன கொளந்தையைக் கொண்டுபோயி இன்னொருத்தி பக்கத்துலெ போட்டுட்டு, உசிரோடெ இருந்த கொளந்தையைக்கொண்டாந்து தன் பக்கத்துலெ போட்டுக்கினு. பொளுது விடிஞ்சதும் ரெண்டு பேருக்கும் சண்டை மாட்டிக்கிச்சு. உசிருக் கொளந்தையெ அவ என்னுதுங்கறு, இவ என்னுதுங்கறு. ரெண்டுபேரும் ஸலமன் ராஜா கிட்டப் போயி மொறையிட்டுக்கினுங்கொ. உசிரோடெ இருந்த புள்ளெ என்னுது என்னுதான்னு ரெண்டு பேரும் சாதிக்கறுளுங்கொ. சாக்கி இல்லெ. ராஜா பாத்தாரு. சேவுகனைக் கூப்பிட்டு, "ஒரு கத்தி கொண்டா; கொளந்தையெ ரெண்டா வெட்டி ஆளுக்குப் பாதி குடுத்துடுவோம்" இன்னுங்கொ. கொளந்தைக்கித் தாயி, "ஐயோ, மவராசா, கொளந்தையெ வெட்ட வாணுங்கொ. அவுளுக்கே குடுத்துடுங்கொ; எனக்கு அது இல்லாமெப்போனுப் போவட்டும். புள்ளெ சாவாமெ அவக்கிட்டயே இருக்கட்டும்" இன்னு கெஞ்சினுளாம். மத்தவ, "சரி; வெட்டிப்புடுங்கொ. அவுளுக்கும் வாணும், எனக்கும் வாணும்" இன்னுளாம். ராஜா பாத்தாரு, "அத்தரிமாக்கு, நீதான் திருடி. நீ பெத்தவளா யிருந்தா, கொளந்தையெ வெட்டச் சொல்லுவியா? வெட்ட வாணுன்னவதான் புள்ளையெப் பெத்தவ. அவ புள்ளெயெ எடுத்துக்கட்டும்." இன்னு அந்த வளக்கை பைசல் பண்ணுங்கொ. எப்பிடி யிருக்குது தீர்ப்பு பாத்திங்களா ஸாமீ! இதுனுலெதான் ஸலமன் ராஜா எல்லா மனுசரையும் விட 'புத்திசாலிண்ட்றுங்கொ—என்றார். அதைக் கேட்ட ஐயர் உண்மையிலேயே ஸலமன் ராஜாவுடைய புத்தி சாதுர்யத்தைப்பற்றி அபார சந்தோஷமடைந்து அவரைப் புகழத் தொடங்கினர்.

இப்படி அவர்கள் இருவரும் மூச்சு விடாமல் சம்பாஷித்திருந்து, ரயில் தஞ்சாவூரில் நின்றவுடன் அங்கு இறங்கி, ஒருவருக்கொருவர் ஸலாம் வைத்துவிட்டுப் பிரிந்து போயினர்.

திருகடன வைபவம் பிள்ளையினுடைய சேவகன் சாமான்களை யெல்லாம் இறக்கி ஒரு கூலியாளின் தலையில் வைத்து, அவனை அழைத்துக்கொண்டு, பிள்ளையவர்கள் இருந்த வண்டியில் ஏறி, தஞ்சாவூர் வந்துவிட்டதென்று கூற, வியப்பில் ஆழ்ந்துபோய்த் தமது கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்த பிள்ளையவர்கள் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்துகொண்டு எழுந்து வந்து கீழே இறங்கினர்.

வண்டியை விட்டுக் கீழே இறங்குவதற்கே அவருக்குக் கால்கள் கூசின. ஏனென்றால், கந்தசாமி, கோபாலசாமி ஆகிய இருவரது குணாதிசயங்களையும் உள்ளபடி விசாரித்தறியாமல் தாம் தமது பெண்களை அவர்களுக்கு விவாகம்செய்து கொடுக்க இணங்கியது பரிகாசத்திற்கு இடங்கொடுத்ததாகையால், தமக்கு அறிமுகமானவர் எவரேனும் தம்மை சந்தித்து, கோபாலசாமியைப் பற்றிய பிரஸ்தாபத்தை எடுத்தால், அது தம்மைக் கொல்வதுபோ லிருக்குமென்று அவர் கருதினாதலால், தஞ்சையில் இறங்குவதற்கே அவருடைய மனது இடங்கொடுக்கவில்லை. ஆயினும் தாம் அதோடு இறங்கி, ஊருக்குத் திரும்பிப்போகவேண்டுமே யன்றி, தஞ்சைக்கு அப்பால் ரயிலில் போய்க்கொண்டிருப்பது அநாவசியமான காரியமென்று கருதி அவ்விடத்தில் இறங்கிவிட்டார்.

தாம் சென்னைக்குத் திரும்புவதென்றால், முன்னிரவில் தஞ்சைக்குவரும் மெயில் வண்டியிலேயே ஏறி வரவேண்டுமாதலால், அதுவரையில் தாம் எவ்விடத்தில் தங்கியிருப்பது

என்பதைப்பற்றி இரண்டொரு நிமிஷகாலம் மனதிற்குள்ளாகவே சிந்தனை செய்தபடி வெளியில் வந்தார். அப்போது விடியற்கால வேளையாதலால், அவர் சால்வையால் தம்மைப் போர்த்திக்கொண்டிருந்தார். ஆகவே, அவர் தமது அடையாளத்தை எவரும் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்று நினைத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு வெளியில் வந்து ஒரு வாடகை வண்டியில் உட்கார்ந்து, சேவகன் சாமான்கள் சகிதம், தஞ்சைக்கு இரண்டு மயில் தூரத்தில் வடக்கில் உள்ள வெண்ணாற்றங்கரைக்குப் போய், அங்கிருந்த ஒரு சத்திரத்தில் தங்கினார்.

அந்தச்சத்திரம் ஒதுப்புறமாயிருந்தமையாலும், அங்கு தமக்கு அறிமுகமானவர்கள் எவரும் வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையாலும் அவர் அந்த இடத்தைப் பொறுக்கினார். அவர் எதிர்பார்த்தபடி அங்கு எவரும் வரவில்லையாதலால், மிகுந்த மனவேதனையோடு, அன்றைய பகலை அந்த இடத்தில் போக்கிவிட்டு, முன்னிரவில் தஞ்சைக்கு வந்த மெயில் வண்டியில் ஏறி மறுநாளைய காலையில் தேனாம்பேட்டையையடைந்து தமது பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்.

அவர் அவ்வாறு மறுநாளே திரும்பி வந்துவிடுவாரென்று அவரது மனையாள் எதிர்பார்த்தவளன்றாதலால், போன இடத்தில் ஏதோ விபரீதச் செய்தி கிடைத்திருக்க வேண்டுமென்று சுலபத்தில் அநுமானித்துக்கொண்டாள். அந்த அநுமானத்திற்கு அநுசரணையாக அவருடைய முகம் மிகுந்த மனவேதனையையும் விசனத்தையும் தோற்றுவித்ததாகையால், விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அவளுடைய மனதில் எழுந்து பெருகத் தொடங்கியது. ஆயினும், தாம் கேட்பது அருசிதமாக முடிந்துவிடுமோ என்னும் சம்சயமும் இன்னொரு புறத்தில்

தோன்றியதாகையால், தனது ஆவலையும், மனத்துடிப்பையும் அரும்பாடுபட்டு அடக்கிக்கொண்டு, அவருடைய காலைக் கடமைகளுக்கு ஆகவேண்டிய முஸ்தீபுகளை நிரம்பவும் பரபரப்பாகச் செய்துமுடிப்பதில் தன் கவனத்தைச் செலுத்தியபடி இருந்தாள்.

மதுரைவீரசாமிக்குப் பூஜை நடத்திய பண்டாரம் முதல் நாளைய மாலையிலேயே கற்பகாம்பாளிடம் சொல்லிவிட்டு, அவளால் வழங்கப்பட்ட சன்மானப் பணமாகிய 100 ரூபாயைப் பெற்றுக்கொண்டு, அவளுக்கும் பெண்கள் இருவருக்கும் விபூதிகுங்குமப் பிரஸாதம் வழங்கி, அவர்களை ஆசீர்வதித்துவிட்டு உடனே அந்தர்த்தானமாகிவிட்டார்.

இந்திராணியம்மாளது நிலைமை தலைவலி போகத் திருகுவலி பெற்றவரது நிலைமையாய் மாறியது. தான் கோபாலசாமிக்கு வாழ்க்கைப்படாமல் கந்தசாமிக்கே வாழ்க்கைப்பட வேண்டுமென்ற வேட்கையும், விரகதாபமும் அவளது நன்னிலைமையைக் குலைத்து உயிரைப் பருகியது ஒரு விதத்தில் சமனப்பட்டதானாலும், அதைவிடப் பன்மடங்கு உரமான ஏமாற்ற வேதனையும், ஏக்கமும் பெருகி சஞ்சலப்படுத்தலாயின.

அவள் தனக்கும், ஸ்வாமியாருக்கும் நடந்த சம்பாஷணை முழுவதையும் அப்படியே மோகனாம்பாளிடம் தெரிவித்தாளாதலால், அப்பெண்மணியும் திடுக்கிட்டு சகிக்கவொண்ணாத ஆச்சரியமும், சங்கடமும், மதிமயக்கமும் அடைந்து தத்தளிக்கலானாள். புஷ்பாங்கியின் படமும், அவளுக்கு எழுதப்பட்ட கந்தசாமியின் கடிதமும் தங்கள் தந்தையின் சயன அறைக்கு வந்ததையும், அதன் உண்மையை விசாரிக்கும்பொருட்டு, அவர் இரகசியமாகப்

புறப்பட்டுத் தஞ்சைக்குப் போனதையும் அக்காள் தங்கைக்குக் கூறினள்.

அதுவன்றி, கந்தசாமி நபுன்சகனென்று ஸ்வாமியார் தெரிவித்த விவரங்களையும் மூத்த மடமயிலாள் இளைய பேடன்னத்தினிடம் தெரிவிக்கவே, பின்னவள் தனது செவிகளையே நம்பாமல், ஒரே வியப்பின் வடிவமாய் மாறி, "அக்கா, இது நாம் கனவிலும் எதிர் பார்க்காத பேரிடியாக வல்லவா இருக்கிறது! உண்மை அப்படியும் இருக்குமா! அவர் உண்மையில் அலியா யிருந்தால், முன் தடவை அவருக்குக் கலியாணம் நடந்ததற்கு அவர் இடங்கொடுத்தே இருக்கமாட்டாரே. சாமுத்திரிகா சாஸ்திரம் எப்போதும் உண்மையாகவே இருக்குமென்று நாம் சொல்ல முடியுமா. அதையெல்லாம் நாம் அவ்வளவு நிச்சயமான செய்தியாயெடுத்துக்கொள்வது தவறு. மற்றப்படி ஸ்வாமியார் ஐயா சொன்ன சம்சயங்களெல்லாம் வெறும் யூகங்களேயன்றி வேறல்ல. அவை நிஜமாயுமிருக்கலாம், தப்பாகவும் இருக்கலாம். அதைப்பற்றி நீ உன் மனதை அலட்டிக்கொள்ளாதே" என்றாள்.

இந்திராணியம்மாள்:—(முற்றிலும் சோர்வும் ஏமாற்ற வீழ்ச்சியும் அடைந்தவளாய்) என்ன மோகா, போ. என் நிலைமை திரிந்துபோன பாலின் நிலைமை யாகிவிட்டது. திரிந்துபோன பால் மறுபடி ஒழுங்கான பாலாக மாறுகிறதில்லையல்லவா! அதுபோல, எனக்கு இனி நல்ல முடிவு ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை. நாம் இரகஸியத்தில் கடிதம் எழுதி யிருக்கிறோமென்பதை ஸ்வாமியார் ஐயா தெரிந்துகொண்டு, என் கலி கூடிய விரைவில் நீங்கிவிடுமென்றும், எல்லாம் பெரிய சந்தோஷத்தில் முடியுமென்றும் சொன்னார்கள். அதைக்கேட்டதில், என் பழைய பிணி சரேலென்று தெறித்து விலகியது. என்னிடமிருந்த படங்களைப் பார்த்த பிறகும், அப்பா அம்மாவுக்குப் படம் கடிதம் முதலியவை வந்த பிறகும், ஸ்வாமியார் ஐயா சொன்னது நேர்விரோதமாக மாறிவிட்டது. சமுத்திரத்தில் கிடக்கும் துரும்பு ஓர் அலையால் உருட்டி வதைக்கப்பட்டு விடுபடும் சமயத்தில் இன்னொர் அலை வந்து அதை உலப்புவதுபோல நான் புதிது புதிதான வேதனைகளில் கிடந்து தவிப்பதை விட, இந்த உயிரை விட்டுவிடுவதே இத்தனை அவஸ்தைகளுக்கும் மருந்தென்று நினைக்கிறேன். அதற்கு நீதான் உதவி செய்யவேண்டும்.

மோகனம்பாள் :—(கண் கலக்கமும், விசனமும் அடைந்தவளாய்) அக்கா, அவர்கள் அலி என்பதைப்பற்றி ஸ்வாமியார் ஐயா சொன்னது எனக்கு அவ்வளவாக நம்பிக்கைப்படவில்லை. படத்தைப் பார்த்தவுடன் அலி என்று சொன்னார்களே. அப்படியிருக்க, நாம் கடிதம் எழுதியிருக்கும் விஷயத்தில் உன் கலி நீங்கிவிடுமென்றும், எல்லாம் கூடிய விரைவில் சந்தோஷமாக முடியுமென்றும் அவர்கள் முதலில் சொன்னதற்கு அர்த்தமென்ன? அவர்கள் இந்த மாதிரி சொன்ன காலத்திலும் அந்த அலித் தன்மை இருந்ததல்லவா! படத்தை அவர்கள் பார்த்த பிறகுதான் அலித் தன்மை ஏற்பட்டதோ?

இந்திராணியம்மாள் :—பெரியவர்கள் முதன் முதலில் அப்படித்தான் பொதுப்படையாக ஆசீர்வாதம் செய்வார்கள். ஒவ்வொரு கலியாணத்திலும், பெண் கும்பிடும் போது தீர்க்க சுமங்கலியா யிருக்கவேண்டுமென்று பெரியோர்கள் தவறாமல் ஆசீர்வதிக்கிறார்கள். எவளும் விதவையே ஆகிறதில்லையா! குடுகுடுப்பாண்டிகள் நல்ல செய்திகளையே மனப்பாடம் பண்ணி வைத்துக்கொண்டு ஒவ்வொருவருக்

கும் நல்லதையே சொல்லிக்கொண்டு போகிறார்களல்லவா. அதைக் கேட்டு சிலர், உண்மையில் தங்களுக்கு நன்மை ஏற்படுமென்று நம்பி சந்தோஷமடைந்து அவர்களுக்கு அரிசி, துணி முதலியவற்றைக் கொடுக்கிறதில்லையா! அதே மாதிரி ஸ்வாமியார் ஐயா முதலில் பொதுப்படையாக ஆசீர்வாதம் செய்திருக்கலாம்; அவர்கள் நமக்கு நன்மையை விரும்புகிறார்கள் என்பதைத்தான் அது காட்டுமேயன்றி, பின்னால் அவசியம் நன்மை ஏற்பட்டுத்தான் தீருமென்று நாம் சொல்வதற்கில்லை.

மோகனம்பாள்:—(வியப்போடு புன்னகை செய்து) ஸ்வாமியார் ஐயா முதலில் சொன்னதெல்லாம் அர்த்தமில்லாத வெறும் உபசார வார்த்தையாகிவிட்டால், அவர்கள் படத்தைப் பார்த்துச் சொன்னது மாத்திரம் அவசியம் உண்மையாயிருக்குமென்று ஏன் நம்பவேண்டும். நீ நல்ல விவேகமுடையவளாயிருந்தும், முக்கியமான ஒரு விஷயத்தை நீ கவனிக்காமல் பேசுவது ஆச்சரியமாயிருக்கிறது. அவர்களிடமே நீ அதைப்பற்றிக் கேட்டிருக்கலாம். கவனக் குறைவினால், விட்டுவிட்டாயோ என்னவோ.

இந்திராணியம்மாள்:—எந்த விஷயத்தை நான் கேட்கவில்லை என்கிறாய்?

மோகனம்பாள்:—அவர்கள் அலி என்பது உண்மையானால் முதல் கலியாணத்திற்கு அவர்கள் இணங்கியே இருக்க மாட்டார்கள்.

இந்திராணியம்மாள்:—தாய் தகப்பன்மாருடைய கட்டாயத்திற்கு இணங்கியும், தம் கெடுதலை வெளியிட வெட்கியும் சிறுபிள்ளைத் தனத்தினால் அதற்கு இணங்கியிருக்கலாமல்லவா.

மோகனம்பாள்:—என்ன அக்கா, யோசனை இல்லாமல் சொல்லுகிறாயே; பெற்றதாய் தகப்பன்மாருக்கு குழந்தை அலி யென்பது தெரியாமல் போகுமா? அலியென்பது நடு வயதில் ஏற்படுவதா, பிறவியில் ஏற்படுவதா? பிறவியில் ஏற்பட்டதாயிருந்தால் குழந்தைப் பிராயத்தில், அதற்கு துணியுடுத்திவிடும் தாய்க்குத் தெரியாமல் இருக்குமா? உண்மையை யறிந்த தாய் தகப்பனார்மார் அது விவாகம் செய்துகொள்ளக் கட்டாயப்படுத்துவார்களா?

இந்திராணியம்மாள்:—பிறவியில் ஏற்பட்டதா யிருந்தால், நீ சொல்வது சரிதான். ஒருவேளை பிற்காலத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும் இருக்கலாம். இப்போது பத்திரிகைகளில் எவ்வளவு விசித்திரமான செய்திகள் வருகின்றன. ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் மாறிப்போனதாகவோ, மாறிக்கொண்டு வருவதாகவோ, பத்திரிகைகளில் நாம் படிக்கவில்லையா?

மோகனம்பாள்:—அப்படியானால், அவர்களுக்கு முதல் கலியாணம் ஆன பிறகும், அந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டதற்கு முன்னாலும் அந்த மாறுதல் உண்டாயிருக்குமென்கிறாயா?

இந்திராணியம்மாள்:—என், அப்படியும் இருக்கலாம்.

மோகனம்பாள்:—அப்படி அவர்கள் ஒன்றாயிருந்தது சொற்பகாலந்தானே. அதற்குள் பெண்பிள்ளையாக மாறிப் போய்விட்டாரா?

இந்திராணியம்மாள்:—அதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ, அது யாருக்குத் தெரியும்?

மோகனம்பாள்:—நீ சொல்லுகிறபடி கலியாணம் ஆன பிறகு அந்த மாறுதல் ஏற்பட்டதாகவே வைத்துக்கொள்வோம். அவர்கள் பெண்வேஷம் போட்டுப் படம் பிடித்தது

எப்போது? கலியாணம் ஆவதற்கு முன்னுல் அல்லவா அவர்கள் பெண் வேஷம் போட்டுக்கொண்டது. பெண் வேஷம் போட்டுக்கொண்டிருப்பது நன்ருய்ப் பலித்திருப்பதற்கு முக்கியமான காரணம் அவர்கள் அலியா யிருந்ததே என்று ஸ்வாமியார் ஐயா சொன்னுர்கள் என்ருயே.

இந்திராணியம்மாள்:—ஆம், அப்படித்தான் ஸ்வாமியார் ஐயா சொன்னுர்கள். அவர்கள் அலியாகையால், பெண் வேஷம் இவ்வளவு அழகாய்ப் பலித்திருக்கிறதென்ருர்கள்.

மோகனும்பாள்:—சரி; அப்படியே வைத்துக்கொள்வோம். அந்தப் பெண் எப்படி இருக்கிருள் என்பதைப் பார்க்கவேண்டுமென்று கருதி, தாய் தகப்பன்மார் முதலிய எவருக்கும் தெரியாமல், அவர்கள் பெண் வேஷம் போட்டுக்கொண்டார்கள்; அவர்களுடைய நண்பர், கணவனுக நடித்தார்கள். இருவரும் போய்ப் பெண்ணைச் சந்தித்து அதனிடம் பேசினுர்கள். மற்றவர்களுடைய வற்புறுத்தலினுல், அந்த விவாகம் நடந்திருக்குமானுல், அவர்கள் அப்படியெல்லாம் மாறுவேஷம் போட்டுக்கொண்டு போய்ப் பெண்ணைப் பார்த்திருக்கமாட்டார்களல்லவா.

இந்திராணியம்மாள்:—(முகமலர்ச்சியோடு) இது நல்ல கேள்விதான். இதை நான் ஸ்வாமியார் ஐயாவிடம் கேட்கவேண்டுமென்று அப்போது என் புத்தியில் படவில்லை.

மோகனும்பாள்:—நீ முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்காமல் விட்டுவிட்டாய் என்று நான் சொன்னது இதைத்தான். பெண் வேஷம் மிக அழகா யிருக்கிறதென்பதிலிருந்து, அவர்கள் அலியா யிருப்பதால் அந்த வேஷம் பலித்திருக்கிறது என்று ஸ்வாமியார் ஐயா சொன்னுர்கள். அவர்கள் அலியா யிருந்தால், அவர்கள் அந்தக் கலியாணப் பெண்ணைப் பார்க்கவே ஆசைப்பட்டிருக்க மாட்டார்கள்;

எப்போது அவர்கள் பெண்ணைப் பார்க்க ஆசைப்பட்டு இப்படி யெல்லாம் செய்தார்களோ, அவர்கள் அப்போது அலியாய் இருந்திருக்கமாட்டார்கள். பெண் வேஷம் பலித்ததற்குக் காரணம் அலித் தன்மை யல்ல.

இந்திராணியம்மாள்:—அப்படியானுல் ஸ்வாமியார் ஐயாவுடைய யூகம் சரியானதல்ல?

மோகனும்பாள்:—நிச்சயமாய் அது சரியானதல்ல.

இந்திராணியம்மாள்:—(முகமலர்ச்சியோடு) அப்படியானுல், முதல் சம்சாரம் ஏன் தற்கொலை செய்துகொண்டாள்?

மோகனும்பாள்:—அதுவும் யூகந்தானே! அதைப்பற்றி யார் எங்கே விசாரித்தார்கள்? சகல வைபவங்களும் நிரம்பப் பெற்றிருந்தவளான அவள் ஏன் தற்கொலை செய்துகொள்ள வேண்டும். அதுகூடத் தப்பான யூகமாய்த்தா னிருக்க வேண்டும்.

இந்திராணியம்மாள்:—அப்படியானுல், இப்போது முகூர்த்தத்தை நிறுத்திவைக்கவேண்டிய காரணமென்ன?

மோகனும்பாள்:—நம் கடிதத்தின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக ஏதோ யுக்திசெய்து, தற்காலிகமாய் அதை நிறுத்தி வைத்திருக்கலாம்.

இந்திராணியம்மாள்:—அப்பாவுடைய படுக்கையறைக்கு வந்த கடிதமும் படமும் எப்படி உற்பத்தியாயின?

மோகனும்பாள்:—அந்த விஷயந்தான் என் மனதில் பெரிய வேதனையை உண்டாக்குகிறது. பகைவர்கள் எவரேனும் வேண்டுமென்று அவைகளை நிர்மாணித்து அனுப்பி இருக்கலாம். எல்லாவற்றிற்கும் அப்பா தஞ்சையிலிருந்து வந்தால், அந்தச் சூதும் வெளியாய்ப் போகிறது. அதுவரையில் பல்லைக் கடித்துக்கொண் டிரு.

இந்திராணியம்மாள்:—(சோர்வாக) என்னவோ, மோகா, எனக்கு ஒன்றும் நம்பிக்கைப்படவில்லை. மிக சீக்கிரத்தில் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமென்பது ஒன்றுதான் நிச்சயமாகத் தெரிகிறது. படுக்கை யறைக்கு வந்த கடித விஷயம் நிஜமா யிருக்குமானால், நீ எனக்கு எப்படியாவது கொஞ்சம் விஷம் வாங்கிக் கொடுக்கவேண்டும். அதற்குமேல், ஒரு நிமிஷம்கூட உயிரோடிருக்க என்னால் இயலாது.

மோகனாம்பாள்:—(கண்களில் கண்ணீர் ததும்பத் தழுதழுத்த குரலில்) என்ன அக்கா, நம்மைக் கொல்ல வரும் சத்துருக்களுக்குக்கூட விஷம் கொடுக்க, நம் மனம் இசையாதே. உன்னைக் கொல்ல, விஷம் நானா வாங்கிக் கொடுக்கிறது! நீ இறந்துபோனால், அதற்குமேல் நான் இந்த உயிரை வைத்துக்கொண்டிருப்பேனா, அப்பா அம்மாதான் உயிரோடிருப்பார்களா! நாங்கள் எல்லோரும் உன்னை எங்கள் உயிருக்குயிராய் மதித்துக்கொண்டிருக்கிறோமே. அப்படி யிருக்க, இந்த அசுபமான சொல்லை ஏன் சொல்லுகிறாய்? அதைக் கேட்பது எனக்குக் கர்ண கடூரமா யிருக்கிறது—என்று மிக் உருக்கமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட இந்திராணியம்மாள் மறுமொழி கூறாமல் மிகுந்த சஞ்சலத்தி லாழ்ந்து கீழே குனிந்து மௌனம் வகித்து நின்றாள். அவளை யன்றி, மூச்சுகள் நெடுமூச்சாக வந்தன. உடம்பும், முகமும் சோர்ந்து விழ்ந்து போயின. அத்தகைய பரிதாபகரமான நிலைமையில் இரண்டொரு நிமிஷகாலம் இருந்த பின், "அப்பா, திரும்பிவந்தால்கூட, அவர்கள் அம்மாவிடம் சொல்லும் செய்தி நமக்கு எப்படித் தெரியப்போகிறது. அவர்கள் எந்த விஷயத்தையும் ரகசியமாகத் தங்களுக்குள்ளாகவே வைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த மாதிரி படமும் கடிதமும் வந்தன வென்

பதைக்கூட அவர்கள் நமக்குச் சொல்லவில்லையே. இது என்ன விபரீதத்தில்தான் போய் முடியுமோ வென்பது தெரியவில்லையே! அந்தக் கடிதத்தில் என்னதான் எழுதப்பட்டிருந்ததோ தெரியவில்லையே!" என்று நிரம்பவும் தாபந்திரியமாகக் கூறினாள்.

மோகனாம்பாள்:—அக்கா, நீ உன் மனதை அகாரணமாக அலட்டிப் புண்படுத்திக்கொள்கிறாய்! மனிதரில் சிலருக்கு புத்தி நுட்பமும், தீக்ஷண்யமான விவேகமும் அதிகமாயிருப்பதனால், அவர்களுக்கு ஏற்படும் நன்மையைவிட தீமையே பிரமாதமா யிருக்குமென்று நினைக்கிறேன். எதிர்காலத்தில் என்ன நடக்குமென்பது நமக்குத் தெரிந்தால், அது நம்மால் சகிக்க இயலாத துன்பமாகிவிடுமென்று, கடவுள் எதிர்கால விஷயங்கள் நமக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருக்கிறார். அப்படி யிருந்தும் தீக்ஷண்ய புத்தியுடையவர்கள் இனிக் காரியம் அப்படி நடக்குமோ, இப்படி நடக்குமோ என்று முன்னாகவே பலவாறு மனதில் பாவித்து, தங்களுக்குத் தாங்களே வேதனையை விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள். அந்த வகுப்பில் நீயும் சேர்ந்தவளாயிருக்கிறாய். என்னைப்போல நீயும் அப்பாவி (அபாவி) யாயிருக்கலாகாதா என்ற எண்ணமே எனக்கு உண்டாகிறது. அப்படி இருந்தால் முன் யோசனையும் இராது; அநாவசியமான முன் வேதனையும் ஏற்படாது. இப்படி யெல்லாம் முன்யூகத்தினால் பாவித்து எதிர்பார்க்கும் அபாயங்களிலும், துன்பங்களிலும் பெரும்பாகம் பொய்யாகவே முடிந்து போகிறது; உண்மையில் அது குறைவானதாகவே இருக்கிறது—என்றாள்.

இந்திராணியம்மாள்:—மோகா, நீ சொல்வது சரியான விஷயம். முன் யோசனை அதிகமாய் உடையவர்கள் தங்களைத்

தாங்களே அநாவசியமாகப் பைத்தியக்காரர்களாக்கிக் கொள்ளுகிறார்கள். நீ நல்ல சமர்த்து. உன் மனதும் தைரியமானது. நானும் உன்னைப்போல் ஏன் பிறந்திருக்கக் கூடாது. நான் ஏன் இப்படிப் பைத்தியக்காரியாய்ப் பிறந்தேன்.

மோகனாம்பாள்:—நாம் இருவரும் கொஞ்சகாலத்திற்கு மனதை இரவல் கொடுத்து மாற்றிக்கொள்வோமே. என் அபாவித்தனத்தையும், மன தைரியத்தையும் நான் உனக்குக் கொடுக்கிறேன். நீ அவைகளை இந்த விவாகம் முடிகிற வரை வகித்துக்கொள். இல்லாவிட்டால், நீ அநாவசியமாக உன் மனதைக் கொன்றுவிடுவாய்போலிருக்கிறது. அப்பா தஞ்சாவூரிலிருந்து எப்படியும் சரியான தகவலோடு திரும்புவார்கள். நான் எப்படியாவது தந்திரம்பண்ணி அம்மாவுக்குப் பக்கத்தில் இருந்து சங்கதியைத் தெரிந்துகொண்டு வருகிறேன்.

இந்திராணியம்மாள்:—கடிதத்தையும் படத்தையும் நாம் பார்க்கவேண்டாமா?

மோகனாம்பாள்:—அவைகளை நாம் பார்க்காமல் இருப்பதே நல்லது. அப்பா அவைகளைப் பார்த்து, ஏதோ கெடுதல் இருப்பதாக உணர்ந்து, தஞ்சாவூருக்கு ஓடியிருக்கிறார்கள். அவைகளை நாம் பார்த்தால், நம்முடைய மனநிலைமை இன்னம் கேவலமாகிவிடலாம். அப்பா வந்து, அவர்கள் தெரிந்துகொண்ட விஷயத்தைச் சொன்னால், அதுவே போதாதா—என்றாள்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை அப்போது முடிவடைந்தது. கந்தசாமியின் அவித்தன்மையைப் பற்றி மோகனாம்பாள் கூறிய ஆட்சேபணைகள், மூத்த பெண்மணியின் மனதில் பசுமரத்தாணிபோலப் பதிந்து,

அதில் பெருத்த மாறுதலை உண்டாக்கிவிட்டதாகையால், கந்தசாமியின் விஷயத்தில் அவளது மனத்தில் ஏற்பட்டிருந்த விரகதாபமும், ஆசாபாசங்களும் முன்னிலும் பன்மடங்கு அதிக உரமாய்ப் பெருகி இன்பகரமான வேதனைகளைக் கிளப்பிவிட்டபடியே இருக்கவே, அப்பெண்ணரசி தன் மனதை அடக்க அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தாள். தனக்கு சொந்தமாகாத ஒருவரைப்பற்றி தான் நினைத்து அவ்வாறு துன்புறுவது ஒழுங்கான காரியமல்லவென்றும், கந்தசாமியின் வடிவத்தையும் நினைவையும் தன் மனதை விட்டு அகற்றிவிட வேண்டுமென்றும் அம்மடமான் ஒரு நொடியில் தீர்மானித்துக்கொண்டு, ஏதேனும் அலுவலை கவனிக்கவோ, அல்லது, புஸ்தகத்தை எடுத்துப் படிக்கவோ முயலுவாள். ஆனால், தண்ணீரில் கல்லைப் போட்டவுடன் விலகும் பாசி உடனே வந்து தண்ணீரை மூடிக்கொள்வது போல, அப்பெண்மணியின் பாசம் திரும்பி வந்து கப்பிக் கொள்ளுமாதலால், அவளது தீர்மானமும் மனவுறுதியும் விலகிப் போய்விடும்.

அவ்வாறு அந்த நற்குண பைங்கிளியாள் சூறாவளிக் காற்றிலகப்பட்டுத் தவிக்கும் சருகுபோல, தன் மனவேகத்திற்கு அடிமையாய் அதன் வசப்பட்டு, ஓயா வேதனையிலாழ்ந்திருந்தாள்.

அருங்குண மணியான மோகனாம்பாள் அந்த விவாக விஷயத்தில் தன் மனதில் ஏற்பட்ட கிளர்ச்சியையும் இன்பகரமான சஞ்சலத்தையும், ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டதன்றி, தன் அக்காள் விஷயத்தில் மிகுந்த இரக்கமும், அநுதாபமும் கொண்டு, தான் எப்பாடுபட்டாயினும், அவளது மன வேதனையை விலக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டதன்றி, அந்த விஷயத்தில் தான் தன் தாய் தகப்

பன்மாருடைய கோபத்திற்கும், கண்டனத்திற்கும் இலக்கானாலும், அதையெல்லாம் தன் அக்காள் பொருட்டு ஏற்று, அவளுக்கு இதத்தைத் தேடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, தன் அக்காளுக்கு ஆகவேண்டிய உபசாரணைகளை நடத்திய காலம்போக, மற்ற காலத்தில் தன் தாயிடம் நெருங்கி ஒட்டிக்கொண்டு நடந்து, அவளுடைய அந்தரங்கமான வாத்சல்யம் தன் விஷயத்தில் சுரக்கும்படியான காரியங்களைச் செய்துகொண்டிருந்தாள்.

பகையாளியின் குடியை உறவாடிக்கெடு என்று முன்னோர் நீதி எழுதிவைத்திருக்கிறார்கள். நமக்குக் கொடிய பகைவனாயிருப்பவனிடம் கூட நாம் போய் உறவாடி, அவனிடம் நாம் பிரியமாயிருப்பவர் போல் நடித்தால், அவனுடைய பகை அன்பாக மாறிப்போகுமென்றும், அது அவனை அழிப்பதற்கு நல்ல உபகரணமாயிருக்குமென்றும் முன்னோர் அநுபவத்தில் கண்டு எழுதிவைத்திருக்கிறார்கள். அந்தரங்கமான ஆசாபாசங்களைத் தன் குழந்தைகள்மீது இயற்கையிலேயே கொண்டுள்ளவளும், பரமசுகிருதமானவளுமான பெற்றதாயிடம் தன் குழந்தை பிரியத்தைக்காட்டி, ஏவா மக்கண் மூவா மருந்தென்னும் நீதிப்படி, அவளுடைய கடமைகளைத் தானே வலித்துச்செய்து, தனது பணிவையும் பயபக்தி விநயத்தையும் காட்டினால், அந்தத் தாய் அத்தகைய வசிகரமான வலையில் விழாமலிருப்பது சாத்தியமான காரியமா? அவ்வீழ்ச்சி மனித இயற்கைக்கு ஒத்த காரியமல்லவா. ஆகவே, உள்ளுக்குள் ஒப்புயர்வற்ற விலைமதிப்பற்ற வைரத்தை அடக்கிய கல், மேல் புறத்தில் கரடு முரடாயிருப்பது போலவும், உள்புறத்தில் மாதுரியமான சுளைகளை மறைத்துக் கொண்டிருக்கும் பலாப்பழத்தின் மேலெல்லாம் நாம்பும், தோலும், முள்களுமாயிருப்பது போலவும், உடம்

பிற்கு சுகத்தையும், இதத்தையும், ஆரோக்கியத்தையும் தரத்தக்க அமிர்தமாகிய விரோசனமருந்து, முதலில் குமட்டலையும், வேதனையையும் உண்டாக்குவது போலவும், கொடிய பயங்கரமான பேய் பிசாசுகள் போலத்தோன்றும் ஜார்ஜ் மன்னர்களும், அவரது பினல்கோட் சட்டங்களும், ஜெயில் சட்டங்களும், பொது ஜனங்களுக்குப் பரம இதத்தையும், அமைதியான வாழ்க்கையையும், பாதுகாப்பையும் உள்ளடக்கிக்கொண்டிருப்பது போலவும், கற்பகாம்பாள் என்னும் உத்தமி தமது புதல்வியரை நற்குணவதிகளுக்குரிய முறைகளில் பயிற்றவேண்டுமென்ற எண்ணத்துடன் வெளிப் பார்வைக்கு அவர்களிடம் மிக கண்டிப்பாக நடந்துகொண்டாளானாலும், உள்ளூற அவர்கள்மீது வைத்திருந்த ஆசாபாசங்களுக்கு நாம் அளவு சொல்வதென்பது பலியாத காரியமென்பதை நாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். சுருங்கக் கூறுமிடத்து கற்பகாம்பாள் தன் இரண்டு புதல்வியரையும் தனது உயிர் நிலையாகவே மதித்து, கண்மணிகளை இமைகள் காப்பதுபோலக் காத்து அவர்கள்மீது ஓர் அற்பத்தூசி படிவதைப்பற்றிக் கூட, மூன்று தினங்கள்வரையில் சஞ்சலமடையக் கூடியவளாயிருந்தால், அந்தப் புனிதவதியின் மனப்பான்மையை நாம் இன்னம் வேறுவிதமாக விளக்குவது மிகையேயாகும்.

அதில் இன்னொரு விஷயமுமிருந்தது. கற்பகாம்பாள் தனது இரண்டு புத்ரி ரத்னங்களோடும் பழகியதில், இளைய நங்கை தோற்றத்திலும், குணவொழுக்க நொடி நடை பாவனைகளிலும் அசலுக்கு சரியான நகல் என்பதுபோல, தன்னைப்போலவே இருந்தாள் என்று உணர்ந்துகொண்டிருந்தவளாதலால், இளைய பெண்மணியின் காரியங்களைப் பார்க்கும் சிற்சில சமயங்களில் கற்பகாம்பாளுக்கு தன்னை

மிஞ்சி ஆநந்தம் பொங்கிவிடும். அந்த சமயத்தில், அவளது இயற்கையான அதிகார கம்பீர நிலைமை ஒரு நிமிஷகாலம் இருந்த இடம் தெரியாதபடி பறந்துபோகும். பெற்றோர் பெரியோர் கூட இருக்கையில், யௌவனப் புருஷனும், யௌவன மனைவியும் ஒருவரை யொருவர் நிமிர்ந்து பாராமலும், ஒருவரோ டொருவர் பேசாமலும், கொடிய பகைவர்கள் போல் ஒருவரைக்கண்டு மற்றவர் கிலேச மடைந்து தூரவிலகுவதும், பிறர் இல்லாமல் தாம் மாத்திரம் ஏகாந்தமாயிருக்கும் காலத்தில் ஒருவரோ டொருவர் குழந்தைகள் போல் கொஞ்சி, ஸரஸ விளையாடல்களில் ஈடுபடுவதும் சர்வ சாதாரணமாய் நடக்கும் காரியங்களல்லவா.

நிகரற்ற தேகபலமும் அபாரமான பருமனுமுள்ள ஒரு யானையை மிக அற்பமாகத் தோன்றும் ஓர் அங்குசம் எவ்வளவு திறமையாக நடத்திவைக்கிறது! அது இல்லாவிடில், யானை கட்டிலடங்காமல் ஊருக்கும் தனக்கும் அநர்த்தத்தை விளைவித்து விடுமல்லவா. அதுபோல, புருஷர் மனைவி, தாய் குழந்தைகள் முதலியோருக்கு இயற்கையிலேயே ஏற்பட்டுள்ள ஆசாபாசங்களைக் காட்டுவதிலும் ஓர் ஒழுங்கும், கட்டுப்பாடும் இருத்தல் வேண்டுமென்று முன்னோர் தம் அநுபவப்பயனாய் நிர்ணயித்திருப்பதைத் தான் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை கற்பகாம்பாள். நன்குணர்ந்தவளாதலால், அவள், அரும்பாடுபட்டு ஏராளமான தேனை நமக்குச் சேர்த்துவைத்துக் கொடுக்கும் வண்டுகள் முதலில் நம்மை சுருக்கென்று கொட்டுவதுபோல தன் குழந்தைகளிடம் பெரும்பாலும் நடந்து கொண்டாலும், மோகனாம்பாளுடைய அதீதமான கவர்ச்சி அவளையும் தன் வசப்படுத்தியது. ஆகவே மோகனாம்பாள் தன் தாய்க்குப் பரம சுகிர்தமானவளாய்த் தன்னைச்செய்து கொண்டாள்.

அதுவன்றி, தான் மோகனாம்பாளிடம் தனது கம்பீரத்தையும், அதிகார தோரணையையும் விட்டு சாதாரணமாய் நடந்து மனதிலுள்ள அந்தரங்கமான விஷயங்களை வெளியிட்டாலும், அவள் தன் தாயிடம் வைத்த மரியாதையிலும், மதிப்பிலும், பயபக்தி விசுவாசத்திலும் எள்ளளவும் தளர்ந்து ஒழுகமாட்டாள் என்ற உறுதியான நம்பிக்கையை கற்பகாம்பாள் கொள்ளும்படி, மோகனாம்பாள் அவ்வளவு சிலாக்கியமான முறையில் தன் தாயிடம் நடந்து கொண்டாளாதலால் குடும்பத்தைப் பற்றிய எந்த இரகசியம் மோகனாம்பாளுக்குத் தெரிந்தாலும், குடும்பத்தின் கண்ணியம் எந்த விதத்திலும் பாதிக்கும்படியாக அவள் நடந்துகொள்ள மாட்டாளென்றும், அவள் அபாரமான விவேகி யென்றும் கற்பகாம்பாள் எண்ணத் தொடங்கிவிட்டாள்.

அந்த நிலைமையிலேதான் திருநடன வைபவம் பிள்ளை தஞ்சையிலிருந்து திரும்பி வந்து சேர்ந்தார். அவர், நாம் மேலே குறித்தபடி, உர்சாகம், முகமலர்ச்சி முதலியவற்றின் குறிகளின்றி, பெரிதும் கவலையிலும், ஏக்கத்திலும் ஆழ்ந்திருப்பவர்போலக் காணப்பட்டார். தாம் தெரிந்துகொண்ட விஷயத்தின் விபரீதத் தன்மையினால் ஏற்பட்ட மனவேதனைக்குத் துணையாக, அதைத் தாம் தமது மனையாட்டியிடம் எப்படி வெளியிடுவதென்னும் கவலையும் தயக்கமும் கூடச் சேர்ந்துகொள்ளவே, அவரது தோற்றம் ரொம்பவும் விகாரமானதாகத் தோன்றியது. உண்மையில், அவர் அந்த விஷயத்தைத் தமது மனையாட்டியிடம் தெரிவிக்க அஞ்சினார். அவர் அவளிடம் பயந்து அவ்வாறு தயங்கினாரென்று எவரும் கருதுதல் தவறு. தாம் தெரிந்துகொண்டு வந்த விகாரமான விஷயங்களை நற்குணவதியான தம் நாயகியிடம் தெரிவித்தால், அது அவளது மனதை எப்படி பாதிக்குமோ,

அவள் எவ்விதமான வேதனையை அடைவாளோவென்ற துயர சிந்தையினாலேயே, அவர் அவளிடம் விஷயத்தைத் தெரிவிக்கப் பின் வாங்கினார்.

அதற்குக் கற்பகாம்பாள் வேறு விதமாக அர்த்தம் செய்துகொண்டாள்; போன இடத்தில் ஏதோ விபரீதச் செய்தி கிடைத்திருக்கிறதென்றும், அதைப்பற்றி அவர் எல்லோர்மீதும் வெறுப்பும், கோபமும் கொண்டிருக்கிறாரென்றும், அந்த சமயத்தில் தான் துணிந்து அவரிடம் எதையேனும் கேட்டால், அதனால், அவருடைய கோபம் அதிகரிக்குமென்றும் தனது கடமைகளைத் தான் சோர்வின்றிச் செய்துகொண்டே போனால், அவர் தாமாகவே விஷயங்களை எப்படியும் தெரிவிப்பாரென்றும் நினைத்து, அப்போதே புதுமையாய் மாமியார் வீட்டிற்கு வந்த நாட்டுப் பெண் நடந்துகொள்ளும் தோரணையில் மான்போல மருண்டு, பயந்து நடுங்கி அவருக்குரிய பதிசேவைகளையெல்லாம் மிக சிரத்தையாகவும் ஜாக்கிரதையாகவும் செய்துகொண்டே போனாள்.

விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் தமது மனையாட்டியின் மனதை அபாரமாக வதைக்குமென்பதை அவர் நன்றாக உணர்ந்தாரானாலும், உடனே விஷயத்தைத் தெரிவிக்க விரும்பவில்லை.

ஏனென்றால், இரவில் ரயிலில் யாரோ இரண்டு வழிப்போக்கர்கள் பேசிய பொறுப்பற்ற லோகாபிராமச் செய்தியை வேதவாக்கியமாக நம்பித் திரும்பி வரலாமா என்று கற்பகாம்பாள் அவசியம் கேட்பாளென்று அவர் எதிர்பார்த்தார். தஞ்சை ஜில்லா கோர்ட் ஜட்ஜ் துரை சுடப்பட்டுப்போயிருந்தால், அதைப்பற்றிய தகவல் தந்தி

யின் மூலம் சென்னை துரைத்தனத்தாருக்கு உடனே எப்படியும் அறிவிக்கப்பட்டிருக்குமென்பதை அவர் உணர்ந்தார். தாம் சில தினங்களாகத் தமது மூத்த புதல்வியின் நோயைக் கருதி, தமது காரியாலயத்திற்குப் போகாமலும், சர்க்கார் விஷயங்களை கவனிக்காமலும் இருந்ததால், தமக்கு விஷயம் தெரியாமல் போய்விட்டதென்றும், தாம் காரியாலயத்திற்குப் போயிருந்தால், தஞ்சைக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டிராதென்றும் அவர் கருதினாராதலால், அவர் தமது போஜனத்தை முடித்துக்கொண்டவுடன் மோட்டார் வண்டியில் அமர்ந்து துரைத்தனக் காரியாலயத்திற்குச் சென்று, மிஸ்டர் சந்திரசேகர் சுடப்பட்டது சம்பந்தமாக வந்திருந்த அறிக்கைகளை வரவழைத்துப் படித்துவிட்டு, தாம் ரயிலில் தெரிந்துகொண்ட செய்தி பெரும்பாலும் நிஜமானதென்று நிச்சயப்படுத்திக்கொண்டு உடனே தமது பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்.

சேர்ந்தவர் தமது சயன அறைக்குப் போய்ப் படுத்துக்கொண்டார். இரண்டு இரவுகளில் ஒழுங்கான தூக்கமில்லாமல் சஞ்சலமடைந்திருந்ததனால், அவருடைய சரீரத்தில் ஒருவித அயர்வு ஏற்பட்டிருந்ததனால், அதற்குப் பரிகாரமாக அவர் தமது சயன அறையை நாடினாரானாலும், அதில் முக்கியமான இன்னொரு கருத்தும் அடங்கியிருந்தது. தாம் தஞ்சைக்குப் போய்த் தெரிந்துகொண்டு வந்த செய்தியைத் தனிமையாகத் தெரிவிக்கத் தாம் விரும்புவதாகத் தமது மனையாட்டிக்கு நோட்டீஸ் கொடுப்பதுபோலவும் அந்தச் செய்கை இருந்தது.

அவரது இரட்டைக் கருத்துகளையும் நுட்பத்தில் உணர்ந்துகொண்ட, அநுபவசாலியான கற்பகாம்பாள்,

அவருடைய சயன அறையை அடைந்து, அவருடைய கால் பக்கமாகப் போய் நின்று, "இரண்டு தினங்களாய் சரியான தூக்கமில்லாவிட்டால், உடம்பு அவஸ்தையாகத்தான் இருக்கும். சாயங்காலம் வரையில் நிம்மதியாய்ப் படுத்துத் தூங்கி எழுந்திருங்கள்" என்று அன்பொழுகக் கூறியபடி அவருடைய கால்களையும் உடம்பையும் மிருதுவாகப் பிடித்து வருடிவிடத் தொடங்கினாள்.

தஞ்சையிலிருந்து தனது தந்தை எவ்விதமான செய்தியைக் கொணர்ந்திருப்பாரோ என்பதைத் தெரிந்துகொள்ள, மோகனாம்பாள், தனது தாயைவிட ஆயிரமடங்கு அதிக ஆவல்கொண்டு துடிதுடித்திருந்தாளானாலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், தனது தாயுடன் கூடவே அநுசாரணையாயிருந்தாள். தனது தந்தை வாயையே திறவாமல் மௌனமாயும், அயர்வாயும், சந்தோஷமற்றும் இருந்ததையும், தனது தாய் அவரிடம் மிக சாமர்த்தியமாய் நடந்துகொண்டதையும், முடிவாக அவர் வெளியில் போய்விட்டு வந்து சயன அறைக்குள் போய்ப் படுத்ததையும், தனது தாய் சாலக்காக அங்கு சென்று அவருக்கு இதமாகப் பேசி உடம்பை வருடிவிட்டதையும் நுட்பத்தில் கவனித்த மோகனாம்பாள், மிக சங்கடமான நிலைமையில் புருஷரிடம் உத்தம பத்னி அப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் தன் மனதில் பதியவைத்துக்கொண்டவளாய், ஒரு தந்திரம் செய்தாள்.

அப்போது தனது தந்தை எப்படியும் தாய்க்கு முக்கியமான விஷயத்தைத் தெரிவிப்பாரென்று எதிர்பார்த்தாளாதலால், தனது அக்காளின் பொருட்டு, தான் அதை எப்படியாகிலும் அறியவேண்டுமென்று அம்மட மங்கை

தீர்மானித்துக்கொண்டாள். தனது தந்தையும், தாயும் போஜனம் செய்த பிறகு தாம்பூலம் தரிப்பது வழக்கமாதலாலும், அன்று அந்தக் காரியம் செய்யப்படவில்லையாதலாலும், தான் தாம்பூலத் தட்டை வைத்துக்கொண்டு, அவர்களுடைய சயன அறையின் வாசற்படியில் போய் நின்றால், உள்புறத்தில் பேசப்படுவது தனக்கு நன்றாகக் கேட்குமென்றும், தனது தாய் வெளியில் வரும்பட்சத்தில், தான் தட்டை நீட்டினால், அவள் தன்மீது சம்சயமோ, கோபமோ கொள்ளாமல், தனது அக்கரையான நடத்தையைப்பற்றித் தன்மீது நிரம்பவும் சந்தோஷங்கொள்வாளென்றும் கருதி, வெற்றிலை பாக்குத் தட்டுடன் அவர்களது சயன அறைக் கதவண்டை ஓசையின்றிப் போய் நின்றாள்.

அப்போது தனது தாய் மாலை வரையில் தூங்கும்படி தந்தைக்குச் சொன்னது, மோகனாம்பாளின் செவிகளில் நன்றாகப்பட்டதாகையால், அதற்குமேல் என்ன பேசுவார்களென்பதை மிக ஆவலோடு எதிர்பார்த்தவளாய் நின்றாள்.

அப்போது திருநடன வைபவம் பிள்ளை அன்பாகப் பேசத் தொடங்கி, "ஸ்வாமியார் ஐயா எப்போது போனார்கள்?" என்றார்.

கற்பகாம்பாள்:—நேற்று சாயங்காலம் போனார்கள்.

திரு. பிள்ளை:—நான் சொன்னபடி ரூபாய் கொடுத்தாயா? அவர்கள் வாங்கிக்கொண்டார்களல்லவா?

கற்பகாம்பாள்:—எஜமானர் சொன்னபடி 100 ரூ கொடுத்தேன். முதலில் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; பிறகு அவ்வளவு பெரிய தொகை தமக்குத் தேவையில்லையென்றார்கள். நான் வற்புறுத்திக் கொடுத்துவிட்டேன்.

திரு. பிள்ளை:—போகும்போது, அவர்கள் ஏதாவது சொன்னார்களா?

கற்பகாம்பாள்:—ராணியின் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளச் சொன்னார்கள்; தஞ்சாவூரார் சங்கதியை ஆற அமர விசாரித்துத் திருப்தி செய்துகொண்டு, விவா

கத்தை நடத்தச் சொன்னார்கள். அதுவுமன்றி, ராணி நிரம்பவும் துர்ப்பலமான நிலைமையில் இருப்பதால், குறைந்தது ஆறுமாத காலமாவது, உடம்பைத் தேற்றி, அதற்கு மேல் விவாகத்தை நடத்தச் சொன்னார்கள்.

திரு. பிள்ளை:—நான் எத்தனையோ போலிப் பண்டாரங்களைப் பார்த்திருக்கிறேன். எல்லாரும் வேஷதாரிகள். தங்களுடைய சக்திக்கு மீறிய காரியங்களையும் தெய்விகமான காரியங்களையும் தாம் செய்வதாகக் காட்டிப் பணம் பிடுங்க முயலுவார்கள். இவர்கள் அந்த மாதிரியுமில்லை; இவர்களுக்குப் பணத்தாசையும் இருப்பதாகத் தெரியவில்லை.

கற்பகாம்பாள்:—இவர்கள் மாத்திரம் வந்திராவிட்டால் இந்நேரம் நம்முடைய ராணி போன இடத்தில் புல்முளைத்துப் போயிருக்கும். இவர்களுக்கு முன் எத்தனை டாக்டர்கள் வந்தார்கள்! எவ்வளவு ரூபாய் செலவாயிற்று! நாளுக்குநாள் இளைப்பு அதிகப்பட்டதேயன்றி குறையவே இல்லையே! இவர்கள் வந்த பிறகு இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாகவே குணம் தெரிய ஆரம்பித்துவிட்டதே! இத்தனைக்கும் மருந்தே கொடுக்கவில்லையே!

திரு. பிள்ளை:—வேப்பிலைக் குழையடிப்பதில் எவ்வளவு அருமையான மருந்து ஸத்து அடங்கி யிருக்கிறது தெரியுமா. கடுமையான அம்மை முதலியவைகளுக்கு வேப்பிலையைத் தவிர வேறு மருந்துண்டோ? வேப்பிலையின் குளிர்ச்சியும், மணமும் உடம்பில் பட்டுக்கொண்டே இராவிட்டால், அம்மை கண்டவர் அந்த வேதனையை ஒரு நிமிஷம் தாங்க முடியுமா? அவர்கள் தேறிப் பிழைப்பதுதான் சாத்தியமா?

கற்பகாம்பாள்:—வேப்பிலையுந்தான்; மந்திர சக்தியுந்தான்.

திரு. பிள்ளை:—மந்திர சக்தியால் ஏதாவது பலிக்குமா என்பது நமக்கு திருப்திகரமாகத் தெரிகிறதில்லை. வேப்பிலையின் சக்தி கண்கூடாகத் தெரிகிறது.

கற்பகாம்பாள்:—வேப்பிலையில் இவ்வளவு அபார சக்தியடங்கியிருக்கிறதென்பதை இங்கிலீஷ் தேசத்தார் தெரிந்து

கொள்ளவில்லையே. நம் நாட்டார் இவ்வளவு அருமையான ஆட்சுமத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்களே! இவர்கள் மந்திர சக்தியில் நம்பிக்கை வைப்பது மாத்திரம் முட்டாள்தனமென்று நாம் சொல்லிவிட முடியுமா? மருந்து கண்கூடாகத் தெரியக்கூடியது; மந்திர சக்தி கண்ணிற்குப் புலப்படாதது. நமக்குப் புலப்படாததை யெல்லாம் இல்லையென்று சொல்லிவிட்டால், கடவுள் பாடுகூடத் திண்டாட்டமாகிவிடும். அவர் நம்முடைய வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவராகையால், அவரும் இல்லாமல் போய்விடுவார்.

திரு. பிள்ளை:—மனிதன் மாந்திரீகத்தினால் எதையும் செய்ய முடியாது என்று சொன்னால், நீ ஒப்புக்கொள்ள மாட்டாய். அதைப்பற்றி வாக்குவாதம் பண்ண இது சரியான சமயமல்ல. அது எப்படியாவது இருக்கட்டும். நான் தஞ்சாவூருக்கு முக்கியமான காரியத்தை உத்தேசித்துப் போனேன், போய்விட்டு வந்தேன். அது எப்படி முடிந்ததென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் உனக்கு உண்டாகவில்லையா?

கற்பகாம்பாள்:—(கண்கலக்க மடைந்து) அதைப்பற்றி நான் எஜமானரிடம் கேட்கவில்லை யென்று வேண்டுமானால் சொல்லலாம்; என் மனதில் அதைப்பற்றி எண்ணம் உண்டாயிற்று இல்லையா என்பது என் மனதிற்கல்லவா தெரியவேண்டும்; அது மற்றவருக்கு எப்படித் தெரியும்? போய்த் தெரிந்துகொண்ட செய்தியை அடியாளிடம் சொல்ல, எஜமானருக்கு எப்போது சித்தம் ஏற்படுமோ வென்று ஒவ்வொரு விநாடியிலும் எதிர்பார்த்தபடியேதான் இருக்கிறேன். எஜமானருக்கு சந்தர்ப்பம் சரியா யில்லாதபோது, அதைப்பற்றி கேட்பதற்கு அவ்வளவு துடுக்கும் துணிச்சலும் இந்த ஏழைக்கு ஏற்படவில்லை.

திரு. பிள்ளை:—நீ பேசுவது ஆச்சரியமா யிருக்கிறது. முக்கியமான தலை போகிற விஷயத்தில்கூட நீ உன் ஆவலை வெளிப்படுத்தாமல் இருக்கிறாயே! அது எப்படித்தான் சாத்தியமோ வென்பது தெரியவில்லை.

கற்பகாம்பாள்:—பெண் ஜென்மம் ஸ்வதந்திரமில்லாதது தானே. பசியோ, தாகமோ, வேதனையோ, ஆவலோ, துக்கமோ, கோபமோ, தாபமோ எதுவாயிருந்தாலும், ஸகித்து, நிதானம் தவறாமல், அவை தன் கடமைகளை பாதிக்காமல் நடந்துகொண்டேதான் போகவேண்டும்.

எஜமானருடைய காரியங்களை ஒழுங்காய் நடத்திக் கொண்டேயிருந்து, அந்தமனதில் எப்போது கருணை பிறக்குமோவென்று எதிர்பார்த்துக் காத்திருந்தால், அது வீணாய்ப் போகாது. கிளைகளில் கெட்டியாய் ஒட்டிக் கொண்டிருக்கும் காய்களும், பழங்களும் கொஞ்சகாலத்தில் தாமாகவே கனிந்து நைந்து பூமாதேவியிடம் போய்ச் சேரவில்லையா! முக்கியமான விஷயத்தை அடியாளிடம் உடனே சொல்லவேண்டுமென்னும் ஆவல் எஜமானருக்கு இல்லாதபோது, அதில் ஏதோ கருத்து அடங்கி யிருக்கிறதென்று அடியாள் எண்ணி பூமாதேவியின் பொறுமையை வகிப்பதே சரியான காரியம்.

திரு. பிள்ளை:—பொறுமைக் குணத்தை வகிப்பதற்கு ஒரு வரம்பில்லையா! நீ சொல்வது, பெரியோர் சொல்லும் ஒரு கதையை நினைப்பூட்டுகிறது. ஒரு சங்கீத வித்வான் தன் சிஷனைப் பார்த்து, "நீ இனி என்னிடம் எதைச் சொல்வதானாலும், ராக ஆலாபனையோடு சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால், உனக்கு, சீக்கிரம் சங்கீதத் தேர்ச்சி ஏற்படும்" என்று சொல்லிவைத்திருந்தாராம். அவர் எங்கேயோ அலுவலாய்ப் போயிருந்த காலத்தில், அவருடைய வீட்டில் சில துஷ்டர்கள் புகுந்து அவருடைய சம்சாரத்தை பலாத்காரம் செய்ய எத்தனித்தார்கள். அந்த அம்மாள் அவனைத் தன் புருஷரிடம் ஓட்டி, அவரை உடனே அழைத்துவரச் சொன்னாளாம். சிஷன் ஓடி குருவைத்தேடிப் பிடித்து, அவரிடம் விஷயத்தை உடனே தெரிவிக்காமல், ஒரு பெரிய கன ராகத்தை ஆலாபனை செய்து, நடுவில் ஒவ்வொரு எழுத்தாய்ப் புகுத்தி, வீட்டில் ஏற்பட்ட அபாயத்தைத் தெரிவிக்க ஒரு நாழிகை காலம் பிடித்ததாம்.

அதற்குமேல், குரு வீட்டிற்குப் போக, அங்கு அவர் செய்யக் கூடிய வேலை எதுவும் மிச்சமில்லாமல் போயிற்றாம். அதுபோ லிருக்கிறது நீ சொல்வது—என்றார்.

அதைக் கேட்ட கற்பகாம்பாள் அசட்டுப் புன்னகை செய்து, "எஜமானர் சொன்ன பழமொழி நல்ல பொருத்தமான பழமொழிதான். அந்த சிஷனுடைய புத்தி எவ்வளவோ, அவ்வளவு புத்திதான் அடியாளுக்கு இருக்கிறதென்று எஜமானர் அபிப்பிராயப்படும்போது, அதையும் நான் ஒரு பெருமையாக வகிக்கவேண்டியதுதான். என்னுடைய யோக்கியதை எவ்வளவுக் கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எஜமானருடைய பெருமை உயர்ந்து தோன்றுகிறது. ஒரு பவுனைவிட காலணா எவ்வளவோ மடங்கு சிறியது. அந்தக் காலணாவும் ஒரு தம்பிடியானால், ஒரு பவுனின் மகிமை இன்னம் அதிகரிக்கிறது. என் மாற்றுக் குறைவதைப்பற்றி நான் விசனப்படுவதைவிட, எஜமானருடைய மாற்று அதிகரிப்பதைப்பற்றி நான் சந்தோஷமே அடையவேண்டும். எஜமானருக்கு முன்னால் நான் அணுவிலும் சிறிய பரமாணுவாய் இருக்கவே விரும்புகிறேன்; அதையே அரிய பெரிய பாக்கியமாய் நான் மதிக்கிறேன். நான் எஜமானருக்குமுன் அடிமையிலும் பரம அடிமையின் ஸ்தானத்தையே வகிக்க விரும்புகிறேனென்பது எஜமானருடைய மனதில் படுமானால், நான் என்னுடைய கடமையை ஒழுங்காய் நடத்தினவள் ஆவேன்—என்றாள்.

அந்த உத்தமியின் உருக்கமான சொற்களைக் கேட்ட திருநடன வைபவம் பிள்ளை முற்றிலும் கலங்கிப்போனவராய், அதற்குமேல், அவளிடம் வாக்குவாதம் நடத்த விரும்பாமல், ரயிலில் ஐயருக்கும் ஸாயப்புக்கும் நடந்த சம்பாஷணையின் சாராம்சத்தை எடுத்துக் கூறியதன்றி, தஞ்சாவூர் ஜட்ஜி சுடப்பட்டது, கோபாலசாமி கைதி செய்யப்பட்டது முதலிய தகவல்களடங்கிய அறிக்கைகள் துரைத்தனத்தாருக்கு வந்திருப்பதைத் தாம் பார்த்து

199432

நிச்சயப்படுத்திக்கொண்டபின் அவளிடம் விஷயத்தைத் தெரிவிக்க எண்ணியதாகவும், அவைகளைப் பார்த்துவிட்டு அப்போதே வந்ததாகவும் கூறினார்.

அதைக் கேட்ட கற்பகாம்பாள் திடுக்கிட்டு நடுநடுங்கி பெருத்த திகிலைத் தோற்றுவித்து, "ஆகா! இது பெருத்த இடியா யிருக்கிறதே! இந்தச் செய்தியை நம் குழந்தைகள் கேட்டால், அவர்களுக்கு எப்படி இருக்குமோ தெரியவில்லையே! அப்பேர்ப்பட்ட மனிதர்களோடு நாம் சம்பந்தம் வைத்துக்கொண்டது பிரமாதமான தலைகுனிவாய்விட்டதே! நல்ல வேளையாக, இந்த முகூர்த்தம் நடப்பதற்குள் இந்த விபரீதமெல்லாம் நேரிட்டதே! அதுவும் ஒரு விதத்தில் கடவுளின் கருணைகடாக்ஷந்தான்" என்றாள்.

அவர்கள் சம்பாஷித்திருந்தது முழுதும், கதவிற்கப்பால் நின்றுகொண்டிருந்த மோகனாம்பாளது செவிகளில் நன்றாகப் பட்டதாகையால், அவள் தனது தாயைவிடப் பன்மடங்கு அதிகமான ஆச்சரியமும், மனக்கலக்கமும், வேதனையும் அடைந்து, தான் கேட்டதெல்லாம் மெய்யோ, பொய்யோவென்று சம்சயித்தவளாய்ப் பேச்சு மூச்சற்று சித்திரப்பதுமைபோலக் கதவோடு கதவாய் ஒன்றி நின்றாள்.

அப்போது திருநடன வைபவம்பிள்ளை, மேலும் பேசத்தொடங்கி, "இப்போது நான் சொன்ன விஷயம் எதையும் நீ நம்முடைய குழந்தைகளிடத்திலோ, வேறு எவரிடத்திலோ சொல்லவேண்டாம். முகூர்த்தத்தை மன்னார்குடியாரே நிறுத்தி வைத்திருக்கிறார்கள்; கோபாலசாமி பிள்ளை இந்த மாதிரி எக்கச்சக்கமான நிலைமையில் இருப்பதைக் கருதியேதான் அவர்கள் அப்படி எழுதி இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். முகூர்த்தம் இதோடு ஒரே முடிவாக நின்று போனதாகவே நாம் கருதவேண்டியது தான். அவர்களுக்கு இவ்வளவு பெரிய மானக்கேடு ஏற்பட்ட பிறகு நம்மிடம் மறுபடி அவர்கள் விவாகப் பிரஸ்

தாபம் செய்யமாட்டார்கள். இந்தக் கலியாண ஏற்பாடு அப்படியே மறைந்து போகட்டும். கொஞ்சகாலம் போன பிறகு நாம் வேறு இடம் பார்த்து, கலியாணத்தை நடத்துவோம்" என்றார்.

கற்பகாம்பாள்:—நமக்குப் படமும் கடிதமும் வந்தனவே. அதில் குறிக்கப்பட்ட புஷ்பாங்கியின் பங்களாவிற்குத்தானே, தாம் கண்களைக் கட்டிக்கொண்டுபோனதாக, டிஸ்டிரிக் முன்ஸிப் சொல்லுகிறார்களாம். ஸப்-ஜட்ஜ் யாரையோ கூட்டிக்கொண்டு இந்த ஊருக்கு வந்திருப்பதாகச் சொன்னதும் அதே புஷ்பாங்கியாயிருக்குமா! அப்படி யிருந்தால், அந்தப் பெண்பிள்ளை ஏற்கனவே பொய்க்கடிதம் எழுதி ஜட்ஜிக்கு அனுப்பியிருப்பாளா, அவளுடைய ஆள்கள் அவரை அங்கேகொண்டுபோய் மாட்டவைத்திருப்பார்களா! ஸப்-ஜட்ஜியும், டிஸ்டிரிக் முன்சீப்பும் ஆப்த நண்பர்கள் என்பது அவளுக்குத் தெரியாமல் இருக்குமா? அப்படி இருக்க, அவள் இப்படி யெல்லாம் துரோகம் செய்திருப்பாளோ! இது பெரிய குளறலா யிருக்கிறதே!

திரு. பிள்ளை:—கந்தசாமிபிள்ளை அழைத்துக்கொண்டு வந்திருப்பது வேறே மனுஷியா யிருக்கலாம். அவர்தான் தஞ்சாவூரிலுள்ள தாசி வீடுகளை யெல்லாம் குத்தகை யெடுத்திருக்கிறாரே!

கற்பகாம்பாள்:—அவர்கள் புஷ்பாங்கிக்கு எழுதிய கடிதம் சில தினங்களுக்கு முன்புதானே எழுதப்பட்டிருக்கிறது. அவளிடம் மோகங்கொண்டிருப்பவர்போ லல்லவா எழுதியிருக்கிறார்கள். அந்த மோகம் இவ்வளவு சிக்கிரத்தில் வேறொருத்திமீது மாறியிருக்குமோ?

திரு. பிள்ளை:—தாசி லோலர்களுக்கு வியவஸ்தைகூட இருக்குமோ! கண்ட ஸ்திரீகளின்மேலெல்லாம் மோகம் கொள்வதென்றால், ஒருத்தியை விட இன்னொருத்தி அதிக அழகானவளா யிருந்தால், மந்தி கொம்புக்குக் கொம்பு தாவுவதுபோல, மோகம் இன்னொருத்திமீது மாறிப் போகிறது.

கற்பகாம்பாள்:—என் புத்தியில் வேறு மாதிரியாகப் படுகிறது. அந்த டிஸ்டிரிக்ட் முன்ஸீப், முதலில் ஸப்-ஜட்ஜியென்று சொல்லிக்கொண்டு போய், பிறகல்லவா உண்மையை வெளியிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கடிதத்தை ஸப்-ஜட்ஜி எழுதியதுபோல டிஸ்டிரிக்ட் முன்ஸீப்பே ஏன் எழுதியிருக்கலாகாது.

திரு. பிள்ளை:—அப்படியானால், கந்தசாமிபிள்ளை யோக்கியர் என்று நீ சொல்லுகிறாயா? அவருக்கு பதிலாக எல்லாவற்றையும் கோபாலசாமிபிள்ளையே செய்ததாக வைத்துக்கொண்டாலும், கந்தசாமிபிள்ளை இந்த ஊருக்கு எதற்காக வந்தார்? மன்னார்குடியார் அவருடைய விருப்பத்தின் மேல் தானே முகூர்த்தத்தை நிறுத்தியிருப்பார்கள்! முகூர்த்தத்தை நிறுத்தச் சொல்லிவிட்டாவது அவர் இந்த ஊருக்கு எதற்காக வரவேண்டும்? யாரோ ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு வந்திருப்பதாகவல்லவா ரயிலில் பேசிக்கொண்டார்கள்.

கற்பகாம்பாள்:—அதைப்பற்றி நாம் ஜோசியமாகப் பேசுவதில் என்ன உபயோகம்? இந்தப் புஷ்பாங்கியின் விஷயம் உண்மையானால், டிஸ்டிரிக்ட் முன்ஸீப் சொல்வதிலிருந்து, அவர்கள் வஞ்சிக்கப்பட்டுப் போனது உண்மையாயிருக்கும்போலல்லவா தோன்றுகிறது.

திரு. பிள்ளை:—(புன்னகை செய்து) அப்படியானால், கோபாலசாமிபிள்ளை ஜட்ஜியைச் சுடவில்லையென்று சொல்வதுபோலல்லவா இருக்கிறது. இதில் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாமல் போலீஸார் தவிக்கிறார்களாம். உனக்கு போலீஸ் சூப்பரின்டென்டென்ட் உத்தியோகம் கொடுக்கலாம்போலிருக்கிறதே. நீ விஷயத்தை மிக சீக்கிரத்தில் முடிவுகட்டிவிட்டாயே!

கற்பகாம்பாள்:—எஜமானர்தானே இந்த துரைத்தனத்தில் போலீஸ் இலாகாவுக்கு ஆதிமூலப் பெருமான். எஜமானர் மனது வைத்தால் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வேலையைக் கூட எனக்குக் கொடுக்கலாம். ஆனால் லண்டனில் இருப்ப

வர்கள் என் அபார சாமர்த்தியத்தை உணரவேண்டுமே. வேடிக்கை பண்ணுவதிருக்கட்டும். நாம் ஒரு காரியம் செய்யலாமென்று நினைக்கிறேன். நமக்கு வந்த படத்தையும், கடிதத்தையும் தஞ்சைப் போலீஸாருக்கு அனுப்பி, டிஸ்டிரிக்ட் முன்ஸீப் சொல்வதற்கும், இவைகளுக்கும் ஒற்றுமையிருப்பதால், இதைப்பற்றி விசாரணை செய்து உண்மையைக் கண்டு பிடிக்கும்படி சொன்னாலென்ன?

திரு. பிள்ளை:—போலீஸாருடைய கட்சிக்கு இவைகள் பிரதிகூலமானவை. ஆகையால், இவைகளை அவர்கள் சரியானபடி உபயோகிப்பார்களாவென்பது சந்தேகம். நாம் கோபாலசாமிபிள்ளைக்கு உதவி செய்ய வேண்டுமானால், ஒரு காரியம் செய்யலாம். இவைகளை மன்னார்குடியிலுள்ள திகம்பரசாமியாருக்கு அனுப்பி, விஷயத்தைத் தெரிவித்தால், அவர்கள் பிரயாசைப்பட்டு உண்மையைக் கண்டுபிடிக்கலாம். கோபாலசாமிபிள்ளை உண்மையில் இந்தக் கொலையில் சம்பந்தப்படாதிருந்தால், அவர் தப்பலாம்.

கற்பகாம்பாள்:—(சந்தோஷ முகமலர்ச்சியோடு) அது நல்ல முதல்தரமான யோசனை. இன்றைக்கே இவைகளை ரிஜிஸ்டர் செய்து அனுப்புங்கள். விவரமான ஒரு கடிதமும் எழுதுங்கள். நான் போய் காகிதம், பௌண்டன் பேனா எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வரட்டுமா?

திரு. பிள்ளை:—(சிறிது காலம் யோசனை செய்து) சரி; கொண்டுவா—என்றார்.

அவ்வாறு அவர்கள் பேசியதைக் கேட்ட மோகனாம்பாள் கதவை விட்டு சிறிது தூரம் அப்பால் சென்று, அங்கிருந்த ஒரு மூலையில்போய் மறைந்துகொண்டாள். அடுத்த நிமிஷம் கற்பகாம்பாள் கதவைத் திறந்துகொண்டு, விரைவாகக் கீழே இறங்கி முன் ஹாலை அடைந்து, காகிதம் முதலியவற்றை எடுத்தவள், திருநடன வைபவம்பிள்ளை விலாசத்திற்கு எழுதப்பட்டிருந்த ஒரு கடிதம் மேஜையின்மீது வைக்கப் பட்டிருந்ததைக் கண்டு, அதையும் எடுத்துக் கொண்டு, ஓடோடியும் வந்து படுக்கையறையையடைந்து,

கதவை முன்போல மூடித் தாளிட்டுக்கொண்டு புருஷரிடம் போய்ச் சேர்ந்தாள்.

மறைவில் நின்றுகொண்டிருந்த மோகனாம்பாள் மறுபடியும் முன்னிருந்த இடத்திற்கு வந்து ஓசையின்றி நின்றாள். அப்போது கற்பகாம்பாள், "எஜமானருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறிக் கடிதத்தை முதலில் நீட்டினாள்.

திருநடன வைபவம்பிள்ளை, "நீயே பிரித்துப்படியேன். சொந்தக் கடிதம்போ லிருக்கிறதே!" என்றார்.

உடனே கற்பகாம்பாள் கடிதத்தைப் பிரித்துப்படிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

ஏற்கனவே உங்களுக்கு அனுப்பப்பட்ட படத்திலிருந்தும் கடிதத்திலிருந்தும் நீங்கள் இரகஸியங்களைத் தெரிந்துகொண்டிருக்கலாம். கந்தசாமிபிள்ளை இப்போது சென்னையில் மிக உல்லாஸமாய்ப் பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கிறார்.

இன்று மாலையில் நீங்கள், மவுண்டு ரோட்டிலுள்ள எல்பின்ஸ்டன் பயாஸ்கோப்பிற்கு வந்து, மேன்மாடியிலுள்ள ஸோபாக்களொன்றில் உட்கார்ந்திருந்தால், நீங்கள் கந்தசாமி பிள்ளையைக் காணலாம். அவர் என்ன நிலைமையில் இருக்கிறார் என்பதை உங்கள் கண்களாலேயே கண்டு ஆநந்திக்கலாம்.

மற்ற புதுமையை அப்போதைக்கப்போது தங்களுக்கு எழுதித் தெரிவிக்கத் தீர்மானித்திருக்கும்.

தங்கள் ஊழியன்,

நாரதருக்கு அண்ணனுக்குத் தம்பி.

—என்று கற்பகாம்பாள் படித்ததைக் கேட்ட திருநடன வைபவம்பிள்ளை தமது சிரிப்பை அடக்கமாட்டாமல் 'கலக்'கென்று நகைத்தார்.

அதே நிலைமையை அடைந்த கற்பகாம்பாள் தன்னை அடக்கிக்கொண்டு, "தேவலோகத்து நாரதர் கூட இந்த துரைத்தனத்துப் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ஓர் ஊழியர்போ லிருக்கிறதே! இந்த மாதிரி நமக்கு அடிக்கடி இவைகளையெல்லாம் அனுப்புகிற ஆசாமி இன்னான் என்பது தெரியவில்லையே! இவன் ஒரு வேளை மன்னார்குடியாருக்கு விரோதியா யிருப்பானோ!" என்றாள்.

திரு. பிள்ளை:—இவன் யாராயிருந்தால் நமக்கென்ன! நமக்குப் பரம உபகாரியாய் வந்து வாய்த்திருக்கிறான். இவன் அனுப்பிய படமும், கடிதமும் பொய்யானவை யல்லவென்பது நிச்சயமாய்விட்டது. அதேபோல, இந்தக் கடிதத்தின் விஷயமும் உண்மையா யிருக்கும். தடையே இல்லை.

கற்பகாம்பாள்:—அப்படியானால், எஜமானர் இன்றையச் சாயங்காலம் ஸினிமாவுக்குப் போக உத்தேசம்போ லிருக்கிறதா?

திரு. பிள்ளை:—போவதுதான் நல்லது. தெரிந்துகொள்ளக்கூடிய தகவல்களையெல்லாம் தெரிந்துகொண்டால் நம் மனதிற்கு திருப்தி ஏற்படும். நீயும் வருகிறாயா? நாம் இருவரும் போய் மறைவில் இருந்து, என்ன நடக்கப்போகிறதென்பதைப் பார்ப்போமே. நான் கவனிக்காமல் விடுவதை ஒரு வேளை நீ கவனிப்பாய்.

கற்பகாம்பாள்:—அப்படியானால், மன்னார்குடி ஸ்வாமியாருக்குப் படம் முதலியவைகளை அனுப்புவதை நாளைக்கு வைத்துக்கொள்ளலாமே. இந்தக் கடிதத்தையும் அவர்களுக்கு அனுப்பலாம். ஸினிமாக் கட்டிடத்தில் நமக்கு ஏதாவது புதிய சங்கதி தெரிந்தால், அதையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தலாம்.

திரு. பிள்ளை:-அதுவும் நல்ல யோசனைதான். நாளைக்கே எழுதுவோம். என் சட்டைப்பையில், படமும் கடிதமும் இருக்கின்றன. இதையும் அதில் வை.

கற்பகாம்பாள்:—(சுவரில் கொக்கியில் மாட்டப்பட்டிருந்த சட்டைப்பைக்குள் கடிதத்தை வைத்துவிட்டுத்

திரும்பி வந்து) சரி; எஜமானருக்கு இரண்டு இரவுகளில் சரியான தூக்கம் ஏற்பட்டிருக்காது. கொஞ்சம் தூங்குவது நல்லது. நான் சாயங்காலம் போவதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன்—என்றாள்.

பிள்ளையவர்கள் அதை ஆமோதிக்க, கற்பகாம்பாள் கதவைத் திறந்து மறுபடி மூடி வைத்துவிட்டுக் கீழே இறங்கிப் போய்விட்டாள். அதற்குமுன் வரையில் கதவிற்கப்பால் நின்று விஷயங்களையெல்லாம் தெரிந்துகொண்ட மோகனாப்பாள் தனது தாய் வரப்போகிறாள் என்று யூகித்துக் கொண்டு, விரைவாகக் கீழே இறங்கி வேறு வழியாக சமயலறைக்குப் போய்விட்டாள்.

சிறிது காலத்திற்கெல்லாம் திருநடன வைபவம் பிள்ளை நித்திரையில் ஆழ்ந்துபோனார். அதுவரையில் கீழே இருந்த கற்பகாம்பாள் சுமார் நான்கு மணி சமயத்தில் அழைப்பு மணியோசையைக் கேட்டுத் தனது புருஷர் விழித்துக் கொண்டதாக உணர்ந்து அவருக்குத் தேவையான சிற்றுண்டி முதலியவற்றை ஒரு வேலைக்காரியை எடுத்துவரச் செய்து, தானும் அவருடன் சயன அறைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

வழக்கப்படி வேலைக்காரி சிற்றுண்டி முதலியவைகளை வைத்துவிட்டுக் கீழே போய்விடவே, கம்பகாம்பாள் தனது புருஷருக்குத் தேவையானவற்றைக் கொடுத்து உபசரித்து உண்பித்தபடியே, "இன்றையதினம் எல்பின்ஸ்டன் பயாஸ்கோப்பில் கிருஷ்ண லீலையாம். நாம் மாத்திரமா போகிறது? குழந்தைகளை அழைத்துக்கொண்டு போனால் என்ன?" என்றாள்.

திரு. பிள்ளை:— அவர்களுக்குக் கந்தசாமி பிள்ளையின் அடையாளம் தெரியாது. அதுவுமல்லாமல், நாம் இப்போது அவரைப் பார்க்கும் கருத்துடனேயே முக்கியமாய்ப் போகிறோம் என்பதும் தெரியாது. நாம் பயாஸ்கோப்புக்குப் போகிறோம் என்று நீ அவர்களிடம் சொன்னாயா?

கற்பகாம்பாள் :—எஜமானருடைய உத்தரவில்லாமல் நான் சொல்லுவேனா? அவர்களை அழைத்துக்கொண்டு போகாவிட்டால், நாம் அங்கே போகிறோமென்பதை மறைத்து, வேறு எங்கேயோ காரியமாய்ப் போகிறோமென்று பொய் சொல்லவேண்டும். அதற்காகத்தான் எஜமானருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளலாமென்று கேட்டேன்.

திரு. பிள்ளை :—அவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க ராணியால் முடியுமா? இன்னும் பழைய நிலைமை சரியாகத் திரும்பவில்லையே!

கற்பகாம்பாள்:-அழைத்துக்கொண்டு போகலாமானால், நான் போய் சொல்லுகிறேன். ராணி வர இஷ்டப்பட்டால் அழைத்துக்கொண்டு போகலாம்.

திரு. பிள்ளை :—சரி; அப்படியே செய். எல்லாவற்றிற்கும், ஆட்டம் ஆரம்பித்ததற்கு அரை மணி காலத்திற்குப் பிறகு நாம் போகலாம்—என்றார்.

அதன் பிரகு அவருடைய சிற்றுண்டி போஜனம் கால் மணி நேரத்தில் முடிவடைய, அவர் தமது ஆடைகளையணிந்துகொண்டு கீழே இறங்கி, முன் பக்கத்து ஹாலையடைந்து, சர்க்கார் சம்பந்தமான சில காகிதங்களைப் படித்து, உத்தரவுகள் பிறப்பிப்பதை கவனித்துக்கொண்டிருந்தார்.

மாலையில் சரியாக ஆறரை மணிக்கு அவர்களுடைய மோட்டார் வண்டி ஆயத்தமாக வந்து பின்புறத்தில் போய் நிற்க, கற்பகாம்பாளும், புதல்வியர் இருவரும் வந்து அதில் ஏறிக்கொண்டனர். அங்கிருந்து வண்டி முன் பக்கத்திற்கு வர, திருநடன வைபவம் பிள்ளையும் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

ஆறேமுக்கால் மணிக்கு அவர்கள் எல்பின்ஸ்டன் பயாஸ்கோப் கட்டிடத்தின் முன்னால் வந்திறங்க, பிள்ளையவர்கள் வண்டியோட்டியிடம் பணம் கொடுத்து, நான்கு டிக்-

கெட்டுகளை வரவழைத்து வைத்துக்கொண்டு, மூன்று ஸ்திரீகளுடன் உள்ளே சென்றார்.

அங்கு ஆறரை மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது. ஜனங்கள் எல்லோரும் ஏற்கனவே போய் ஆசனங்களில் உட்கார்ந்துவிட்டனராதலால், அவர்கள் மாத்திரமே அப்போது உள்ளே சென்றனர். ஸோபாக்கள் மாத்திரம் மேன்மாடத்தில் இருப்பதும், மற்ற நாற்காலிகள் பெஞ்சுகள் முதலியவை கீழ்ப்பாகத்தில் இருப்பதும் வழக்கம். மேன்மாடத்திற்கு ஏறிப்போக பிரத்தியேகமான வழி அமைக்கப் பட்டிருந்தது. கீழ்ப்பாகத்தில் இருந்தவர்களுடைய திருஷ்டியில் படாதபடி, எல்லோரும் மேலே போகவேண்டும்.

அவ்வாறு பிள்ளையவர்களும் மூன்று ஸ்திரீகளும் மேலே ஏறிச்சென்றனர். அங்கு சுமார் பத்து ஸோபாக்கள் போடப்பட்டிருந்தனவானாலும், சுமார் ஐந்தாறு கனவான்களே திக்கானுக்கொருவராய் உட்கார்ந்திருந்தனர். ஒன்றன்பின் ஒன்றாகப் போடப்பட்டிருந்த இரண்டு ஸோபாக்கள் காலியா யிருக்கக் கண்டு, பிள்ளையவர்கள் அங்கே போய், முன்னாலிருந்த ஸோபாவில் உட்கார்ந்து, கற்பகாம்பாளும் தமக்கு பக்கத்தில்வந்து உட்கார்ந்து கொள்ளும்படி சைகை செய்ய, அவள் புதல்விய ரிருவரையும் பின் பக்கத்து ஸோபாவில் உட்காரவைத்துவிட்டு வந்து அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

முன் பக்கத்து ஸோபாவை விட, பின் பக்கத்து ஸோபா, வேண்டுமென்றே, உயரமானதா யமைக்கப் பட்டிருந்ததாகையால், முன் பக்கத்தில் இருந்தவரால் மறைவு ஏற்படவில்லை.

ஸோபாவில் உட்கார்ந்துகொண்டவுடன் பிள்ளையவர்களும் கற்பகாம்பாளும் கீழே நோக்கினர். படங்கள் காட்டப்பட்ட திரை ஒரு பக்கத்தில் நன்றாகத்தெரிந்தது. ஜனங்கள் நாற்காலிகளிலும், பெஞ்சுகளிலும் உட்கார்ந்திருந்தது

இன்னொரு பக்கத்தில் நன்றாகத் தெரிந்தது. பெஞ்சுகளில் உட்காரும் ஸ்திரீகளுக்காக பிரத்தியேக இடங்கள் இருந்தனவானாலும், நாற்காலிகள் போடப்பட்டிருந்த இடத்தில் மாத்திரம் புதுநாகரிக ஸ்திரீகள் சிலர் தம் தம் புருஷருக்குப் பக்கத்தில், அதாவது, மற்ற புருஷருக்கிடையில் உட்கார்ந்திருந்தனர்.

தமது புதல்விகள் சம்சயிக்காதபடி, புருஷரும் மனைவியும், கீழே நாற்காலிகளில் இருந்த ஜனங்களின்மீது தமது திருஷ்டியைச்செலுத்தி, கவனிக்கத்தொடங்கினர். கற்பகாம்பாள் கந்தசாமியைப் பார்த்தவளன்று. பிள்ளையவர்களே அவரைப்பார்த்திருந்தவர். ஆகவே அவரே மனிதர்களை ஆராய்ந்தார். அடுத்த நிமிஷம் அவரது முகம் ஊக்கங்கொண்டது. அவர்கள் எதிர்பார்த்த மனிதர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்கவே, பிள்ளையவர்கள் மெதுவாக நகர்ந்து கற்பகாம்பாளுக்குப் பக்கயாக வந்து நெருங்கி உட்கார்ந்துகொண்டார். தாம்பேசுவதும், சைகைசெய்துகொள்வதும் பின்னாலிருந்த குமாரத்திகளுக்குத் தெரிதல் கூடாதென்னும் கருத்துடன், அவர்கள் இருவருக்கும் நடுவில் இடைவெளியில்லாதபடி பிள்ளையவர்கள் நெருங்கி உட்கார்ந்து, தமது வாயைக் கற்பகாம்பாளுடைய செவிப்பக்கமே வைத்து, "அதோ மூன்றாவது வரிசையில் வடக்குப் பக்கத்தில் இருந்து ஆறாவது நாற்காலியில் இருக்கிறாரே அவர்தான் கந்தசாமிபிள்ளை" என்றார்.

கற்பகாம்பாள் வியப்பும் ஆவலும் அடைந்தவளாய், அவரால் குறிக்கப்பட்ட நாற்காலியைக் கணக்கிட்டு, அதிலிருந்த யௌவன சுந்தரரான கந்தசாமியைப் பார்த்து, அவருடைய ஒப்பற்ற வடிவழகைக் கண்டு அப்படியே பிரமித்துப்போய், அழகுத்திரளாயிருந்த அந்த வடிவத்தால் கவரப்பட்டுப்போனாள்.

அப்போது பிள்ளையவர்கள் எதையோ கண்டு திடுக்கிட்டவராய்த் தமது சட்டைப் பைக்குள்ளிருந்த புஷ்பாங்கியின் புகைப்படத்தை மெதுவாய் வெளியில் எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "இதோ இந்தப் படத்தைப்

பார்" என்று தணிவாகக் கூற, கற்பகாம்பாள் அதிலிருந்த வடிவத்தைப் பார்த்தாள். உடனே பிள்ளையவர்கள், "கந்தசாமிக்குப் பின்புறத்தில் உள்ள நாற்காலியில் உட்கார்ந்திருப்பது யாரென்று பார்" என்றார்.

அதைக் கேட்ட கற்பகாம்பாள் அப்படியே பார்த்து திடுக்கிட்டு முகமாறுதலடைந்து, படத்தையும், நாற்காலியிலிருந்த வடிவத்தையும் மாறி மாறி இரண்டு மூன்று தடவைகள் உற்றுப்பார்த்து, "ஆம், ஆம், இதே ஆசாமி தான் உட்கார்ந்திருக்கிறாள்; முன் பக்கத்தில் சாய்ந்துகொண்டு அவரிடம் ஏதோ சொல்லுகிறவள்போல் காணப்படுகிறாளே! இப்புறம் அப்புறம் இருப்பவர்களும், அவரிடம் ஏதோ பேசுகிறார்களே. சரி; சந்தேகமே இல்லை; அந்தப் பெண் புஷ்பாங்கிதான்; நிச்சயம்' என்றாள்.

பிள்ளையவர்கள் அதற்குமேல் தாம் என்ன செய்வதென்பதை நிச்சயிக்கமாட்டாமல் ஸ்தம்பித்துப்போய் சுமார் பத்து நிமிஷகாலம் மௌனமாயிருக்க, கற்பகாம்பாள், "அவர்கள் ஸப்-ஜட்ஜிதான் என்பது நிச்சயந்தானா?" என்றாள்.

பிள்ளையவர்கள், "அதைப்பற்றி உனக்குக் கொஞ்சமும் சந்தேகமே வேண்டாம். அதை நன்றாக நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமானால், நாம் இடைவேளை வரையில் இருப்போம். அப்போது சிலர் எழுந்து வெளியில் போய் வருவார்கள். நான் போய் அவருடன் பேசி, அவர் அந்த மனிதர்தானா என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்றார்.

"சரி; அப்படியே செய்யலாம்" என்றாள் கற்பகாம்பாள்.

அப்போது மோகனாம்பாள் சம்சயத்திற்கு இடங்கொடாமல் தனது முகத்தை முன்னால் கொணர்ந்து வைத்துக்கொண்டு, அவர்கள் பேசியதையெல்லாம் தெரிந்துகொண்டு, அவர்கள் பார்த்த மனிதர்களையும் பார்த்தாளாதலால், கந்தசாமியையும், புஷ்பாங்கியையும் மாறி மாறி நோக்கியபடி அப்படியே பிரமித்து வியப்பே வடிவாக உட்கார்ந்திருந்தாள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
199431
சென்னை 600 008

சமய விளக்கம்